இளைப்பாறிய அதிபர்

இணுவையூர்

# சோதி

அவர்களின்

நூல் நிலையங்களின் பாவனைக்கு



# பாராட்டு விழா மலர்

1993

University of Jaffna
373
COT
249999(AR; Main)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் நிலையங்களின் பாவனைக்கு

யா/ இணுவில் மத்திய கல்லூரி

இளைப்பாறிய அதிபர்

373
COT
AR
2007

# திரு. செ. சோதிப்பெருமாள் ஜே. பி.

அவர்களின்

# பாராட்டு விழா மலர்

UNIVERSITY OF JAFFNA. LIBRARY

மலர்க் குழு:

கலாநிதி சபா. ஜெயராசா
திரு. சு சண்முககுமார்
திரு. வி. பரஞ்சோதி
திரு. செ. இலகுநாதன்
திரு. த. நகுலேஸ்வரன்

UNIVERSITY OF JAFFNA Library SRI LANKA

ARCHIVES

1993 - 10 - 06

249999
249999
University of Jaffna
249999
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு: இணுவில் மக்கள் சார்பில்
மலர்க் குழு

தொடர்பு : சு. சண்முககுமார்
" அருள் பதி "
இணுவில் மேற்கு,
இணுவில்.

பிரதிகள் : 525

அச்சுப் பதிவு: பாரதி பதிப்பகம் ( A. B. Printers )
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் நிலையங்களின் பாவனைக்கு





UNIVERSITY OF JAFFNA
Library
SRI LANKA

ARCHIVES

# இணுவில் அரசோலை விநாயகன் துதி

கரமாடும் தும்பிக்கை பூரணஞ் சேர்
    கன்னல் தமிழ் மோதகத்தை மாந்தும் ஐயன்
அரசோலைத் தலத்தினிலே எழுந்த ருளும்
    ஆனைமுகன் பதம்போற்றும் அண்ண லான
உரமேவு நெஞ்சகத்தான் உயர்ந்த சேவை
    ஒப்பரிய தொண்டன்சோ திப்பெருமாள்
புரமேவு இணுவைதனில் விழாவெ டுப்பப்
    பூரணனாம் வாரணனும் காப்ப தாமே.

யாழ்ப்பாணம், இணுவையூர்
" கவிமாமணி "
பிரமஸ்ரீ. ந வீரமணி ஐயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



## மலர் சமர்ப்பணம்

பதுமலர் மீதினிலே மலர்ந்த ஐயன்
பார்வதியும் அரவணைத்த பாலன் கந்தன்
மதுமலரின் பொழில் சூழும் இணுவை தன்னில்
மாண்புமிகு கலை கல்விச்சேவை செய்தான்
புதுமைமிகு சிந்தனையின் செயலின் வீரன்
புனிதசோ திப்பெருமாள் விழா வதனின்
புதுமலரைப் பூந்தமிழின் இணுவைக் கந்தன்
பூம்பாத மலர்மிசையில் அர்ப்பணிப்போம்.

யாழ்ப்பாணம், இணுவையூர்
" கவிமாமணி "
**பிரம்மஸ்ரீ. ந வீரமணி ஐயர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணகிரிநாதர் திருப்புகழ்

கனகசபை மேவு மெனதுகுரு நாத
கருணைமுரு கேசப் பெருமாள்காண்
கனகநிற வேத னபய மிட மோது
கரகமல சோதிப் பெருமாள்காண்
வினவுமடி யாரை மருவிவிளை யாடு
விரகுரச மோகப் பெருமாள்காண்
விதிமுனிவர் தேவ ரருணகிரி நாதர்
விமலசர சோதிப் பெருமாள்காண்
சனகிமண வாளன் மருகனென வேத
சதமகிழ்கு மாரப் பெருமாள்காண்
சரணசிவ காமி யிரணகுல காரி
தருமுருக நாமப் பெருமாள்காண்

(சிதம்பரம் – 617 ஆம் பாடல்)

கருப்பற் றூறிப் பிறவாதே
கனக்கப் பாடுற் றுழலாதே
திருப்பொற் பாதத் தநுபூதி
சிறக்கப் பாதத் தருள்வாயே
பரப்பற் றாருக் குரியோனே
பரத்தப் பாலுக் கணியோனே
திருக்கைச் சேவற் கொடியோனே
செகத்திற் சோதிப் பெருமாளே

(பொதுப்பாடல் - 1083)

நீருநில மண்டாத தாமரைப டர்ந்தோடி
நீளமக லஞ்சோதி வடிவான
நேசமல ரும்பூவை மாதின்மண மும்போல
நேர்மருவி யுண்காத லுடன்மேவிச்
சூரியனு டன்சோம னீழ்லிவை யண்டாத
சோதிமரு வும்பூமி யவையூடே
தோகைமயி லின்பாக னாமெனம கிழ்ந்தாட
சோதிஅயி லுந்தாரு மருள்வாயே
வாரியகி லங்கூச ஆயிரப ணஞ்சேடன்
வாய்விடவொ டெண்பாலு முடுபோல
வார்மணியு திர்ந்தோட வேகவினி றைந்தாட
மாமயில்வி டுஞ்சேவல் கொடியோனே
ஆரியன வன்தாதை தேடியின மும்பாடு
மாடலரு ணஞ்சோதி யருள்பாலா
ஆனைமுக வன்தேடி யோடியெய ணங்காத
லாசைமரு வுஞ்சோதி பெருமாளே

(பொதுப்பாடல் - 1222)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழாக்குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| தலைவர் | கலாநிதி சபா. ஜெயராசா |
| செயலாளர்: | திரு. செ. இலகுநாதன் |
| பொருளாளர்: | திரு. சு. சண்முககுமார் |
| உறுப்பினர்கள்: | திரு. வி. பரஞ்சோதி |
| | திரு. த. நகுலேஸ்வரன் |
| | திரு. த. கைலாசநாதன் |
| | திரு. சி. கருணாமூர்த்தி |
| | திரு. க. சண்முகநாதன் |
| | திரு. சி. சிவசோதிநாதன் |
| | செல்வி. சொ. வாசுகி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைப்பாறிய அதிபர்



திரு. சே. சோதிப்பெருமாள், ஜே. பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

" கண்ணிரண்டே " யாவர்க்கும். கற்றோருக்கு மூன்று விழி என்பார்கள். கல்விஅறிவு உடைய ஒருவர் மூன்றாவது விழியை உடையவராகின்றார். மூன்றாவது விழி. கல்விவிழி. கல்வி அறிவினையூட்டி சமுதாயத்தினை வளர்ச்சியடையச் செய்யும் பாரிய பொறுப்பு ஆசிரியர்களிலேயே தங்கியுள்ளது. எனவேதான் எழுத்தறிவித்தவன் இறைவனாவன் " என்ற பெருமையைப் பெறுகின்றவர் ஆசிரியர். ஐங்குரவர்களில் அரசனுக்கு அடுத்தபடியில் எண்ணப்படுகின்றவர் ஆசிரியர். இதில் இருந்து ஆசிரியருக்குச் சமுதாயத்தில் இருக்கின்ற சிறப்பினையும், அவருக்கான சேவையின் மகத்துவத்தையும் உய்த்துணர முடிகின்றது. ஆசிரியர்கள் என்றென்றும் பாராட்டுக்குரியவர்கள்.

இந்த நாட்டின் கல்வி அபிவிருத்திக்காகவும் சமுதாய வளர்ச்சிக்காகவும் உழைத்த ஆசிரியப் பெருந்தகைகளுள் ஒருவரே சமாதான நீதிபதி செல்லத்துரை சோதிப்பெருமாள் அவர்கள். அவரது தொண்டு எங்கள் கிராமமாகிய இணுவிலுக்கு மட்டும் அடங்கியதன்று. நாடளாவிய வகையில் இவரது தொண்டு பரவியிருந்தது.

விளையும் பயிரை முளையிலே தெரியும் என்றவாறு இளமைக்காலத்தில் மாணவராக இருந்தபோதே முதன் மாணவராகத் திகழ்ந்தார். பிரசித்திவாய்ந்த திருநெல்வேலி சைவாசிரியகலாசாலையில் மௌன தவமுனிவரான உபஅதிபர் ஸ்ரீ. பொ. கைலாசபதி இலக்கிய கலாநிதி பண்டிதமணி பேராசிரியர் ( திரு. ) சி. கணபதிப்பிள்ளை ஆகியோரிடம் பயிற்சி பெற்று நல்லாசிரியராக பிரகாசித்ததார். அதிபர் என்ற தரத்திற்கு உயர்த்தப்பட்டார். முப்பத்து நான்கு வருடங்களுக்கு மேலாக ஆசிரியா உலகில் ஒளிவீசிய இவரது தலைமைத்துவத்தைப் பெற்ற ஆசிரிய சபைகள், சங்கங்கள், மூலம் ஆசிரியர்கள் பலவகையான உரிமைகளையும் பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. இணுவில் மத்திய கல்லூரியின் தோற்றம் இவரது கல்விச் சேவையின் மணிமுடியாகும்.

இணுவிற் கிராமத்திற்கும், ஏனைய கிராமங்களுக்கும் திரு. சோதிப்பெருமாள் அவர்கள் ஆற்றிய பணிகளோ அநேகமானவை, அவர்கள் சேவையில் இருந்து ஓய்வு பெற்ற பொழுதிலும் பொதுசேவையில் ஈடுபட்டு உழைத்துக் கொண்டே இருக்கின்றார்கள்.

இத்துணைச் சிறப்புவாய்ந்த ஒருவரின் சேவை பாராட்டுக்குரியது. பாராட்டிக் கௌரவிக்க வேண்டியது எங்கள் தலையாய கடமையாகும்.

இளைப்பாறிய அதிபர் திரு செ. சோதிப்பெருமாள் அவர்களைப் பரராட்டிக் கௌரவிக்கும் நோக்கமாக நிறுவப்பெற்ற பாராட்டுவிழாசபை அன்னவரின் புகழை என்றும் எடுத்தியம்பத்தக்க வகையில் அழகியதொரு மலரை வெளியிடுகின்றது.

பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், கல்விமான்கள் ஆசியுரைகள், பாராட்டுரைகள், கவிதைகள், கட்டுரைகளைத் தந்து மலரினை நறுமணம் வீசச் செய்திருக்கின்றார்கள்,

மலரை வெளியிடுவதுடன் சிறந்த முறையில் பாராட்டு விழாவினை நடத்துவதற்கு உதவியவர்களுக்கும் பல்வேறு வழிகளில் அயராது உழைத்த பாராட்டு விழாச் சபையினருக்கும் மனமார்ந்த நன்றியினைச் செலுத்துகின்றோம்.

இணுவில்.
*1993 - 10 - 06*

**மலர்க்குழுவினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. ஆசியுரைகள்

"சிவாகமஞானபாஸ்கரன்" பிரமஸ்ரீ. தா. மகாதேவாக்குருக்கள்

உயர்திரு. இரா. சுந்தரலிங்கம் கல்விப் பணிப்பாளர், வடமாநிலம்

சிவத்தமிழ்ச்செல்வி, துர்க்காதுரந்தரி செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி

முதறிஞர், பண்டிதர், வித்துவான், திரு க. சபா. ஆனந்தர்.

02. பாராட்டுரைகள்

திரு. ச. தனஞ்செயன், இளைப்பாறிய பிரதிக் கல்விப்பணிப்பாளர்.

திரு.சி. வேலாயுதம், யாழ். கல்விக்கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர்

திரு. து. வைத்திலிங்கம், மாவட்ட பிரதி ஆணையாளர், யாழ்ப்பாணம்

திரு. சு. இரத்தினராசா, உடுவில் கல்விக்கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர்

திரு. அ. பஞ்சலிங்கம், அதிபர், யாழ். இந்துக்கல்லூரி

வைத்திய கலாநிதி (திரு) இ. தெய்வேந்திரன்.
வைத்திய அதிகாரி, யாழ். மாநகரசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. பாராட்டுக்கவிதை

"இணுவையூர், பிரமஸ்ரீ. ந. வீரமணிஐயர்

" இணுவில் ஈசன் உவக்கும் திருவாரூர் "
சைவப்புலவர் (திரு) சு. செல்லத்துரை.

04. கட்டுரைகள்

1) "கிராமியக் கல்விச் செயல்முறையும்,
திரு. செ. சோதிப்பெருமளது வாண்மைப் பணிகளும்"
கலாநிதி சபா. ஜெயராசா

2) " எமது கல்வி " – பேராசிரியர் வ. ஆறுமுகம்

3) "அகநானூறு தரும் சமயச் செய்திகள்"
பேராசிரியர் அ. சண்முகதாஸ்.

4) "இணுவில் காரைக்கால் சிவன்கோவில்
விஸ்வநாதேஸ்வரர் ஈழத்து பஞ்சதள
லிங்கேஜவர மூர்த்திகளுள் ஒன்று"
முதுநிலை விரிவுரையாளர், செ. கிருஷ்ணராஜா.

5) " சங்கத்தமிழ் இலக்கியம் சுட்டும் மிடற்றுக் கருவி ( குரல்)
இசை விரிவுரையாளர் தி(ரு) நா. வி. மு. நவரத்தினம்

6) "சத்தியம் - சிவம் - சுந்தரம்" அல்லது "சரணகமலாலயம்"
(நாட்டிய நாடகம்)
கவிமாமணி பிரமஸ்ரீ. ந. வீரமணிஐயர்

7) "சமூகமயப்படுத்தல் – ஒரு நோக்கு"
விரிவுரையாளர் திருநாவுக்கரசு கமலநாதன்

8) " இசையின்பம் " – சங்கீதபூஷணம் திரு. சு. கணபதிப்பிள்ளை
உதவிக் கல்விப்பணிப்பாளர்

9) " கல்வி வளர்ச்சியில் ஆரம்ப ஆசிரியர்களின் பங்கு "
திருமதி வி. முருகையா – ஆசிரிய ஆலோசகர் – யாழ். மாவட்டம்

05. விழாச் செயலாளர் பேனாவிலிருந்து

06. சேவை விபரம்

07. கவிதை – சோதி பெரும் ஆள் !
கவிஞர் சோ. பத்மநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில் தர்மசாஸ்தா குருகுலம்

அதிபர்

**"சிவாகமஞானபாஸ்கரன்" தா. மகாதேவக் குருக்கள்**

அவர்களின்

# ஆசீர்வாதம்

இளைப்பாறிய அதிபர் திரு. செ. சோதிப்பெருமாள் அவர்கட்கு சேவை நலம் பாராட்டு நடைபெற இருப்பதை கேள்வியுற்று மிக மகிழ்ச்சியடைகிறேன். ஆசிரியராக, அதிபராக, சமூகசேவையாளராக சிறந்த சேவையை மக்களுக்கும், மாணவர்கட்கும் அளித்து வந்த அதிபர் அவர்கள் எல்லோராலும் பாராட்டிற்கு உரியவராவர். எத்தனையோ சிறப்பான குணங்கள் அவரிடம் இருந்தாலும், தருமத்தின்படி தன் கடமையைச் செய்யும் குணம் அவரிடம் மேலோங்கி இருந்தது.

"தர்மே, ஸ்வய மனுஷ்டானம்
கஸ்யசித்து, மஹாத் மனம்
பரோபதேச பாண்டித்தியம்.
சர்வேஷாம் சுகரம் "நிருணாம்."

மற்றவருக்கு உபதேசம் செய்வதில் இருக்கும் அதே அக்கறையை தான் அனுஷ்டித்து காட்டும் குணம் அவரிடம் உள்ள சிறப்பு அம்சம்.

"சலதி ஏகேன பாதேன.
திஷ்டதி ஏகேன பாதேன புத்திமான்"

புத்தியுள்ள அறிஞர்கள் ஒரு காலால் நின்று கொண்டு மற்றக்காலால் நடப்பார்கள். இந்த வாக்கியத்தின்படி அதிபர் அவர்களும் ஒரே நோக்கில் பாடசாலை அதிபராகவும், அதே நேரத்தில் சமூக சேவையாளராகவும் தனது காலத்தை கழித்திருக்கிறார். தர்ம சிந்தனையுடன் பல ஆலயங்களில் வருடா வருடம் பூஜா கைங்கர்யங்களும் நடாத்தி வருகிறார்.

அதிபர் அவர்கட்கு நடைபெறும் இப்பாராட்டு விழா எம் குடும்பத்தில் எம்மில் ஒருவருக்கு நடைபெறும் விழாவாக எண்ணி மகிழ்வோமாக.

அந்தண குருமார் சார்பில் எனது பிரியமான ஆசிர்வாதத்தை உள்ளன்புடன் அளிக்கின்றேன்.

" சிவாகமஞானபாஸ்கரன் "
**தா. மகாதேவக் குருக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வடமாநிலக் கல்விப் பணிப்பாளர்*

**உயர்திரு இரா. சுந்தரலிங்கம் அவர்களின்**

# ஆசியுரை

இணுவையம்பதி கற்றவர் மலிந்த நற்றவ மண். இஃது செந்தமிழும் சிவ நெறியும் இணைந்து வளம்பெற்ற திருவிடம். இசையும் கலையும் பிணைந்து பெருமையுறும் பாக்கியம் பெற்ற மருதநிலம். இந்நிலத்தில் நல்லவர் என பல்லோர் போற்றும் சோதி தோன்றினார். இளமையில் தனது ஆரம்ப கல்வியை இணுவில் சைவமகாஜனாவில் ஆரம்பித்தார். அதே கல்விக்கூடத்தில் ஆசிரியர் பணியாற்றும் பேறும் பெற்றார். தனது அயரா உழைப்பினால் கல்விச் சமூகம் மதிக்கத்தக்க நல்லாசிரியனாய் அதிபராக உயர்ந்தார். இணுவில் மத்திய கல்லூரியின் உருவாக்கத்திற்கு ஊன்று சக்தியாகத் திகழ்ந்தார்.

வீணாகான புரத்திற்கு வெளியேயும் பணியாற்றி விழுமியங்களைத் தனதாக்கிக் கொண்டு ஆசிரியர் சங்கப் பணிக்குத் தன்னை இயை புறுத்தினார். அகில இலங்கை ரீதியில் கல்வி கலாசார செயலாளராகப் பணியாற்றினார். அகில இலங்கை ரீதியில் ஆசிரியர் சங்கம் நடாத்திய பரீட்சையின் வெற்றிக்கு திரு. சோதிப்பெருமாள் அவர்களே பிதாமகராவர். இவரது மதிநுட்பம் நிறைந்த செயற்திறன் நண்பர்களால் பெரிதும் போற்றக் கூடியதாக இருந்தது. இணுவையம்பதியின் கிழக்கில் உதித்த சோதிக்கு அருணகிரிநாதர் புரத்தில் உதித்த தண்மதியாம் சரஸ்வதியின் ஒளிவிம்பத்துடன் இணைந்து கொண்டது. இவ்வாழ்வின் பண்பும் பயனும் நிலைபெற வாழ்ந்து நன்மக்களைப் பயந்த பேராளன்.

சமூக சேவைக்கெனத் தன்னை அர்ப்பணித்த சோதிப்பெருமாள் சமூக சோதியாகச் சுடர்விட்ட காரணத்தால் சமாதான நீதிபதியென்ற பட்டத்தையும் ஏற்க வழிசமைத்தது. புன்முறுவல் பூத்த முகத்தோடு எவரையும் அரவணைத்து எக்காரியத்தையும் திறம்படச் செய்யும் விற்பன்னர். ஆசிரிய உலகு போற்றும் வகையில் சமூகப்பணியோடு இயைந்த கல்விப்பணியில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு இளைப்பாற்றுக் காலத்திலும் மண்ணின் மக்களை நேசிக்கும் பான்மையில் சுறுசுறுப்பாக சேவை புரிகின்றார். கல்வியுலகின் பணிப்பாளர் என்ற வகையில் திரு சோதிப்பெருமாளின் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை, வளர்ச்சிப்படிகளை நன்கு அவதானிக்க முடிந்தது. அன்னார் நீடு நலனே வாழ்ந்து அகமும் புறமும் சிறக்க ஊருணி நீராக வாழ்வாராக. நன்றும்தீதும் பிறர் தரவரா என்பதை உள்ளத்தில் இருத்தி மேலும் சமூகப்பணிகள் பலபுரிந்து மக்களை மகிழ்விப்பாராக.

" பெருமைக்கும் ஏனைச்சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல் " என்ற வள்ளுவன் கருத்தின் எல்லைக்கே தன்னை இட்டுச் சென்ற சோதிப்பெருமாள் நீடுநலம் பெற வளர்க, வாழ்க.

**இ. சுந்தரலிங்கம்**
வடமாநில கல்விப்பணிப்பாளர்.

கல்விப்பணிமனை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்க்கா துரந்தரி, சிவத் தமிழ்ச்செல்வி

பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்

# வாழ்த்துரை

இணுவில் வாழ் மக்களுக்குத் தன்னலங்கருதாப் பணியாற்றி எல்லோருடைய நன்மதிப்புக்கும் உரியவராக இன்று வாழ்ந்து கொண்டிருப்பவர்தான் திரு. செ. சோதிப்பெருமாள் J. P அவர்கள். சிறந்த ஒரு 'அதிபராகவும் உயர்ந்த ஒரு சமூக சேவகராகவும் நிறைந்த பக்தியாளனாகவும் பாராட்டுப் பெறுபவரே இப் பெரியாராவர். இவருடைய ஆளுமையினால் எத்தனையோ நல் நிகழ்வுகள் இணுவிலிலே நடைபெற்றமை கண்கூடு. அன்பும் அறனும் இவர் வாழ்விலே இணைந்து நின்றது. இதனால் அனைத்து மக்களிடமும் இரக்க முள்ளவராக வாழ்ந்தார். தன்னிடம் ஒப்படைத்த கல்விப்பணியை உயிராக நேசித்தார். மாணவச் செல்வங்களை வளமாக்குவதில் கண்ணுங்கருத்துமாக இருந்தார். இந்த உயர்ந்த கைங்கரியத்தை இணுவில் வாழ் மக்கள் மறந்துவிடவில்லையென்பதையே அன்னாரின் சேவை நலம் பாராட்டும் இவ்விழாமலர் எடுத்துக்காட்டுகிறது.

எனவே திருவாளர் செ. சோதிப்பெருமாள் J. P அவர்களின் சிறப்பியல்புகளை எடுத்துக்கூறி வாழ்த்துவதிலே அடியேனும் பெருமையடைகிறேன் என்று கூறி அமைகின்றேன்.

தங்கம்மா அப்பாக்குட்டி ஜே. பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில் முதறிஞர், இளைப்பாறிய அதிபர்

**பண்டிதர், வித்வான் உயர் திரு. சபா. ஆனந்தர், B. A, B. O. L.**

**அவர்களின்**

# ஆசியுரை

பேரறிஞர், பேராசான் திரு. செ. சோதிப்பெருமாள் அவர்களே எனது நன்றி கலந்த வாழ்த்துக்கள். இணுவில் சைவமகாஜன வித்தியாலயத்தில் ஆரம்ப வகுப்புகளில் என்னிடம் படித்தீர்கள். நான் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்குப் போனதால் உங்களை மேலும் வளர்க்க முடியவில்லை. எனினும் சுயமுயற்சியின் பலனாக முன்னேறி பின் ஆசிரியர் பயிற்சி பெற்று ஆசிரியரானீர்கள்.

பல பாடசாலைகளில் ஆசிரியனாகவும், அதிபராகவும் கடமையாற்றினீர்கள். இணுவில் அமெரிக்கமிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் அதிபராக பதவி ஏற்றீர்கள். அங்கேதான் உங்கள் தமிழ்த்தொண்டு, கல்வித்தொண்டு பரிணமித்தது. மானிப்பாய்த் தொகுதிப் பாரளுமன்ற உறுப்பினர் திரு. வி. தருமலிங்கம் அவர்களின் அனுசரணையுடன் அழகான விலாசமான மாடிக்கட்டிடம் அமைத்தீர்கள். முன்னர் 5ம் வகுப்பு வரை இருந்த பாடசாலையில் 6, 7, 8 ஆம் ஆண்டு (வகுப்புகள்) நடாத்தத் தொடங்கினீர்கள்.

பின்னர் இணுவிலில் கல்லூரி ஒன்று நிறுவவேண்டும் என்ற பேரார்வத்தினால் இணுவில் சைவமகாஜன மகாவித்தியாலயத்தையும், இணுவில் அமெரிக்கமிஷன் பாடசாலையையும் இணைத்து, இணுவில் மத்திய கல்லூரியாக விளங்க வைத்தீர்கள். அத்தோடு இணுவில், கோண்டாவில் பகுதியில் சமாதான நீதிவானாக (J·P.) பெரும் தொண்டாற்றி வருகின்றீர்கள். இன்னும் பல்லாண்டு காலமாக வாழ்ந்து சோதியாய், சுடராய் ஒளி விளங்கி பிரகாசத்துடன் மங்கலப் பெருமாளாய் விளங்கவேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டி பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகிறேன்.

**சபா. ஆனந்தர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதனார்மடம் - கல்விக் கோட்டம்
முன்னைநாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்
திரு ச. தனஞ்செயன் அவர்களது

# பாராட்டுரை

''என்நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்றமகர்க்கு''

இணுவையம்பதியின் சோதியாக விளங்குகின்ற சோதிப்பெருமாளின் சேவையைப் பாராட்டி விழா எடுப்பதும் மலர் வெளியிடப்படுவதும் காலம் தாழ்ந்த செயற்பாடாகினும் சாலப் பொருத்தமான செயற்பாடாகும்.

ஆகவே இம் முயற்சியில் ஈடுபடுகின்றவர்களை முதற்கண் பாராட்டி அவர்களது செயற்பாடு இனிதே நிறைவுறப் பிரார்த்திக்கின்றேன்.

திரு. சோதிப்பெருமாள் அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் தனது பாடசாலை வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்து செயல்பட்டமை யாவரும் அறிந்த உண்மையே. தன் குடும்பத்தையும் வீட்டையும் விட அவர் தனது பாடசாலையையே நேசித்தார் எனக் கூறினால் மிகையாகாது. ஒரு அதிபருக்குரிய இலட்சணங்கள் பல அவரில் காணப்பட்டது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவருடன் ஊறியிருந்தது. இவரது செயற்பாடு ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாக அமைந்தது மட்டுமல்லாமல் உற்சாகத்தையும் ஊட்டியது. ஒவ்வொரு வகுப்புக்குரிய பாடவிதானம், பாடத்திட்டம் இவையையொட்டிய செயற் திட்டம் ஆகியவற்றை நன்கறிந்திருந்தமையால் ஆசிரியருக்கு வகுப்பு வேலைகளில் வேண்டிய உதவியையும் செய்யக் கூடியதாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு எண்ணிக்கையோடு இருந்த இணுவில் அ. மி. த. க. பாடசாலையில் வருடா வருடம் மாணவரின் எண்ணிக்கை கட்டுக்கடங்காது பெருகியது. இதற்கேற்ப பாடசாலையின் பௌதீக தேவைகளைப் பலரது ஒத்துழைப்போடும் பூர்த்தி செய்து மாணவர்களை உற்சாகப்படுத்தினார். காலஞ்சென்ற பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் அவர்கள் திரு. சோதிப்பெருமாளின் செயற்பாட்டைப் பாராட்டியது மட்டுமல்லாமல் பாடசாலைக்கு வேண்டிய உதவிகளையும் மனமுவந்து செய்து கொடுத்தார். சுருக்கமாகக் கூறின் இவரது அதிபர் சேவை அதிபர்களுக்கெல்லாம் ஒரு முன்மாதிரியானது. இளைய தலைமுறை அதிபர்கள் அறிய வேண்டியது எனலாம்.

திரு. சோதிப்பெருமாள் பாடசாலையில் மட்டுமல்லாது கல்வி வட்டாரத்திலும், மாவட்டத்திலும் அளப்பரிய சேவை செய்தமை கண்கூடு. எடுத்த கருமத்தைச் சிறப்புறச் செய்து முடிக்கின்ற ஆற்றல் இவரது தனிச்சிறப்பு. கொடுக்கப்பட்ட பணியை மனங்கோணாது ஏற்றுப் பல்வேறு மட்டங்களிலும் உதவி, வட்டாரத்துக்கும், மாவட்டத்துக்கும் பெருமை தேடிக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

வட்டாரப் போட்டிகள் நிகழ்ச்சிகள் யாவும் நடத்துவதற்கு இவர் எனக்காற்றியஉதவி என்றும் பசுமையாக இருக்கும்.

பொதுச் சேவையில் இவரது பங்கு அளப்பரியது. நாடி வந்தவர்க்கெல்லாம் மனங்கோணாது உதவுகின்ற பண்பு இவரில் ஊறியிருந்தது. இதனால் இவர் சமாதான நீதிவான் பதவியையும் தழுவிக் கொண்டு மக்களின் நன்மதிப்பையும் பெற்றார்.

சமயப் பணியில் இவர் முழு நம்பிக்கை கொண்டவர் மட்டுமல்லாமல், சமய நெறியை நன்கு கடைப்பிடித்து வாழுகின்றவர். விரதங்கள் அனுஷ்டிக்கும் காலத்திலும் தனது பணிகளையும் முழுமையாக நிறைவேற்றுவது சோதியின் சிறப்பாகும்.

இவரது செயல்பாடுகளுக்கெல்லாம் மனங்கோணாது உதவிய, இவரது மனைவி, பிள்ளைகள் தம்மையும் தியாகம் செய்துள்ளார்கள்.

தன்னளவில் தனிச்சிறப்போடு செயலாற்றி, சேவையாற்றி அதன்பால் பயன் பெற்றவர்கள் என்றும் சோதியை மறக்கமாட்டார்கள். இவரது சிந்தனையும், செயற்பாடும் சுந்தருடன் இணைய இணுவில் மத்திய கல்லூரி உதய[illegible]கியது. இணுவையம்பதிக்கு வரப்பிரசாதகமாகும்.

மேலும் சோதி சுகபலத்துடன் வாழ்ந்து மக்களுக்கு சேவை செய்ய [illegible]றைவன் அருள வேண்டும் என வேண்டி எனது ஆசியை நிறைவு செய்கின்றேன்

**ச. த[illegible]நசெயன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் - கல்விக்கோட்டம்

பிரதிக் கல்விப்பணிப்பாளர்

திரு. சி. வேலாயுதம் அவர்களின்

# பாராட்டுச் செய்தி

## வெற்றித் திருமகன்

"நல்ல தோர் வீணை செய்தே
 நலங் கெடப் புழுதியில் எறிவதுண்டோ
சொல்லடி சிவசக்தி என்னைச்
 சுடர்மிகும் அறிவுடன் படைத்து விட்டாய்
வல்லமை தாராயோ இந்த
 வையகம் பயனுற வாழ்வதற்கே."

என்றவினா வரகவி பாரதியால் எழுதப்பட்டதாகும். வையகம் பயனுற வாழ்ந்த, வாழுகின்ற சால்புடையோர்களை இந்தமண் பெற்றதே பெரும் பேறெனலாம். வையத்து வாழ்வாங்கு வாழ்தலை வான் புகழ் வள்ளுவனும் வானுற வாழ்த்துதலை நாம் நன்கு அறிவோம். அந்த வகையில் இந்தமண் மரகதப்பச்சையாய் வனப்புறத்தொண்டாற்றும் நீர்மையர் ஒரு சிலரே. இணுவையம்பதியில் இளவள ஞாயிறு என எழுந்து வந்ததே ஒரு சோதி அதன் செழுமையும், செம்மையும் உய்துணர்ந்த உழுவலன்பர்க்கு உண்மைப் பொருளாகும்.

இணுவையம்பதி இசைமலிந்த புண்ணிய பூமி. கலைநிறைந்த, கற்றவர் மிகுந்த – கவின் பெறு கிராமம். இந்த மருதநிலத்தில் மானுடம் வென்றதே வினை புரி சிறப்பால் என்று சிந்திப்பார்க்கு கண்ணெதிரே விளங்குபவர் சோதிப் பெருமாள் என துணிந்து கூறலாம். அரிது என்ற பதத்தைப் பயன்படுத்த விழைந்த வண்டமிழ் மூதாட்டி ஔவை "ஞானமுங் கல்வியும் நயத்தல் அரிது" என உயர்நிலைப் படுத்தலைக் காண முடிகிறது. அந்த வகையில் கொத்தணி அதிபராய் சேவையின் உச்சிக்குத் தம்மை இட்டுச் சென்ற கல்விச் சேவையாளன் வென்று வினைபுரியும் வாண்மையினன், குன்றென நிமிர்ந்து நின்று பொன்றாப் புகழொடு கருமமாற்றும் நீர்மை நெஞ்சம் மறக்கொணாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவை போல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் – அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறவார் உறவு"

என்னும் பாடலால் உறவின் பெற்றியை ஔவை நயம்பட உரைத்ததை நாம் உணர முடியும். இந்தப் பா சித்தரிக்கும் பான்மையில் உறவு கொள்ளும் உத்தமசீலன் சோதியவர்கள், எவரையும் ஆபத்து வேளையில் விலகி வேடிக்கை பார்ப்பதோ, கரந்துறையும் கயமைத்தனமோ இல்லாத பெருந்தகையாளர், தூய வெண்ணீறு துதைந்த மேனியனாய்ச் சிவனடி மறவாச் செம்மையராய் வாழும் சோதியவர்கள் ஊருக்குகந்த உத்தமனார் என உள்ளுதோறும் உவகை கொள்ளலாம்.

மங்கலமான மனைமாட்சியொடு நன்மக்களை ஈன்றெடுத்த பெருமையும், தன்மக்களைப்போல் மண்ணின் மைந்தர்களையும் தழுவிப் பயனுற வாழப்பழகிக் கொள்ளும் பான்மையும் வியக்கத்தக்கதே. தேடு கல்வியிலாதோர் ஊரைத் தீயினுக் கிரையாக மடுத்தல் வேண்டும் என்ற சிந்தனை நெஞ்சத்து சுடர்விட்டெரியும் சோதியாய் நாம் காண வாழும் பெருந்தகை சோதிப்பெருமாள், கல்விக்கு ஆற்றிய தொண்டும், கற்றவர் நட்பும் அவர் வாழ்வின் இரு கண்களெனலாம்.

கார் சொரிய கனத்த மணி நெல் விளையும் நீர்மலியும் நீள்தரையில் நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையொடும் வாழப்பழகிக்கொண்ட கல்விப்புலப் பணியாளன் வாழும் கல்விப்புலத்தார்க்குத் தக்கதோர் எடுத்துக்காட்டாகும். எடுத்த காரியத்தை நேர்படச் செயலாற்றும் கீர்த்தியும், முன் வைத்த காலைப் பின் வைத்தறியாப் பெற்றியும், இடரினும் தளரினும் இலக்கு வழுவாது செயலாற்றும் பான்மையும் கொண்ட நேசத்திற்காக கொள்கை தவறாது உழைத்தலும் இவர்தம் பெருமைகளாகும்.

இணுவையம்பதியில் சனித்த மத்திய கல்லூரி மதலை, சோதியின் ஆளுமைக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். மேலான கைதூக்கலை கல்விப்பேராளன் கடமையும், கண்ணியமும், சிவநெறிச் சீர்த்தியும் உடைய இரா. சுந்தரலிங்கனார் அருளிய தென்பதை நன்றியுள்ளங்கள் மறவா. மறத்தலும் கூடாது.

அன்பு நெறிபற்றி ஆசிரியப் பெருமக்களுடன் தொண்டாற்றிய தொழிற்சங்கவாதியாவார். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பரீட்சைகள் திறம்பட நடாத்த முன்னின்றுழைத்த முத்தெனலாம். கல்வி, கலாச்சார செயலாளராக, யாழ். மாவட்ட இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவராக முத்திரை பதித்த பெருவினையாளன். சமாதான நீதிபதியாக பணிபுரியும் பாக்கியம் பெற்றவர். குமிண் சிரிப்புடன் எவரையும் அணைக்கும், அணுகும் பான்மையுடையவர். இத்தகைய தன்மையினால் காரிய சித்தியில் காகுத்தனாகியவர். இவரது பணி அறுபதிலும் அறுபடாது அவனிக்கு வேண்டும். மருதம உருப்பெற தருக நின் தேசுறு சேவை.

செந்தமிழும் சிவநெறியும்
தழைத்து ஓங்க
வந்த தமிழ் வல்லாளன்
வனப்பின் மிக்க
சந்த தமும் செயலாற்றும்
விறலோன் வல்ல
சிந்தை நிறை சோதி யெனும்
பெருமாள் தானே.

சி. வேலாயுதம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மாவட்ட பிரதி ஆணையாளர்

திரு. து. வைத்திலிங்கம் அவர்களின்

# பாராட்டுச் செய்தி

இணுவைப் பதி வாழ் ஓய்வு பெற்ற கொத்தணிப் பிரதி அதிபர் திரு. செ. சோதிப்பெருமாள் அவர்களின் பாராட்டு விழா நிகழ்வை அறிந்து மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன்.

இசையோடு இனிய உள்ளங்கள் இனிது வாழும் இணுவையம் பதியிலே தோன்றிய இவர், ஆசிரியராக, உபஅதிபராக அதிபராக கொத்தணி பிரதி அதிபராகப் பல பதவி உயர்வுகளை தனது கடின உழைப்பாலும் அயராத முயற்சியாலும் பெற்று கல்வி உலகிற்கு அரிய பல சேவையாற்றினார்.

இவர் இணுவில் அ. மி. த. க. பாடசாலையையும் இணுவில் சைவமகாஜன ம. வித்தியாலயத்தையும் ஒருங்கிணைத்து இணுவில் மத்திய கல்லூரி உருவாக்கத்திற்கு வித்திட்ட அதிசிறப்பைப் பெற்றவராவர்.

இவரின் சேவைக்கு இவ்வூர் மக்கள் எடுக்கும் விழா சிறக்க எனது பாராட்டுக்களும், அவர் தம் வாழ்வில் இனிது வாழ இறைவனையும் பிராத்திப்பதிலும் மகிழ்ச்சியடைகின்றேன்.

நன்றி

து. வைத்திலிகங்ம்

யாழ் மாவட்டப் பிரதி ஆணையாளர்
யாழ் மாவட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுவில் கல்விக் கோட்டம்

பிரதிக் கல்விப் பணிப்பாளர்

திரு சு. இரத்தினராசா அவர்களின்

# பாராட்டுரை

ஓய்வு பெற்ற அதிபர் திரு. செ. சோதிப்பெருமாள் அவர்கட்கு சேவை நலம் பாராட்டு மலர் ஒன்று வெளியிட முயற்சி எடுத்த இணுவில் கிராம மக்களின் முயற்சியை நான் நன்கு மதிக்கின்றேன். எந்த ஒருவரின் நன்றிச் செயலுக்கும் மதிப்புக் கொடுப்பது குறைந்து வரும் இக்காலத்தில் இணுவில் மக்களின் இந்த முயற்சி பாராட்டுக்குரியதாகும். அதிபர் திரு. சோதிப்பெருமாள் அவர்கள் இப்பொழுது அரசசேவையில் இல்லாத போதும் அவர் தனது சேவைக் காலத்தில் கல்வி போதித்த பாடசாலைகளில் மாணவர்களதும், சக ஆசிரியர்களதும் நல்ல பாராட்டைப் பெற்றவராகும். பாடசாலையில் கற்றல், கற்பித்தல் கருமங்களில் மிகவும் அக்கறை கொண்டவர். தன்னையும், தான் வாழ்ந்த சமுதாயத்தினரையும் சீராக்குவதில் அவருக்கு நிகர் அவரேதான். திரு. சோதிப்பெருமாள் அவர்கள் வகுப்பறைக் கற்பித்தலில் கணிதம், தமிழ், சமயம் படிப்பித்தலில் திறமையான ஆசிரியர்களில் இவரும் ஒருவராகும். இவர் தனது சேவைக் காலத்தில் பத்துப் பாடசாலைகளில் கடமையாற்றியுள்ளார். இருந்தும் தான் பிறந்த மண்ணிலேயே தனது சேவையை செய்ய வேண்டும் என்ற ஆவலில் இணுவில் பாடசாலைகளில் தொடங்கினார். வட்டார மட்டத்தில் வட்டாரக் கல்வி அதிகாரிகளுக்கு உதவியாளராக இருந்து, தமிழ்த் தினப்போட்டி, உடற் பயிற்சிப்போட்டி, விளையாட்டுப் போட்டி, பண்ணிசைப் போட்டி, இசை, நடன, நாடகப் போட்டி, ஆங்கில தினப் போட்டிகளை வருடா வருடம் எந்தப் பிரச்சனைகளும் இல்லாமல் ஒழுங்குபடுத்தி திறம்பட நடத்தியவர். இதனால் மேலதிகாரிகளின் நன்மதிப்பையும், பாராட்டுதல்களையும் பெற்றவர். பின்பு கோட்ட மட்டத்தில் பிரதி கொத்தணி அதிபராக இருந்து கொண்டு, மேற்கூறிய போட்டிகளை கோட்டமட்டத்தில் திறமையாக நடத்தியவர். இதனால் சோதிப்பெருமாள் என்றால் தெரியாத ஒருவர் இருக்க முடியாது. இணுவில் மத்திய கல்லூரி உருவாகுவதற்கு மூலகாரணமாக இருந்தார் என்பதை எவரும் மறுக்க முடியாது. இவருடைய பிரபல்லியத்திற்கும், செல்வாக்குக்கும் இவரது பொதுச் சேவையும், கடமை உணர்வும் காரணமாகும். எடுத்த விடயத்தை திறமையாக நடத்துவதில் வல்லமைமிக்க ஒருவரது பாராட்டு மலருக்கு ஆசியுரை எழுதுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மேலும் சோதி மக்கள் சேவையிலும், கல்விச் சேவையிலும் பங்களிப்புச் செய்து நீடுவாழ வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சு. இரத்தினராசா
பி. க. ப.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிபர்*

**திரு. அ. பஞ்சலிங்கம் அவர்களின்**

# பாராட்டுச் செய்தி

## சிறந்த தலைவன்

அதிபர் செ. சோதிப்பெருமாள் அவர்களின் கல்விச்சேவையையும் பொதுச் சேவையையும் பாராட்டி இணுவையம்பதி மக்கள் அவருக்கு விழா எடுப்பதையிட்டு நானும் ஓர் அதிபர் என்ற வகையில் மிகவும் பெருமித மடைகின்றேன.

வேறு எந்த அரசாங்க ஊழியருக்கு மில்லாத தனிச்சிறப்பு ஓர் அதிபருக்கு உண்டு. ஒரு பாடசாலையில் அதிபர் சேவைத்திறத்தினால் தான் முத்திரயினை பதியவைக்கலாம். பாடசாலையின் வளர்ச்சி அதிபரின் திறமையில் பெரும்பாலும் தங்கியுள்ளது. அந்த வகையில் திரு. சோதிப்பெருமாள் அதிபராக இருந்த காலத் தில் இணுவில் அ.மி.த.க. பாடசாலையில் மாடிக்கட்டிடம் நிறுவியமையும் அவ் வாரம்ப பாடசாலையில் 1200 மேற்பட்ட மாணவர்கள் தேடிவந்து கற்றமையும் அவரின் திறமைக்கு சான்றுகளாக அமைந்தன. இதற்கு வேறு சான்றுகள் தேவை யில்லை.

திரு சோதிப்பொருமாள் அவர்கள் ஒரு தலைவராக செல்வாக்குள்ளவராக திகழ்ந்தார். அவருக்கு நல்ல, பரந்த சமூகத் தொடர்புகள் உண்டு. சிறந்த தொழிற் சங்கவாதியாக இருந்தமையும் இதற்குத் துணைசெய்தது. தமது தொழில் சம்பந்த மான பூரணஅறிவு, திறமை அவருக்கு இருந்தது. அவர் தமது கடமையுடன் மட்டும் நிற்காமல் அதற்கு அப்பாலும் தமக்கென்று ஓர் இலட்சியத்தை உருவாக்கி அதனை நிறைவேற்றுவதற்காக இருகாததூரம் கூடுதலாக நடக்கும் பண்பாளன். இவ்வியல்புகள்தான் அவரை ஓர் சிறந்த தலைவராகவும் நல்ல செல்வாக்குள்ளவ ராகவும் ஆக்கின.

அவரிடம் மேலோங்கிக் காணப்பட்ட சமூகத் தொடர்பு காரணமாக அவரை நாடி ஜே. பி. என்ற கௌரவம் தானாக வந்தது. ஜே. பி. ஆகிய பின்பும் அவர் தொடர்ந்தும் நல்லதொரு சமூகத் தொண்டனாகவே இருந்து வருகின்றார்.

இத்தகைய சிறந்த ஒரு " மானுடநேயம் " மிக்க அதிபர் திரு. செ. சோதிப் பெருமாளுக்கு எல்லாவித சிறப்புக்களும் மென்மேலும் அமையவேண்டும். அவரால் சமூகம் தொடர்ந்தும் பயனுறவேண்டுமென வாழ்த்துகிறேன்.

**அ. பஞ்சலிங்கம்**
அதிபர்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*யாழ்ப்பாணம் மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி*

**வைத்தியகலாநிதி இ. தெய்வேந்திரன் அவர்களின்**

# பாராட்டுரை

திரு. செல்லத்துரை சோதிப்பெருமாள் அவர்கள் இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆரம்பகல்வியை இணுவில் மகாஜன வித்தியாசாலையில் பெற்று ஆசிரியரானார். தமது கூடியகாலச் சேவையை அக்கல்லூரிக்கே அர்ப்பணித்தார் அதன்பின் ஏறத்தாள 15 ஆண்டு காலம் இணுவில் அ. மி. த. க. பாடசாலையின் அதிபராகப் பணிபுரிந்தார். இறுதியான காலத்தை இணுவில் மத்திய கல்லூரியின் அதிபராக இருந்து அரும் சேவையாற்றினார்.

திரு. சோதிப்பெருமாள் அவர்கள் 45 வயதாக இருக்கும்போதே சமாதான நீதிபதியாகச் சமூகத்தால் கௌரவிக்கப்பட்டார். திரு. சோதிப்பெருமாள் ஆசிரியனாகக் கடமையாற்றினார் என்பதிலும் பார்க்க சிறந்த சமூகசேவையாளனாகப் பணிபுரிந்தார் எனக் கூறுதலே சிறப்புடையதாகும். இளம் வயதில் அவர் ஒரு சமாதான நீதவானாக்கப்பட்டார் என்பதிலிருந்தே அவரின் சேவையின் தரத்தைக் கணக்கிடமுடியும். தமது சேவையின் 90% க்கு மேற்பட் பங்கைத் தாம் பிறந்த கிராமத்தின் பெயரில் அதன் கல்வி வளர்ச்சிக்கும் ஏனைய சமூக முன்னேற்றத்திற்கும் செலவிட்டுள்ளார்.

சுகாதார மேம்பாட்டிற்காக அரும்பணியாற்றியுள்ளார். மாணவர் சுகநலம் பேணல் காசநோய்த்தடை, சிரமதானப்பணி, சுகாதாரதினம், சுகாதாரவாரக் கொண்டாட்டங்களில் கூடிய அக்கறை காட்டியுள்ளார்.

தற்போது அவர் தமது 60 வயதைப் பூர்த்தியாக்குகின்றார். சமூக சேவைக்கே தன்னை ஒப்படைத்து வாழ்க்கை நடாத்துகின்றார். அவர்எதிர்காலம் சிறப்புற எமது உளமார்ந்த வாழ்த்துக்கள்.

**இ. தெய்வேந்திரன்**

சுகாதர வைத்திய அதிகாரி,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அன்பனுக் கன்பன் அருந்தமிழ் நேசன்"

அகவல்

ஏழிசையும் இன்தமிழும் சைவம் சீலம்
சூழிதய பத்தியொடு திகழும் நாடாம்
நல்லிணுவைப் பதியினிலே நந்த மிழின்
தொல்லிலக் கணம்பயின்ற தூய வம்ஸ
கார்வேளான் குலதிலக சின்னத் தம்பி
வார்குழலித் தம்பதிகள் இணுவைக் கந்தன்
வளமார்ந்த பொற்பதங்கள் வாழ்த்திப் பெற்ற
செல்வத் துரையென்னும் சீலன் கந்தன்
நல்லருளால் தந்திட்ட நயமார் செல்வன்
சோதிப் பெருமாளாம் சிறந்த கல்வி
மேதினியோர் போற்றிடவே பெற்ற செம்மல்
கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்கும் தகைமையில் நிறைவுற நின்றனன்
கலையும் கல்வியும் கவினுறு பண்பும்
நிலவுற நாட்டினில் நெஞ்சாரச் சேவை
செய்தனன் சிறார்பல பயின்றிடும் பள்ளி
உய்யவே கட்டிடம் உவந்ததைக் கட்டி
பிஞ்சுக் குழந்தைகள் பைந்தமிழ் கற்றிட
மிஞ்சிடும் சேவை மிளிர்ந்திடச் செய்தனன்
பாட சாலை வளர்ச்சி யுறவே
நாடியே சேவைகள் நயப்புறச் செய்தனன்
இணுவைக் கல்விக் கூடம் வளர்ந்தே
இணையிலா சேவை உயர்வுறச் செய்தான்
அன்பனுக் கன்பன் அருந்தமிழ் நேசன்
இன்புறப் பழகும் இனித்திடு நாவன்
ஆடலும் பாடலும் அழகுறு கலைகள்
நாடியே வளர்த்தவன் நல்லிணுவையிலே
உடலும் உளமும் உறுதியும் பெறவே
இடமதாய் "சரஸ்வதி கலை அரங்கம்"
அமைத்தவன் இவனே அழகுறு தமிழில்
சமைத்தே கவிதை தந்தவன் இவனே
இணுவையூர் திரண்டே இவ்விழா எடுத்தே
மணிமலர் போன்ற மலர்நூல் மலர
போற்றுதும் போற்றுதும் புனிதத் தொண்டனை
ஏற்றுதும் ஏற்றுதும் இகமின் புறவே

*யாழ்ப்பாணம் இணுவையூர்,*
*"இயல் இசை வாரிதி", "கவிமாமணி"*
**பிரமஸ்ரீ ந. வீரமணி ஐயர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# இணுவில் "ஈசன் உவக்கும் திருவாரூர்"

அரும்பிடும் அதிகாலை மணியோசை – அதில்
ஆனந்தமாய் இதய மலர்விரியும்
திரும்பிடும் பக்கமெல்லாம் ஆலயங்கள் – இங்கு
சிந்தைக்கு விருந்தாகும் கோபுரங்கள்
விரும்பிடும் அடியார்கள் கீதஒலி - எங்கும்
வேதியர் ஓதிடும் வேதஒலி
இரும்பு தரும் மனமும் இளகிடுமே – இணுவில்
ஈசன் உவக்கும் திருவாரூரே.

சிவனுறையும் காரைக் கால்பதியே – முன்னால்
சிவகாமி யம்மையின் பெரும்பதியே
தவமுனிவர் போற்றும் மஞ்சத்தடி – மேலைத்
தன்னேரிலா இணுவை முருகன்பதி
பவமகல் செகராச சேகரமே – பாங்கில்
பரராச சேகரப் பிள்ளைபதி
உவக்கும் சிற்றாலயங்கள் பலவாகும் – இணுவில்
ஊரெல்லை யெல்லாமே ஆலயங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளலை தவழ்ந்துவரும் வீதியெல்லாம் - இணுவில்
ஆன்மீக ஞானிகளின் ஆலயமே
பெருநிதி இணுவைப்பதி இசைவளமே - இசைப்
பேராளர் பெருமைக்கு அணிகலமே
தெருவெலாம் நாதமும் கீதமுமே - உள்ளம்
தித்திக்கும் முத்தமிழ் முற்றமெல்லாம்
பேரருளாளர் பெரும்புலவர் - எண்ணில்
பேரறிஞர் வாழும் பெருநிலமே.

பூமித்தாயின் மேனி செந்நிறமே - இணுவில்
பூரிக்கப் பொன் கொழிக்கும் இந்நிலமே
நாமுவந்தே நுகரும் பயிர்களெல்லாம் - இங்கு
நான் முந்தி நீமுந்தி எனவிளையும்
தாமுவந்தே பிறர்க்கும் ஈந்துவக்கும் - நல்லோர்
தண்ணளி கண்டிந்த உலகுவக்கும்
தேமதுர நன்னீர் வளத்தருமை - இந்தத்
தேசமேலாம் இணுவைப் புகழுரைக்கும்.

வித்தான தமிழ்சைவப் பண்பாட்டில் - தோன்றி
விளைந்திருக்கும் இணுவைப் பதியினிலே
பத்தாயிரத்துக்கும் மெத்தவுள்ளார் - சைவப்
பத்திநெறி யொன்றே பற்றியுள்ளார்
முத்தான மாணவர்க்குக் கல்விதரும் - சாலை
மூன்றிருக்கும் முக்கண் போன்றிருக்கும்
உத்தமச் சான்றோர்கள் சூழ்ந்திருப்பார் - இங்கு
உவந்திருப்பார் வாழ்வில் மகிழ்ந்திருப்பார்.

வந்தாரை வரவேற்று வாழ்வளிக்கும் - பண்பில்
வரையாது வளரிணுவைப் புகழ்பெரிதே
சிந்தா குலமகலத் தினம் தினமும் - மாந்தர்
சித்தம் களிக்கும்விழா மெத்தவுண்டே
நந்தா விளக்கனைய நல்லறிஞர் - உலகம்
நலமுறவே நாளும் தவமுயல்வார்
எந்தாய் என இணுவைப் பதிவளர்ப்போம் - இங்கு
எல்லோரும் இன்புறவே கண்டுவப்போம்.

**சைவப்புலவர் (திரு) சு. செல்லத்துரை**
அதிபர்

யா/ இளவாலை மெய்கண்டான்
மகா வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமியக் கல்விச் செயல்முறையும் திரு. செ. சோதிப்பெருமாளது வாண்மைப் பணிகளும்

கலாநிதி சபா. ஜெயராசா,
முதுநிலை விரிவுரையாளர்,
கல்வியியல் துறை,
தலைவர்; இராமநாதன் நுண்கலைக் கழகம்,
யாழ். பல்கலைக்கழகம்.

''கல்வி உலகம்'' என்பது ஒரு செயல் முறை. அது ஆக்கத்திறனுடனும் சமூக முன்னேற்றத்துடனும் இணைந்ததாக இருக்கும். கிராமிய வாழ்க்கையைப் பின்புலமாகக் கொண்ட கல்விச்செயல் முறையில் ஓர் ஆசிரியர் எவ்வாறு அமையவேண்டும் என்பதன் குறியீடு வடிவமாக விளங்குபவர் திரு. செ. சோதிப்பெருமாள்.

கல்விச்செயல்முறையினூடாக மனித வாழ்க்கைக்குக் கருத்து வழங்கப்படுகின்றது. மானுடமேம்பாடு முன்னெடுக்கப்படுகின்றது. இரண்டு விதமான இடைவினைகள் கல்விச்செயல் முறையினூடாக முன்னெடுக்கப்படுகின்றன. அவை:

அ) கல்விச் செயல்முறையின் உள்ளே நிகழும் இடைவினைகள்.

ஆ) கல்வித் தொகுதிக்கும் சமூகத்துக்குமிடையே நிகழும் இடைவினைகள்.

கிராமியப் பின்புலத்தில் மேற்கூறிய இரண்டு இடைவினைகளையும் திறம்பட ஒழுங்கமைத்த ஒரு ''பயன்கொள்', நெறியாளர் என்ற வகையில் இவரது பணிகள் முக்கியமானவை.

ஒழுங்கற்ற இடைவினைகளை ஒழுங்கமைந்த - நெறிப்படுத்தப்பட்ட இடைவினைகளாக மாற்றியமைப்பதிற் பாடசாலைகள் பிரதான இடத்தை வகிக்கின்றன.

ஆசிரியரது செயல்முறைகள், அதிபரது செயல்முறைகள், கல்விமுகாமைத்துவச் செயல்முறைகள் என்றவாறான பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இவையனைத்தும் கல்வியியலிலே மேம்பாடு கொள்வதில் தனியாள்வினைத்திறன் (Personal Efficacy) சிறப்பார்ந்த இடத்தைப் பெறுகின்றது. தனது ஆற்றலில் நம்பிக்கை, பிறரது ஆற்றல்களை ஒன்றிணைத்துக் கல்விச் செயற்பாடுகளை மேம்படுத்துதல், சவால்களை எதிர்கொண்டு வழிநடத்துதல், முதலியவை தனியாள் வினைத்திறன் மேம்பாட்டில் விதந்து கூறப்படுகின்றன. தனியாள் முயற்சியைப் பயன்படுத்திக் கல்விச்செயல் முறையினூடாக சமூகத்தைக் கட்டியெழுப்பல் இங்கு குறிப்பிடப்படுகின்றது.

திரு. செ. சோதிப்பெருமாள் அவர்கள் இணுவில் சைவமகாஜனவித்தியசாலையில் தமிழ்க்கல்வியையும், உரும்பிராய் இந்துக் கல்லூரியில் ஆங்கிலக்கல்வியையும் கற்றவர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய இருபாடசாலைகளும் ,'சமூக அசைவை'' ஏற்படுத்துவதிலும், கல்வியினூடாகத் தனிமனித வினைத்திறனை வருவிப்பதிலும் முன்னின்று உழைத்த கல்வி நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குறியீடுகளாகக் கொள்ளத்தக்கவை.

எமது கல்விச் செயற்பாடுகள் வேகமடைந்தமைக்குக் கல்வியியலாளர் மேற்கொண்ட செயலாண்மை அல்லது செயல் கொள்வதாம் ( Activism ) முக்கியமானகாரணியாக அமைந்தது.

யாழ்ப்பாணக் கல்விப்பாரம்பரியத்தில் திரு. ஹண்டி பேரின்பநாயகம், (கொக்குவில் இந்துக்கல்லூரி) திரு. வி. வீரசிங்கம் (மானிப்பாய் இந்துக்கல்லூரி, திரு. து. ஜெயரத்தினம் ( மஹாஜனக்கல்லூரி ) எ. ஈ. தம்பர் ( யாழ் மத்தியகல்லூரி ) திரு. வி. வைத்தியலிங்கம் ( உரும்பிராய் இந்துக்கல்லூரி ) முதலியோர் செயல்கொள்வாதிகளாக விளங்கினர். மேற் கூறியோருடன் நேரடியான தொடர்புகளைக் கொண்டிருந்த திரு. செ. சோதிப்பெருமாள் அவர்கள் அக்காலத்தைய ஆங்கிலப்பாடசாலைகள் துரித விருத்தியடைந்தமை போன்று தமிழ்ப்பாடசாலைகளும் மேம்பட வேண்டுமென்று எண்ணினார். இது அவரது உணர்வுடன் கலந்திருந்தது. உள்ளுணர்வுடன் கூடிய கல்விச் செயல் முறையினை '' அகத்திருந்து துலங்கும் வினைத்திறன் '' ( Subjective efficacy ) என்று குறிப்பிடுவர். சுய உந்தல்பெறல், சுய உந்தலால் புறச்சூழலை மாற்ற முயலுதல், உள்ளார்ந்த நெறிப்படுத்தல் கொண்ட ஆளுமை என்று பல வாறாக இந்தச் செயல்முறையினைக் குறிப்பிடலாம்.

திரு. செ. சோதிப்பெருமாள் அவர்கள் ஆசிரியர் கல்லூரியிலே பெற்ற பயிற்சியும், கொழும்பு நகரத்திலே ஆசிரியராகப் பணியாற்றியதாற் கிடைக்கப்பெற்ற அனுபவங்களும் கல்வியியல் '' நவீனத்துவம் '' என்ற எண்ணக்கருவுக்கு அவரை இயல்புபடுத்தின. இவற்றின் வழியாக '' தனியாள் நவீனத்துவம் '' ( Indivlual Modernity ) என்ற ஆளுமை இயல்பும் அவரிடத்தே சிறப்படைந்தது. விரைந்து தொழிற்படல், திட்டமிடுதல், தொழில்சார் கூறுகளைப் பகிர்ந்தளித்தல், ஒருங்கிணைத்தல், புதிய உபகரணங்களைப் பயன்படுத்தல், முதலியவை நவீனத்துவத்தின் பண்புகளாகச் சுட்டிக் காட்டப்படுகின்றன. சிறிய பாடசாலைகளின் கலைத்திட்டம், பரீட்சைகள், முகாமைத்துவம் என்பவற்றில் தட்டச்சுப்பொறி, சுழல்பிரதிப்பொறி முதலியவற்றைப் பயன்படுத்திய முன்னோடிகளுள் ஒருவராக திரு. செ. சோதிப்பெருமாள் விளங்குகின்றார்.

'' சிறிய பாடசாலைகளின் கலைத்திட்டத்தை எவ்வாறு வளம்படுத்தலாம் என்பது பற்றிக் கல்வி அமைச்சு அண்மைக்காலமாக ஆழ்ந்து சிந்திக்கின்றது. சிறிய பாடசாலைகளை ஆராய்வதற்கும், விருத்தி செய்வதற்கும் பணி அலகுகள் பல ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் நடைமுறையில் இப்பணியை வெற்றி கொள்ளவைத்து ஒரு சிறிய பாடசாலையை மேம்படவைத்த பெருமை திரு. செ. சோதிப்பெருமாளுக்கு உண்டு.

மொழித்தினம், கலைவிழா, இல்ல மெய்வல்லுநர் போட்டிகள், முதலியவற்றைச் சிறிய பாடசாலைகளின் இணைந்த கலைத்திட்டச் செயல்பாடுகளுக்குள் வெற்றிகரமாகக் கொண்டுவந்த பெருமையும் இவருக்கு உண்டு. இவைமட்டுமல்ல சிறிய பாடசாலைகளிலே கல்விகற்கும் மாணவர்களது திறமைகளை தேசிய மட்டத்துக்கு உயர்த்தி விருதுகள் பெறுவதற்குரிய நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். இணுவில் அ. மி. த. க பாடசாலை மாணவர்கள் பலர் அனைத்து இலங்கைப் போட்டிகளில் முதலாம் இடங்களைப் பெற்றுக் கொண்டனர்.

திரு. செ. சோதிப்பெருமாளது நவீனத்துவ அணுகுமுறைகள் கல்விக்குரிய தள அமைப்புக்களிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தின. கிராமப்புறத்து ஆரம்பப்பாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலைகளுக்கு மாடிக்கட்டடம் என்பது ஒரு கற்பனையாக இருந்த காலகட்டத்தில், நீண்டபெரிய மாடிக்கட்டடம் ஒன்றினை அரங்குவசதிகளுடன் அமைத்துக்காட்டினார்.

இலங்கையிலேயே அதிக அளவு மாணவர்களைக் கொண்ட ஆரம்பப் பாடசாலைகளுள் ஒன்றாக இணுவில் அமெரிக்கமிஸன் தமிழ்க்கலவன் பாடசாலையை அமைப்பிலும் தரத்திலும் உயர்த்திய பெருமை இவருக்கு உண்டு. விருத்தியடைந்த நாடுகளிற் பட்டதாரிகளும், பட்டப்பின்கல்வித் தகமைச் சான்றிதழ் பெற்றவர்களும் ஆரம்பப்பாடசாலைகளிலே கற்பிக்கும் மரபு உண்டு. அதன் வழியாக அவர்கள் ஆரம்பக்கல்வியைச் சிறந்த முறையிலே கட்டியெழுப்பி வருகின்றார். இத்தகைய ஒரு நவீனத்துவ நடவடிக்கையிலே திரு. செ. சோதிப்பெருமாள் அவர்கள் முயன்று பட்டதாரிகளை அ. மி. த. க பாடசாலையிலே பணியாற்றச் செய்தார்.

இந்த நடவடிக்கைகள் காரணமாகக் கிராமப்புறத்து வறிய மாணவர்கள் பெருமளவிலே புலமைப் பரிசில் பரீட்சைகளில் சித்தியடையக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது.

ஆசிரியர்களது ''வாண்மை'' முன்னேற்றத்தின் பொருட்டு திரு. செ. சோதிப்பெருமாள் பெருமளவிலே உழைத்தார். ஆசிரியர்கள் தமது கல்வியைத் தொடர்ந்து கொண்டிருக்க வேண்டியதன் அவசியத்தைப் பலமுறை வற்புறுத்தினார். ஆசிரியர் கல்வி உயரும் பொழுதுதான் மாணவர் தரம் உயரும் என்பதைச் சுட்டிக்காட்டினார். இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கத்திலே பல பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகித்து நிறுவன அடிப்படையிலே ஆசிரிய வாண்மை உயர்வதற்கான பங்களிப்புகளைச் செய்தார்.

பாடசாலையின் கல்வித்தரம் உயர்வதற்கு சமயக்கல்வியும், அழகியற்கல்வியும் அவசியம் என்பதை இவர் உணர்ந்தார். வடிவேற்சாமியார், அல்லமாப்பிரபுசாமியார், சந்தையாசாமியார், தியாகராஜசாமியார் போன்ற பல சமயப்பெரியார்களின் தொடர்பு இவருக்கு இருந்தது. இதன் காரணமாக சமயவிழாக்களை மிகுந்த பக்திக்கவிநிலையிலே இவர் பாடசாலையில் நடத்தினார். இவ்வாறே சிறந்த இசைப்பெரியார்களின் நட்பும் இவருக்கு இருந்தது. திருவாளர்கள் வி. தெட்செணாமூர்த்தி, வி. உருத்திராபதி, வி. கோதண்டபாணி, இ. கோவிந்தசாமி, இ. சின்னராசா, க. கந்தசாமி, என். சண்முகரத்தினம், என். கே. பத்மநாதன் போன்ற இசை வல்லவர்களின் தொடர்பு இருந்தமையால் அவர்களின் அனுபவங்களைப் பயன்படுத்தி பாடசாலையில் இசைக்கல்வியை மேம்பாடு கொள்ளச்செய்தார்.

பாடசாலையிலே கற்றல், கற்பித்தல், முகாமை செய்தல் என்பவற்றுடன் மட்டும் இவரது வாண்மைப்பணிகள் நின்றுவிடவில்லை. கல்வி ஆராய்ச்சித்துறையும் கிராமங்களை அடிநிலையாகக் கொண்டு வளர வேண்டும் என விரும்பினார். பேராசிரியர் ப. சந்திரசேகரம் இலக்கியகலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, தமிழ்வேள் க. கந்தசாமி போன்ற அறிஞர்களுடன் பழகி அவர்களது ஆற்றல்களைப் பலதளங்களிலும் பயன்படுத்த வேண்டும் என விரும்பினார்.

கல்விச் செயல்முறை என்பது தொடர்ச்சியானது. கல்வித் தொண்டர்களின் பணிகள் அந்தத் தொடர்ச்சியின் காலச்சுவடுகளாக இருக்கும். கல்விச்செயல்முறையானது அமைப்பு நிலைப்பட்ட ஒருங்கிணைப்புக்களையும் ஏற்படுத்தவல்லது. திரு. செ. சோதிப்பெருமாள் அதிபராக இருந்த காலகட்டத்தில் இணுவில் அ. மி. த. க பாடசாலையும், இணுவில் சைவ மகாஜன மகாவித்தியாலயமும் ஒன்றிணைக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக இப்பிரதேசத்தில் நிகழ்ந்த கிராமியக்கல்வி வளர்ச்சியையும், கிராமிய சமூக அசை வியக்கத்தையும் ஆராய்வதற்கு திரு. சோதிப்பெருமாளது ஆசிரியவாண்மைப் பணிகள் பொருத்தமான பிரதிநிதித்துவப் படுத்தல்களாக அமைகின்றன. □

## REFERENCES


1. Daphne M de Rebello, *Formal Schooling and personal Efficacy* Sterling Publishers, New Delhi, 1979
2. Peter L Berger and Thomas Luckmann *The Social Construetion of Reality* The Penguin Press, London, 1967
3. P. W. Musgrave, *The Sociology of Education* Methuen, London, 1983
4. Inuvil Central College. *The Prige Day Report*, 1993


உன்னைத் தாழ்த்திப் பேசும்பொழுது நீ அடக்கமாயிருத்தல் பெரிய காரியமன்று. உன்னைப் புகழ்ந்துரைக்கும் பொழுது அடக்கமாயிருத்தல் அரிய பெரிய வெற்றியாகும்.

— அர்ச் பெர்னார்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது கல்வி

பேராசிரியர் வ. ஆறுமுகம்,
கல்வியியற்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மனித வரலாறு ஆரம்பத்திலிருந்தே சமூக வாழ்வினை அடிப்படையாகக் கொண்டது. நாகரிகத்தின் தோற்றுவாயாக விளங்கும் சமூகவாழ்க்கை முறை தொடக்கத்தில் மனிதனுடைய தேவைகளின் காரணமாக உருவானதாகக் கொள்ளமுடியுமெனினும், இன்றையமனிதன் தான் வாழும் சமூகத்தின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கியருப்பதை ஏற்றுக்கொள்வது தவிர்க்கமுடியாததேயாகும். ''மனிதன் ஒரு சமூகப் பிராணி'' என்ற கருத்து ஒன்றுகூடி வாழ்தல் / செயற்படுதல் என்ற வகையிலே எழுந்த கூற்று எனக் கொள்ளுதல் பொருத்தமுடையதாகும். ஒன்றுகூடிச் சமூக அமைப்பில் வாழத் தொடங்கிய மனிதன் காலப்போக்கில் அச்சமூகத்தினாலேயே கட்டுப்படுத்தப்படுவதைக் காண்கின்றோம். தான் வாழும் சமூகத்தின் மரபுகள், வழக்குகள், விழுமியங்கள் என்பவற்றுக்கேற்பத் தனது வாழ்வை அமைத்துக்கொள்ளும் மனிதன் தான் பிறந்து, வளர்ந்த, சமூகத்தின் எல்லைக்குள் கட்டுப்பட்டு வாழ்வதோடு அதன் நோக்கங்கள், இலட்சியங்கள் ஆகியவற்றைப் பேணிப் பரப்பும் கடமையையும் கொண்டிருக்கிறான். அத்தகைய தனது கடமைகளையும் பொறுப்புக்களையும் மனிதன் உணர்ந்து செயற்படுவதற்கு அவனுக்குக் கல்வி இன்றியமையாததாகும்.

கல்வியின் இன்றியமையாத் தன்மை இன்று பலவழிகளிலும், பல மட்டங்களிலும் வற்புறுத்தப்படுவதாக இருப்பினும், அதன் வரலாறு நீண்ட கதையெனலாம். சமூக வாழ்வின் ஆரம்பத்தில் அதில் இடம் பெற்ற மக்கள் ஒவ்வொருவரும் தமக்கென உரிய தனியான தொழிற்பாடுகளை நிறைவேற்றினர். அவற்றுக்குப் பொருத்தமான / தேவையான அறிவினையும் ஆற்றலையும் வழங்கும் வகையில் ஆரம்பக்கல்வி முயற்சிகள் காணப்பட்டன. சமூகக் கட்டமைப்பின் மேல்மட்டத்தில் இருந்தவர்களுக்குக் கூடிய / உயர்ந்த தரத்திலான அறிவும் ஆற்றலும் தேவைப்பட்டமையால் அதற்கான முயற்கிகள் கல்வியில் காணப்பட்டன. ஏனைய சமூக உறுப்பினர்கள் தத்தம் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் அக்காலக் கல்வியில் படிமுறைத் தோற்றத்தை அவதானிக்காலம்.

மனித சமூக வாழ்வின் தொடக்கத்தில் 'அரசு' என்ற அமைப்பு இன்றுபோலப் பலம் பொருந்தியதாக, இறுக்கமானதாக விளங்கவில்லை. அத்தகைய நிலையில் அரசின் கடமைகளும் இன்றைக்கிருப்பதுபோல பல துறைகளிலும் வியாபித்திருக்கவில்லை. கல்வியும் அப்படியான ஒரு துறையாகவே இருந்தது. இன்று, உலகின் எந்த நாட்டினை எடுத்துக் கொண்டாலும், கல்வியை வழங்குவதில் முழுப் பொறுப்பினையும் சுமக்காவிட்டாலும் கணிசமான பொறுப்பினை அரசே ஏற்றுக்கொண்டுள்ளதைக் காண்கிறோம். அன்றைய நிலை அப்படியானதன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியைப் பெறவிரும்பியவர்கள் அதனை வழங்கக்கூடியவர்களிடம் சென்று பெற்றனர். அந்த மரபில் 'குரு' என்ற உயர் தரத்தில் வைத்துப் போற்றப்பட்ட ஆசிரியன் தன்னை நாடிவரும் சீடர்களில் கற்பதற்கு வேண்டிய தகுதியும் திறனுமுடையவர்களைத் தெரிந்து அங்கீகரிக்கும் வழக்கு இருந்தது. அதிலிருந்து குருவுக்கும் சீடனுக்கு மிடையிலான உறவு நெருக்கமானதாகவும் புனிதத்தன்மையுடையதாகவும் பேணப்பட்டது. அத்தகைய கல்வியைப் பெறுவதில் எம் மக்கள் கண்ணுங்கருத்துமாக இருந்தனர்என்பதை

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே
உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்கை நன்றே"

என்ற பாடல் தெளிவாகக் காட்டுகின்றது.

மாணவர்களைத் தெரிவுசெய்து கல்வியை வழங்குவதான அக்காலச் செயற்பாடு ஒருவனுக்குக் கிடைக்கும் கல்வியானது அவனுக்குக் கிடைக்கும் ஒரு 'சலுகை' என்று விமர்சிக்கப்படக்கூடியதாகவே இருந்தது. அந்த நிலை இன்று மாறிவிட்டது. ஐ. நா. சபையினரால் பிரகடனப்படுத்தப்பட்டு அதன் சகல அங்கத்துவ நாடுகளினாலும் அங்கீகரிக்கப்பட்ட 'அடிப்படை மனித உரிமைகள்' கல்வியை மனிதனுடைய பிறப்புரிமைகளுள் ஒன்றாக வற்புறுத்தியுள்ளது. (மனித உரிமைகள் பிரகடனம், பிரிவு 26). அதற்கிணங்க ஆகக்குறைந்தது ஆரம்பக் கல்வியையாவது பெறுவதற்கு ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமையுண்டு. அந்த மட்டில் எம்மால் திருப்திப்பட்டுவிட முடியுமா?

கல்வி எமது உரிமை என்று கோஷமிட்டால் மட்டும் போதாது. அந்த உரிமையை நிலைநாட்டுவதற்கு எமக்குச் சில கடமைகளும் உண்டு என்பதை மறுக்க முடியாது / மறக்கக் கூடாது. கடமைகள் நிறைவேற்றப்படாத போது உரிமைகள் நிலைக்கா என்பதை நாம் மறக்கக்கூடாது. அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் வகையில், அதன் பெருமையையும் / பயனையும் உணரமுடியாதவர்கள் மத்தியில் அதனைக் கட்டாயப்படுத்தும் கடமை அரசுக்கு உண்டு. எமது நாட்டை எடுத்துக்கொண்டால் 'கட்டாயக் கல்வி' என்பது சித்தாந்தமாகவே இன்றுமுள்ளது பள்ளிக்கூடத்தில் கல்வி கற்க வேண்டிய பருவத்தினர் அத்தனைபேரும் கல்வி கற்பதை உறுப்படுத்தவேண்டியது அரசினுடைய கடமையாகும். அதற்காகத் தனது அதிகாரங்களைச் சட்ட உருவில் பலப்படுத்த வேண்டியது அரசினுடைய பொறுப்பு. ஆனால அது நடைபெறவில்லை. கற்கவேண்டியவர்களைக் கட்டாயப்படுத்திப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி அப்படிச் செல்லாதவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வழி செய்யும் சட்ட திட்டங்கள் எதுவும் எம்மத்தியில் இன்று இல்லை என்பது ஒரு கசப்பான உண்மையாகும்.

கல்வியில் மாணவர்களது ஈடுபாட்டினைக் கட்டாயப்படுத்தும் கடமையை ஏற்க வேண்டியவர்கள் வரிசையில் அடுத்து இடம் பெறுவது சமூகம். மனிதனைத் தனது மரபுகள் / சம்பிரதாயங்கள் என்பவற்றால் கட்டுப்படுத்திச் செயற்படுத்தும் சமூகம் அவன்பால் தனக்கும் கடமைகளுண்டு என்பதை மறந்துவிடமுடியாது. அத்தகைய கடமைகளுள் கல்வியை உறுதிப்படுத்துதலும் ஒன்று. சமூக அழுத்தங்களுக்கூடாக மாணவர்களது பள்ளிக்கூட வரவினை நிலைநாட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். பள்ளிக்கூடத்தில் முதலாம் ஆண்டில் சேரும் மாணவன் உரிய காலத்திற்கு முன்னர் பள்ளிக்கூடத்தைவிட்டு இடைவிலகும் நிலை உருவாவதற்குச் சமூகம் பொறுப்பேற்கவேண்டும். அதைத் தவிர்க்கும் / தடுக்கும் வழிமுறைகளைச் சிந்தித்துச் செயற்படுத்த முயற்சிக்கவேண்டும். இப் பொறுப்பில் சமூகம சிரத்தைகாட்டாவிட்டால் ஈற்றில் பாதிப்புக்குள்ளாவது அதுவேயாகும்.

சமூகத்தினுடைய செயற்பாட்டுக்கு வலுவும் வளமும் கொடுப்பது பெற்றோருடைய கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே''
என்று பாடிய பழந் தமிழ் நற்றாயின் தத்துவத்தை நாம் மறந்துவிடலாகாது.

''தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்''

என்பது வள்ளுவர் வாசகம். இப்படியான சிந்தனைகளின் தழுவலில் எமது செயற்பாடு நிறைவுகாணவேண்டும். பிள்ளைகளைப் பெற்று வளர்த்துவிடுவதோடு பெற்றோரின் பங்கு நின்றுவிடமுடியாது. கற்பதற்கு வேண்டிய வாய்ப்புகள், வசதிகள், உந்தல்கள் எல்லாவற்றையும் பிள்ளைகட்கு அளித்தல் வேண்டும். அவற்றோடு கட்டாயத்தையும் கடைப்பிடிக்கலாம்.

இவற்றுக்கு மத்தியில் அடிப்படையிற் காணப்படும் பிரச்சனையும் ஒன்று உண்டு என்பதை நாம் மறந்து விடககூடாது. அன்றைய வழக்கில் கல்வி ஒரு 'தானமாக'ச் சருதப்பட்டது. தன்னை நாடிவந்த, தன்னால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, சீடர்கள் அனைவருக்கும் முகங்கோணாது அறிவினை வரையறாது வழங்கினான் அன்றைய குரு. இன்றோ நாம் கல்வியைத் 'தானஞ் செய்கின்றோமா' என்று கவலைப்படவேண்டிய நிலைமை நம்மிடையே காணப்படுகின்றது.

''மனிதனை மனிதனாக்குவது கல்வி'' என்பது சுவாமி விவேகானந்தர் கூற்று. மனிதனுடைய 'மனிதத்துவம்' மிளிர்வதற்கு அவனுடைய தேவைகள் தீர்க்கப்பட்டு நிம்மதியான வாழ்க்கை வாழக்கூடிய வசதிகள் இருத்தல் அவசியம். உணவு, உடை உறையுள் ஆகிய மூன்று அடிப்படைத் தேவைகளையும் நிறைவு செய்யக்கூடிய கல்வி ஒன்றினாலேயே அது முடியும். இந்த வகையிலான கல்வியைப் பெறும் ஒருவன் அதன் உச்சபயனைப் பெறக்கூடிய முறையில் செயற்படுவது இன்றியமையாதது. ''கல்வி கரையில, கற்பவர் நாட்சில'' என்பது ஆன்றோர் வாக்கு. அதன் உட்கிடை எமது இன்றைய கால நிலைகளுடன் தொடர்புற வேண்டும். ஹேபேட் ஸ்பென்சர் என்ற கல்விச் சிந்தனையாளர் கருத்து இங்குப் பொருண்மையுடையது. ''எமது வாழ்நாள் குறுகியது. அது மட்டுமல்ல, பல விடயங்களில் அதைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. எனவே காலத்தை, அறிவைத் தேடுவதில், அதிக உயர்ந்த நன்மையைப் பெறக்கூடிய முறையில் உபயோகப் படுத்த வேண்டும். எனவே தேவையற்ற விடயங்களைக் கற்காது மிக உபயோகமான விடயங்களைக் கற்கவேண்டும். எங்களுக்கும் மற்றவர்களுக்கும் மிக உயர்ந்த நன்மையைத் தரக்கூடிய அறிவைத் தேடவேண்டும். எங்களைப் பூரண வாழ்க்கைக்கு ஆயத்தப் படுத்துவதுதான் கல்வியின் பிரதான நோக்கம்'' என்பது அவர் கூற்று. பூரண வாழ்க்கையான மனித நடவடிக்கைகளை அவர் ஐந்தாகத் தொகுத்தார். அவை:-

1. நேரடியாகத் தற்பாதுகாப்புக்கு உதவும் நடவடிக்கைகள்.
2. மறைமுகமாகத் தற்காப்புக்கு வேண்டிய வாழ்க்கைக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் செயல்கள்.
3. பிள்ளைகளை வளர்க்கவும் பழக்கவும் தேவையான செயல்கள்.
4. சமூக-அரசியல் தொடர்புகளை நன்முறையிலமைக்கும் நடவடிக்கைகள்.
5. ஒய்வு நேரத்தில் மகிழ்ச்சியும் திருப்பதியும் தரும் நடவடிக்கைகள்.

இந் நடவடிக்கைகளுடன் பொருத்தமுடையதாய் அவற்றை நிறைவுசெய்வதற்கு உதவுவதாய் செயற்படும் கல்வியே பொருண்மையுடையதாக இருக்கும், அதுவே வாழ்க்கைப் பொருத்தப்பாடுடைதாகவும் அமையும். இன்று நாம் வழங்கும் கல்வியை இக்கண்ணோட்டத்தில் பரிசீலனை செய்தல் பயனுடையதாகும்.

நாம் அளிக்கும் கல்வியானது அறிவை வளர்ப்பதாக இருப்பது மிகவும் முக்கியமாகும். ஆனால் அந்த அறிவானதுவெறுமனே தேக்கக் கருத்துக்களைக் கொண்டதாக இருக்கக் கூடாது. 'உவைற் கெட்' என்ற அறிவியலாளர் கூறியது போல தேக்கக் கருத்துக்களை உள்ளத்தில் பெறப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட, ஆனால் சோதிக்கப்படாத, பயன் படுத்தப்பாடாத கருத்துக்கள்) கொண்ட கல்வி பயனற்றதுமட்டுமல்லாமல், தீங்கை யும் விளைவிக்கும். கடந்த காலத்தைப் பற்றிய அறிவு நிகழ்காலத்தில் எமக்கு உதவும் பயனையளிக்கவேண்டும். அறி வினைப் பயன்படுத்தும் கலையை / திற னைப் பெறுவதே கல்வி. அதைச் செய் யாத எந்தக் கல்வியமைப்பும் பயனற்றதே யாகும்.

கல்வியின் வழியில் கலாசார மேம் பாடு உயர்வதாகக் கொள்வது பொது நியதி. ஆனால், 'கலாசாரம்', என்பதன் பொருள் என்ன? அது எதனைக் குறித்து நிற்கின்றது? விஷயஞானம் மட்டும் கலா சாரமாகாது. சிந்தனையின் ஓட்டம், அழ குணர்ச்சி, உருகும் உள்ளம் என்பவற்றின் கலவையையே கலாசாரம் எனலாம். இவை யில்லாத துண்டும் துணுக்குமான தகவற் குவியல் கலாசாரத்தை வளர்க்கமுடியாது. எந்தச் சமூகத்தின் எதிர்காலமும் பண் பாடுசெறிந்த அடித்தளத்தையே உறுதி யாகப் பற்றி நிற்கும். இந்தக் கண்ணோட் டத்தில் நாம் இன்று செயற்படுத்தும் கல்வியின் வெளிப்பாடு எத்தகையதாக இருக்கின்றது என்பது எல்லோரினதும் சிந் தனைக்குரிய அறைகூவலாகும்.

எமது மாணவர்க்கு அளிக்கப்படும் கல் விக்கும் அவர்கள் அதற்குப்பின்னர் நடத் தப்போகும் வாழ்க்கைக்குமிடையே பொருத் தப்பாடு இருக்கின்றதா என்பது எண்ணிப் பார்க்கவேண்டியதாகும். ஜோண் டூயி, மகாத்மாகாந்தி போன்ற சிந்தனையாளர் கள் கல்வி வாழ்க்கைத் தொடர்புடையதாக இருக்கவேண்டியதன் அவசியத்தை வலியு றுத்தியதை நாம் மனதிற்கொண்டேயாக வேண்டும். மாணவர்களது வாழ்க்கையோடி ணைந்த அநுபவங்களை அடிப்படையாகக் கொள்ளாதுகல்வியில் அவர்கள் ஓர் அர்த்தத் தையும் காணமாட்டார்கள். பொருண்மை விளங்காத/இல்லாத பள்ளிக்கூடக் கல்வியில் மாணவர்க்கு நாட்டம் இல்லாமற்போவது இயல்பானதேயாகும். அது மாணவரிடையே இடைவிலகற் பிரச்சினைக்கு ஏதுவாகும் என்பது 1972 இன் கல்வியின் புதிய பாதை யிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நினைவு கொள்ளத்தக்கது. இதற்கேற்பக் கல்விப் பொருளைத் திட்டமிடக்கூடாதா / திட்ட மிடமுடியாதா எனப் பொறுப்பிலுள்ளவர் கள் ஏன சிந்திக்கக்கூடாது?

இத்தொடர்பில் கலைத்திட்டம் மத்திய மட்டத்தில் தீர்மானிக்கப்படுவதன் பொருத் தப்பாட்டைச் சிந்தனையிற்கொள்வது நன்று. கல்வியை வழங்குவதான செயற் பாட்டில் அரசு பொறுப்பினை ஏற்றுக் கொண்டுள்ள நிலையில் என்ன வகையிலான கல்வி வழங்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை அரசுக்கே இருக்க வேண்டும் என்ற வாதம் முன்வைக்கப்படு வதுண்டு. பொதுக்கொள்கைகள், இலக்கு கள், தரங்கள் என்பன சட்டாயமாக உறு திப்படுத்தப்பட வேண்டும். அதற்குரிய அமைப்பு ' அரசு ' தான் என்பதை மறுக்க முடியாது. ஆனால், அதற்குமப்பால் வழங் கப்படும் கல்வியின் பொருளடக்கத்தை முடிவு செய்வதற்கு உள்ளூர்த் தேவைகளை யும் கருத்திற்கொள்வது வரவேற்கத்தக்கது. இதற்குத் தேவையான தலைமைத்துவ மும் அதன் அதிகார அமைப்பும் உள்ளூர் மட்டத்தில் இருக்கவேண்டும். அதிகாரப் பரவலாக்கம், பன்முகப் படுத்தல் என்றெல் லாம் பேசப்படும் இந்நாட்களில் இது நியா யபூர்வமான ஒரு கருத்து என்பதை எவரும் மறுக்கமுடியாது. □

---


**உசாத்துணைகள்:**

R. Rusk, *Doetrines of the Great Educators.*

A.N. Whitehead, *Aims of Education* UNESCO, *Fundamentol Human Rights.*

கல்வி அமைச்சு, இலங்கை, *கல்வியின் புதிய பாதை.*

புறநானூறு

வெற்றிவேற்கை

திருக்குறள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகநானூறு தரும் சமயச் செய்திகள்

பேராசிரியர் அ. சண்முகதாஸ்

## 0: முன்னுரை

தமிழிலே தோன்றிய மிகப் பழைய இலக்கியங்களைச் சங்க இலக்கியங்கள் எனக் கூறுவது மரபு. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்னும் பதினெட்டு நூல்கள் இவ்விலக்கியங்களாகும். இவற்றுள் எட்டுத்தொகை நூல்களாவன: குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, கலித்தொகை, புறநானூறு, பதிற்றுப்பத்து பரிபாட்டு என்பனவாகும். பத்துப்பாட்டு நூல்களாவன: திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெருபாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை), பட்டினப்பாலை, நெடுநல்வாடை, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, மதுரைக் காஞ்சி என்பனவாகும். அகத்திணை பற்றியும் புறத்திணைபற்றியும் கூறும் இச்சங்கப் பாடல்கள் கி. மு. 3 ஆம் நூற்றாண்டுக்கும் கி. பி. 3 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்திலே பாடப்பட்டனவாகும். இப்பாடல்களிலே அக்காலத் தமிழர்களுடைய சமயந் தொடர்பான பலசெய்திகள் காணப்படுகின்றன. சு. வித்தியானந்தன் மா. இராசமாணிக்கனார், பி. ரி. சிறினிவாசஐயங்கார், க. கைலாசபதி போன்ற அறிஞர்கள் இச்செய்திகள் பலவற்றைத் தத்தம் நூல்களிலே குறிப்பிட்டுள்ளனர். பண்டைத்தமிழருடைய வழிபாட்டிடங்கள், வழிபட்ட கடவுளர், வழிபாட்டு நடைமுறைகள், வழிபாடு தொடர்பான விழாக்கள், நம்பிக்கைகள் ஆகியன பற்றிய செய்திகளை இப்பாடல்கள் மூலம் நாம் பெறமுடிகின்றது. சங்கஇலக்கியங்களுள் ஒன்றாகிய அகநானூறு என்னும் நூலிலே இடம் பெறும் நானூறு செய்யுட்களை நுணுகி ஆராய்ந்து அவை பண்டைத் தமிழருடைய சமயந் தொடர்பாகக் குறித்துச் செல்லும் செய்திகளைத் தொகுத்து விளக்கங்களுடன் தருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இவ்வாறு பெறப்படுஞ் செய்திகள் பண்டைத் தமிழர் வழிபாடு பற்றி ஆராய்வார்க்குத் தரவுகளாக அமையவல்லன.

## 1. சிவ வழிபாடு

சிவ வழிபாட்டின் தொன்மைபற்றி இங்கு விரிவாக எடுத்துக் கூற வேண்டிய அவசியமில்லை. சிந்துவெளி நாகரிக காலத்திலிருந்தே இந்திய உப கண்டத்தில் சிவ வழிபாடு நிலவி வந்துள்ளது. தமிழ் நாட்டின் தொன்மை இலக்கியங்களிலும் இவ் வழிபாடு பற்றிய செய்திகள் காணப்படுவது ஆச்சரியமில்லை. அகநானூற்றுச் செய்யுட்கள் தருஞ் செய்திகளை இங்கு ஆராய்வாம். அக நானூறு 287 - ஆம், 307 ஆஞ் செய்யுட்களிலே 'கந்து' பற்றிய செய்தி காணப்படுகின்றது.

''மரையேறு சொறிந்த மாத்தாட் கந்தின்
கூரையிவர் பொதியில் அங்குடிச் சீறூர்
நாட்பலி மறந்த நரைக்கண் இட்டிகை''
(287 : 4 – 6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஆண்மரை உராய்ந்தமையால் அசைந்து கொண்டிருக்கும் நிலையினதாகிய கரிய அடிபொருந்திய கந்தினையுடைய, சுரைக் கொடி படர்ந்திருக்கும் ஊர் அம்பலத் தின் கண்ணே, அழகிய குடியிருப்பினை யுடைய சிற்றூரிலே உள்ளவர்கள் நாள் தோறும் இடுகின்ற பலியினையும் இடாது மறந்தமையால், அவிடத்துப் பலிபீடமும் வெளிதாகிக் கிடக்கும்.'

" ...... புதலிவர் பொதியிற்
கடவுள் போகிய கருந்தாட் கந்தத்து"
( 307 : 11 – 12 )

'புதர்கள் மண்டிக்கிடக்கும் இயல்பினதாயும் உள்ள பொதியிலிடத்தே, கடவுள் வழி பாடு இல்லாதுபோய்க் கிடக்கும் கருத்த அடியினையுடைய தூணினிடத்தே,'

மேற்காட்டிய இரு செய்யுட்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள 'கந்து' வேறு பல சங் கச் செய்யுட்களிலும் இடம்பெற்றுள்ளது. 'கந்து, என்பது தெய்வம் வீற்றிருக்கும் கல் அல்லது குற்றியாகும். இவ்வாறு குற் றியினையோ சிறு தூணையோ நட்டு, இதன் பால் தெய்வம் எய்திதாகக் கொண்டு வழி படுவது சங்ககாலத் தமிழர் மரபாகும். இதுவே பிற்காலத்திலே சிவலிங்க வழிபா டாக வளர்ந்தது எனக் கொள்ள இட முண்டு. இத்தகைய கந்தினை வாழ்த்திப் பாடுதலையே தொல்காப்பியர் 'கந்தழி' என்னுஞ் சொல்லாலே குறிப்பிட்டிருக்க வேண்டும். அகநானூறு கடவுள் வாழ்த் தும் பாடல் சிவனைப் பற்றியதேயாகும். இப்பாடலைப் பாரதம் பாடிய பெருந் தேவனார் பாடினார் எனக் கூறப்பட்டுள் ளது. சிவனுடைய கோல அழகினையும் அருட்சிறப்புக்களையும் இப்பாடல் குறிப் பிட்ட போதிலும். இது சங்ககாலத்திலே இயற்றப்படாத காரணத்தாலே, இதனை ஆய்வுக்கு எடுக்கவில்லை. 181 ஆம் செய் யுளிலே, நான்மறை முதுநூல் முக்கட் செல்வன் ஆலமுற்றம்' என்று சிவன் பற் றிய செய்தி கூறப்படுகின்றது. ஆலமுற்றம் என்ற பதியிலே சிவனை வணங்கியதாக இதன் மூலம் அறிகிறோம். நான்கு மறை களாகிய பழைய நூலினை அருள் செய்த முக்கண்களுடைய பரமனது ஆலமுற்றம் என்று கூறப்படுவதால், கடவுளருள் முழுமு தற் கடவுள் சிவனே என்ற கருத்தும், அப் பெருமானே நான்கு வேதங்களையும் அரு ளிச் செய்தனன் என்ற கருத்தும் அகநானூ றுச் செய்யுட் காலத்திலே மேலோங்கிவிட் டன என்பதையும் அறியமுடிகின்றது.

இன்னொரு செய்யுளிலே (360:6-9) அந்திவானச் செம்மையும் கடலின் நீல நிறமும் ஒன்றாகச் சேர்ந்திருக்கும் காட்சி சிவனும் உமையுமாகிய இருபெருந் தெய் வங்களின் உருவங்கள் இயைந்த தோற்ற மாக உள்ளது எனக் கூறப்பட்டுள்ளது. இவ்விரு பெருந் தெய்வங்களும் சிவனும் திருமாலும் எனவும் சில உரைகாரர் கொண்டுள்ளனர்.

"வெருவரு கடுந்திறல் இருபெருந் தெய்-
வத்து
உருவுடன் இயைந்த தோற்றம் போல
அந்தி வானமொடு கடலணி கொளாஅ
வந்தது மாலை.,

'அஞ்சத்தகும் மிக்க வலிமையினையு டைய இரண்டு பெருதெய்வங்களான சிவ மும் சக்தியும், ஓர் உருவத்தே உடன் பொருந்திச் சிவசக்தியாக விளங்கும் தோற் றத்தைப்போல, அந்திவானத்துடன் கட லும் இணைந்து அழகு கொண்டது.

இச்செய்யுளடிகள் மூலம் சிவனுடைய அர்த்தநாரீஸ்வரத் தோற்றம் பற்றிய செய்தி அறிய முடிகின்றது.

## 2. முருக வழிபாடு

சங்கத் தமிழருடைய சிறப்பான தெய் வங்களுள் முருகப்பெருமான் முக்கிய இடத் தைப் பெறுகின்றார். பேராற்றலையுடைய இத் தெய்வம் பேராற்றல் மிக்க மன்ன ருக்கு உவமையாகக் கூறப்படுவதுண்டு. அக நானூறு 2 ஆம் செய்யுளில் "முருகன் நற் போர் நெடுவேள் ஆளி" என போராற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றலையுடைய நெடுவேள் ஆவி என்னும் மன்னனுக்கு முருகப்பெருமான் உவமையாகக் கூறப்படுகிறார். பகவத் கீதையில் ''பார்த்த, புரோஹிதர்களுக்குள் முக்யனானப்ருஹஸ்பதி என்று என்னை அறி. ஸேனாபதிகளுக்குள் ஸ்கந்தனும் நானே. ஜல முள்ளவைகளுக்குள் ஸமுத்ரமும் நானே'' என்று கண்ணன் கூறுமிடத்திலே. போராற்றலுடைய ஸேனாதிகளுக்குள் சிறந்தவன் ஸ்கந்தன் என்று கூறும் விடயம இவ்விடத்திலே மனங்கொள்ளத் தக்கதாகும்.

காதல்வயப்பட்ட கன்னிப் பெண்களின் உடல் வேறுபாட்டினையும் உளவேறுபாட்டினையும் அறிந்துகொள்ளும் தாய்மார், அவர் காதல்நிலையினை அறியாது ஏதோ தெய்வக் குறைபாடு ஏற்பட்டுள்ளதென எண்ணி, முருகனுக்குப் பலியிட்டு வழிபாடு செய்யுஞ் செய்தி சங்ககால அகத்திணைச் செய்யுட்கள் பலவற்றிலே இடம்பெறுகின்றது. அகநானூற்றிலும் இச்செய்தி 22, 98, 272, 382, 388 ஆகிய செய்யுட்களிலே கூறப்பட்டுள்ளது. 22 ஆம் செய்யுளிலே ''வணங்காதவரைத் தேய்த்து ஒழித்த பலவாகிய புகழ்களைக் கொண்டவன். பெரிய கையினையுடைய நெடுவேளாகிய முருகன். அவனைப் போற்றினால் இவள் துயரம் தணிகுவாள் என, அவ்வேளை அவர்கள் எண்ணினர். அறிவு வாய்த்தலையுடைய முதுபெண்டிர்களும் அதுவே உண்மையாம் என்று கூறினர். ஆகவே, முருகனை வேட்டு வெறியாடும் களம் நல்ல முறையிலே அமைக்கப் பெற்றது. வேலினை நிறுத்தி அதற்குக் கண்ணியும் சூட்டினர். வளம் பொருந்திய கோவிலிலே ஆரவாரம் உண்டாகுமாறு வேலனின் புகழைப் பாடினர். வேலனுக்குப் பலிக் கொடையும் இட்டனர். அழகிய செந்தினையைக் குருதியுடன் கலந்து தூவினர். இவ்வாறு அந்த அச்சம் பொருந்திய நடுநாள் இரவிலே அவர்கள் முருகனை வரவழைத்தனர்'' என்று அச்செய்தி விவரங்கள் குறிக்கப்பெற்றுள்ளன.

இது போலவே 382 ஆம் பாடலில்

''கடம்புகொடி யாத்துக் கண்ணி சூட்டி
வேறுபல் குரல் ஒருதூக்கு இன்னியம்
காடுகெழு நெடுவேட் பாடுகொளைக் கேற்ப
அணங்கயர் வியன்களம் பொலியப் பையத்
தூங்குதல் புரிந்தனர் நமர்''

என்று அச்செய்தி குறிப்பிடப்படுகின்றது. 'கடம்பினிடத்தே கொடியினைக் கட்டி, அதற்குக் கண்ணியும் சூட்டிப், பல்வேறு குரலையுடைய ஒரு தூக்கினையுடைய தாளத்தின் இனிய இசையினை முழக்கியவராக, நம்மவர், காட்டிற் பொருந்திய நெடுவேளாகிய முருகப் பெருமானுக்குப் பாடு கொள்ளுதற்குப் பொருத்தமான, வெறியாட்டுச் செய்யும் பரந்த களம் சிறப்புற, மெல்ல வெறியாடுதலை நிகழ்த்தலையும் விரும்பினர்'' என்பது மேற்காட்டிய செய்யுளடிகளின் பொருளாகும்.

முருகன் வீற்றிருக்கும் ஆறுபடை வீடுகளுள் திருச்சீரலைவாயும் திருப்பரங்குன்றமும் அடங்கும். இவ்விரு தலங்களும் முருகன் உறையும் இடங்களாக அகநானூறு காட்டுகின்றது. ''திருமணி விளக்கின் அலைவாய்ச் செருமிகுசேஎயொடு'' (266) என்று திருச்சீரலைவாயும்.

''சூர்மருங்கு அறுத்த சுடரிலை நெடுவேல்
சினம்மிகு முருகன் தண்பரங் குன்றத்து
அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை''

என்ற செய்யுளடிகளால் (59: 10 – 12) திருப்பரங்குன்றமும் குறிக்கப்படுகின்றன.

முருகனாலும் விரும்பப்படும் அழகிய மாலை என்பதை ''முருகு முரண் கொள்ளும் உருவக்கண்ணியை'' (288 : 4) என்றும், முருகக் கடவுளின் மார்பினிடத்தே விளங்கும் ஆரத்தைப் போலச் செவ்வானத்திலே பொருத்தி, மீனை அருந்தும் பசிய கால்களையுடைய கொக்கினம் வரிசையாகப் பறத்தலை விரும்பி மேலெழுந்திடுகின்ற காட்சியினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நெடுவேள் மார்பின் ஆரம்போலச்
செவ்வாய் வானம் தீண்டிமீன் அருந்தும்
பைங்காற் கொக்கினம் நிரைபறை உகப்ப"
(120: 1 - 3)

என்றும் பாடல்கள் குறிப்பிடுகின்றன.

### 3. தெய்வம் உறையும் இடங்கள்

தமிழ் நாட்டிலே கோயில்கள் பல தோன்றுவதற்கு முன்னே கடவுளர் உறையும் இடங்களென மரங்கள், காடு, மலை, ஆறு, கடல் ஆகியன வழிபடுமிடங்களாகக் கொள்ளப்பட்டன. இயற்கையுடன் தொடர்புற்ற வழிபாட்டினை இது புலப்படுத்துகின்றது. இத்தகைய இடங்களிலேயே பிற்காலத்தில் இந்துக் கோயில்கள் அமைந்துள்ளமையை இங்கு நாம் மனங்கொள்ள வேண்டும். ஆலக்கோயில், கொகுடிக்கோயில், மலைக்கோயில் போன்றவற்றை உதாரணங்களாகக் காட்டலாம். அகநானூற்றுச் செய்யுட்கள் பல கடவுளர் உறையும் பல்வேறு இடங்களையும் குறித்துக் கூறுகின்றன. அவை, சுவர், மரம், நடுகல், மலை ஆகியனவாகும். கந்திலே தெய்வம் உறைவது பற்றி சிவ வழிபாட்டைப் பற்றிக் கூறிய பகுதியிலே குறித்துள்ளோம். காடு (345), கடல் (370) ஆகியவற்றிலே உறையும் தெய்வங்கள் பற்றிப் 'பெண் தெய்வம்' என்ற பகுதியிலே பின்னர் குறிப்பிடப்படவுள்ளன.

சுவரிலே கடவுளுருவம் வரைந்து அதனை வழிபடும் வழக்கம் சங்ககாலத் தமிழகத்திலே பரவலாகக் காணப்பட்டது. அகநானூற்றுச் செய்யுட்களுள் இரண்டு இவ்வழக்கினைக் குறிப்பிடுகின்றன. 167 ஆம் பாடலில்,

"எழுதணி கடவுள் போகலின் புல்லென்று
ஒழுகுபலி மறந்த மெழுகாப் புன்றினை"

என்று குறிப்பிடப்படுகின்றது. சுவரிலே எழுதி அழகு செய்யப்பெற்ற கடவுளின் உருவமும் மறைந்துபோய் விட்டதனால் பொலிவு இழந்தும், இடையறாது நிகழும் பலியும் இல்லாமற் போனதனால் மெழுகப்படாததாகவும் திண்ணை விளங்கியது என்னுஞ் செய்தியினை இச்செய்யுள் தருகின்றது.

"................ .... கேழ்கொளக்
காழ்புனைந்து இயற்றிய வனப்பமை
நோன்கவர்ப்
பாவையுங் பலயெனப் பெறாஅ ........"

என்பன 366 ஆஞ் செய்யுளடிகள். நிறம் பொருந்திய முகத்துவடம் முதலியன புனைந்து இயற்றிய அழகமைந்த வலிய சுவரின்கண் விளங்கும் பாவைகளும் பலியென ஏதும் பெறாவாயின என்று இச்செய்யுளடிகள் சுவரில் உறையும் தெய்வங்கள் பற்றி கூறுகின்றன.

மரத்திலே தெய்வம் உறைகின்றது என்னும் நம்பிக்கை இன்றும் தமிழர்களிடையே நிலவுகின்றது. இன்று தமிழகத்திலும் ஈழத்திலும் மரவணக்கத்தினை அடிப்படையாகக் கொண்ட நம்பிக்கைகள், மரங்களை அண்டிய கோயில்கள் ஆகியன காணப்படுகின்றன. வகை மாதிரிக்கு இத்திமரத்தை அண்டிய கோயில் பற்றிய விவரங்களைக் குறிக்கும் எமது இத்திமரத்தாள் (1985) என்னும் நூலிலே குறிக்கப்பட்டுள்ள செய்திகளை நோக்குக. அகநானூறும் பண்டைத் தமிழருடைய மரவணக்கம் பற்றிய செய்திகளைத் தருகின்றது. 270 ஆஞ் செய்யுலிலே இடம்பெறுஞ் செய்தியினை யாம் ஏற்கனவே *இத்திமரத்தாள்* நூலிலே விளங்கியுள்ளோம். அதனை இங்கு தருகிறோம்: (பக். 19):

"கடவுள் மரம் தூய்மையுடையதாகக் கருதப்பட்டது. அம்மரத்திலே வாழும் பறவைகள் தூய்மைநிலை பேணுவனாக அகநானூற்றுப் பாடலொன்றிலே குறிப்புக் காணப்படுகின்றது.

"கடவுள் மரத்த முள்மிடை குடம்பைச்
சேவலொடு புணராச் சிறுகரும்பேடை"

ஊரின் நடுவிலே மரம் ஒன்று கடவுளாக மதித்து வழிபடப்படுகிறது. அந்த மரத்திலே ஆண்பறவையும் பெண்பறவையுமாகச் சேர்ந்து முட்டையிட்டுக் கூட்டிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழுகின்றன. கடவுள் மரமாகையால் சிறிய கரும்பேடையானது சேவலுடன் உடலுறவு கொள்ளாதிருக்கின்றது. தூய்மை, காவல், செழுமை என்னும் பண்புகள் மரவழிபாட்டுடன் பெரிதும் தொடர்புறுத்தப்பட்டு, பல வழிபாட்டு நடைமுறைகளும் இன்று ஏற்படுத்தப் பட்டுள்ளன. மாதவிலக்கு, தொற்று நோய், துடக்குப் போன்ற சந்தர்ப்பங்களிலே கடவுள் மரவழிபாடு தவிர்க்கப்பட்டது

இன்னொரு செய்யுளிலே (309) மறவர் தெய்வம் குடிகொண்டிருக்கும் பருத்த அடியினையுடைய வேம்பிற்குக் கொழுத்த ஓர் ஆவினைக் கொன்று பலியிட்டு, அதன் குருதியைத் தூவித் தெய்வத்தைப் போற்றி வழிபட்டனர் என்ற செய்தி,

" தெய்வஞ் சேர்ந்த பராரை வேம்பிற்
பொழுப்பா எறிந்து குருதி தூஉய் "

என்னும் அடிகளாலே கூறப்படுகின்றது. ஓமை மரத்திலே தெய்வம் உறையும் செய்தியினை " சூர்முதல் இருந்த ஓமையம் புறவின் (297) " என்ற செய்யுளடி கூறுகின்றது. முருகக்கடவுள் மலையிலே உறைதல் பற்றிய செய்தியினை

" தெறலரும் மரபின் கடவுட் பேணிக்
குறவர் கந்த சந்தின் ஆரமும் "

என்னும் செய்யுளடிகள் (13:3-4) கூறுகின்றன. பொதியில்மலையில் உள்ள அடியார்களைத் துன்புறுத்தலில்லாத முருகவேளை வழிபட்டு குறவர்கள் கொண்டுவந்து தரும் சந்தனமாகிய ஆரம் என்பது அச்செய்யுளடிகளின் பொருளாகும்.

நடுகல் வழிபாடு தொன்றுதொட்டுத் தமிழர்களிடையே நிலவி வருவதொன்றாகும். இந்நடுகல் வழிபாடு வீரவணக்கம் பிதிர் வணக்கம் என்பன வற்றுடன் தொடர்புற்றதாயுள்ளது. இவ்வழிபாடு பற்றிச் சங்க இலக்கியங்களிலே பெருமளவு குறிப்புக்கள் காணப்படுகின்றன. இறந்த வீரமறவர்களைப் புதைத்து அதன்மேல் கற்குவிய லிட்டு நடுகல் அமைப்பது பண்டைய வழக்கம். இக்கற்குவியல் 'பதுக்கை' எனப்பட்டது. இதன்மேலே நடப்பட்ட கல்லிலே அம்மறவன் தெய்வமாக உறைகிறான் எனப் பண்டைத் தமிழர் நம்பினர் (இதுபற்றிய விபரங்களுக்குப் பார்க்கவும் இரா. நாகசாமி 1968, 1972; புலவர் செ. இராசு 1977; அ. சண்முகதாஸ் 1987, 1987). அகநானூறும் நடுகல் வழிபாடு பற்றிய பல செய்திகளைத் தருகின்றது. யாருக்காக நடுகல் அமைக்கப்பட்டதென்பதை " விழுத்தொடை மறவர் வில்லிட வீழ்ந்தோர் எழுத்துடை நடுகல் " என 53 ஆம் செய்யுள் கூறுகின்றது. அவ்வாறு அமைக்கப்பட்ட நடுகற்கள் எவ்வாறு அலங்கரிக்கப்பட்டன என்பதையும் என்ன பலி கொடுக்கப்பட்டதென்பதையும், பின்வருஞ் செய்யுட்கள் கூறுகின்றன:

" ........ .................. .......... ஆடவர்
பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல் "
(139:9-11)

(இ-ள்) " வீரர்களின் பெயரும் ஆண்மையும் எழுதிப், பீலிசூட்டிப் போற்றிய, விளங்கும் நிலை யினையுடைய நடுகற்கள் செல்லும் வழிதோறும் விளங்கும் "

" நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்
பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல் "
(67:8-10)

(இ-ள்) " சிறந்த போரிலே வீழ்ந்துபட்ட மானம்மிக்க வீரமறவர்களுடைய பெயர்களையும் பொறித்து நெறிதோறும் மயிற் பீலி சூட்டிய நடுகற்களா னவை விளங்கும். "

"வில்லேர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்
வல்லாண் பதுக்கைக் கடவுட் பேண்மார்
நடுகற் பீலிசூட்டித் துடிப்படுத்துத்
தோப்பிக் கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும்"
(35:6-9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ - ள் )

"வில்லையே ஏராகக் கொண்டு வாழும் வாழ்க்கையினை யுடைய, சிறந்த அம்பினையுடைய சுரந்தை வீரர்கள் தங்கள் வலிய ஆண்மையாலிட்ட பதுக்கைக் கண்ணுள்ள கடவுளை வழிபடற்கு அந்நடுகல்லில் மயிற்றோகைகளைச் சூட்டி, துடியை அடித்து, நெல்லாலாக்கிய கள்ளொடு செம்மறிக்குட்டியைப் பலி கொடுக்கும்."

நடுகற்கள் மறைவிலேயிருந்து அம்பு எய்த காரணத்தால், அவ்வம்புகள் அக்கற்களையும் உராய்ந்து சென்றதால், பக்கத் தேய்ந்தனவாகவும், பெயரும் பீடும் பொறித்த எழுத்துக்களையுடையனவாகவும் அவை தோன்றின. 297 ஆஞ் செய்யுள் விவரிக்கின்றது.

மலைகளிலே தெய்வம் உறைவதாகப் பண்டைத்தமிழர் நம்பி வழிபட்டனர். சங்க இலக்கியங்கள் இவ்வழிபாடுபற்றிப் பல செய்திகள் தருகின்றன. மலைவழிபாடு பிற நாடுகளிலும் காணப்படுவதொன்றாகும். தமிழருடைய மலைவழிபாட்டுடன் யப்பானியருடைய மலைவழிபாட்டினைப் பிறிதொரு கட்டுரையிலே இக்கட்டுரையாளர் விவரித்துள்ளார் ( பார்க்கவும், Sanmugadas 1987 ) தமிழ்நாட்டு மலைகளுள் கொல்லி மலை வழிபாட்டுக்குப் பெயர்போனதொன்றாகும். அங்கு கடவுட்பாவை எழுதப்பட்டிருந்த செய்தியினைப் பின்வரும் அகநானூற்றுச் செய்யுட்கள் குறிக்கப்படுகின்றன.

" ............... ... ....... . வென்வேல்
களிறுகெழு தானைப் பொறையன் கொல்லி
ஒளிறுநீர் அடுக்கத்து வியலகம் பொற்பக்
கடவுள் எழுதிய பாவை "

( 62:12-15 )

( இ-ள் )

" வெல்லும் வேலினையும் யானைகள் மிக்க படையினையுமுடைய சேரனது கொல்லி மலையின் விளங்கும் அருவி நீரினையுடைய பக்க மலையின் அகன்ற இடம் அழகுற, தெய்வமாக அமைந்த கொல்லிப் பாவை "

" ... ........... .................... கொல்லி
நிலைபெறு கடவுள் ஆக்கிய பலர்புகழ்
பாவை ... ............ ........ ..... "

( 209 : 15 - 16 )

( இ-ள் )

" கொல்லிமலையிலே, நிலைபெற்ற தெய்வ தச்சனால் நிருமிக்கப்பெற்ற, பலரும் புகழும் பாவை "

பெண்தெய்வங்களாகிய சூர், அணங்கு ஆகியன மலைகளிலே உறைவனாகப் பல செய்யுட்கள் அமைந்துள்ளன. அவை 'பெண் தெய்வம்' என்ற பகுதியிலே விளக்கம் பெறுகின்றன.

## 4. பெண்தெய்வ வழிபாடு

பெண்தெய்வங்கள் கொற்றவை செல்வி, அணங்கு, சூர், பாவை என்ற பெயர்களாலே அழைக்கப்பட்டன. கடலிலே உறையும் பெண்தெய்வம் பற்றிக் " கடல் கெழு செல்வி கரைநின்றாங்கு " ( 370:12 ) என்னும் அகநானூற்றுப் பாடலடி குறிக்கின்றது. ஏழிற்குன்றம் என்று ஓர் இடம் பண்டைத் தமிழ்நாட்டிலே இருந்தது. அக்குன்றத்தினை ஒரு புலவன் சிறப்பித்துப் பாடினான். அவ்வாறு பாடிய அப்புலவர் கானமர் செல்வியாகிய கொற்றவையை வணங்கி அருள் பெற்றதாலே, வெண்மையாக கால்களையும் பலவான படைகளையுமுடைய குதிரைகளைப் பெற்றான். என்று செய்தி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"............ ........ ஓங்குபுகழ்க்
கானமர் செல்வி யருளலின் வெண்கால்
பல்படைப் புரவி எய்திய தொல்லிசை
நுணங்குநுண் பனுவற் புலவன் பாடிய
இனமழை தவழும் ஏழிற் குன்றத்து."
(345:3 – 7)

என்னுஞ் செய்யுளடிகளாலே கூறப்பட்டுள்ளது.

தாக்கி வருத்தஞ் செய்யும் பெண்தெய்வங்களான அணங்கு, சூர்பற்றிச் சங்க இலக்கியங்கள் பரவலாகக் கூறுகின்றன. பழைமை வாய்ந்த தொல்பதியின் ஊர்ப்புறங்கள் தாமே தாக்கி வருத்தும் பல அணங்குகளை உடையன என்று "மூப்புடைமுதுபதி தாக்கணங்குடைய" (அகம் 7 : 4) என்னுஞ் செய்யுளடி விவரிக்கின்றது. அணங்கு உறையும் இடங்களென மலை, நீர், பெண்களின் முலை ஆகியன பற்றி அகநானூறு கூறும். "கடுந்திறல் அணங்கின் நெடும் பெருங்குன்றத்து" (378:22) என்றும், "அணங்குடை உயர்நிலைப் பொருப்பின் கவாஅன்" (338 : 6) என்றும் அணங்கு மலையில் உறையும் செய்தி கூறப்படுகின்றது. "அணங்குடை முந்நீர்" (207 : 1) என்று நீர்நிலைகளிலே அணங்குறைவதுபற்றிக் கூறப்படுகின்றது. பனித்துறையிலே உறையும் அணங்கினைத் தாய் தன் ஆயமகளிருடன் வணங்கிச் சிறப்புச் செய்ததை,

"அணங்குடைப் பனித்துறை கைதொழு
தேத்தி
யாயும் ஆயமொடு அயரும்"
(240 : 8 – 9)

என்னுஞ் செய்யுளடிகள் குறிப்பிடுகின்றன. பெண்களின் மார்பகத்து முலைகளிலே அணங்கு குடிகொண்டிருக்கும் என்ற செய்தி "அணங்கென உருத்த நல்வரல் இளமுலை" (161 : 12 – 13) என்னும் பாடலடிகளாலே பெறப்படுகின்றது. தலைவியினுடைய நோக்கு அணங்கினுடைய நோக்குப் போலிருந்தது என "அணங்கென உருத்த நோக்கின்" (319 : 6) என்னுஞ் செய்யுளடி கூறும். இத்தகைய செய்திகளையும் கற்புப் பற்றிச் சங்க இலக்கியங்களிலே வருஞ் செய்திகளையும் தரவுகளாகக் கொண்டு, பெண்கள் தெய்வீக சக்தியுடையவர்களாகப் பண்டைத் தமிழகத்திலே கருதப்பட்டனர் என ஜோர்ஜ் ஹார்ட் என்பவர் (George L. Hart III, 1973) கருத்துத் தெரிவித்துள்ளார். அணங்கு பேய்த்தன்மையுடையதாகவும் குறிக்கப்பட்டுள்ளது. "கல்வை நல் அணங்கு உற்ற இவ்வூர்க். கொடிதறி பெண்டிர்" (20 : 11 – 12) என்னுஞ் செய்யுளடிகளுக்கு "அவர்கூறலாகிய நற்பேய் பிடித்திருக்கும் இவ்வூர்க் கொடுமை கூறலே அறியும் பெண்டிர்" என உரை கூறப்படுவதை நோக்குக.

சூரர மகளிர் இன்னொரு வகையான தாக்குந் தெய்வங்களாகும். தலைவியை முதன்முதல் எதிர்கொண்ட தலைவன்,

"சூரர மகளிரின் நின்றநீ மற்று
யாரையோ எம்அணங் கியோய் உண்கு"
(32 : 7 – 8)

(இ–ள்) "சூரர மகளிர்போல நின்ற நீ
யாரோ? எம்மை
வருத்தினவளே நின்னை நுகர்வேன்"

என்று கூறுகிறான். சூரர மகளிர் மலையிலே உறைவதாக

"நேர்கொள் நெடுவரைக் கவாஅன்
சூரர மகளிர்"
(162 : 24 - 25)

என்னுஞ் செய்யுளடிகள் கூறுகின்றன. அணங்குகளும் சூரர மகளிரும் மலைகளிலே ஒருங்கு உறைவதாகப் பின்வருஞ் செய்யுட்கள் கூறுகின்றன.

"குருடைச் சிலம்பில் சுடர்ப்பூ வேய்ந்து
தாம்வேண் டுருவின் அணங்குமார் வருமே"
(158: 8-9)

(இ–ள்) "தெய்வங்கள் தங்கியிருத்தலையுடைய மலைச்சாரலிலேயுள்ள நம்முடைய தோட்டத்திலே கோங்கு முதலிய சுடர்ஒளி வீசும் பூக்களைச் சூடிக்கொண்டு, தாந்தாம் விரும்பிய உருவினையெல்லாம் எடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டனவாக அணங்குகளும் தமக்குரிய பலியுண்ணுவதற்கு வருவதும் உண்டு.''

''ஆஅய் நல்நாட்டு அணங்குடைச் சிலம்பில்
கவிரம் பெயரிய உருகெழு களாஅன்
ஏர்மலர் நிறைசுனை யுறையும்
சூர்மகள்''

(198: 14-17)

(இ-ள்) ''ஆய் என்பவனது நல்ல நாட்டிலே, தெய்வங்களையுடைய மலைச்சாரல்களிலே 'கவிரம்' என்னும் பெயரையுடைய அச்சம் கெழுமிய பக்கம் மலையிலே, நேரிய மலர்கள் நிறைந்துள்ள சுனையிலே வாழ்பவளான சூரர மகள்''

மலைக்குகைகளிலே வரையர மகளிர் கரந்து உறைவதாக ''கல்லளைக் கரந்த அவ வரையர மகளிரின் அரியள்'' (342:11-12) என்னுஞ் செய்யுளடிகள் மூலம் அறிகிறோம்.

மாங்காட்டிலே பெண் தெய்வங்கள் உறைவதாக அகநானூறு தருஞ் செய்தி இன்றைய 'மாங்காட்டுக் காமாட்சி' வழிபாடுடன் ஒப்புநோக்கற்பாலது. தலைவியினுடைய தந்தையின் காவல் மிகுந்த நிலையினைத் தேவகன்னியர்கள் வாழுகின்ற மலையடுக்கத்திலுள்ள மாங்காடு என்னும் காவல் மிகுந்த ஊரைப்போலுள்ளது என ஒரு செய்யுளிலே குறிப்பிடப்படுகின்றது.

''நனிநோய் ஏய்க்கும் பனிகூ ரடுக்கத்து
மகளிர் மாங்காட் டற்றே துகளறக்
கொந்தோ டுதிர்த்த கதுப்பின்
அந்தீங் கிளவி தந்தை காப்பே''

(288:14-17)

(இ-ள்) ''பெரிய நோய்போலத் துன்பம் மிகச் செய்கின்ற சூரர மகளிர் உறைகின்ற மாங்காடு என்னும் காட்டின்கண் அத்தெய்வத்தின் மலையே ஒப்பதாம்துகள் திரும்படி பூங்கொத்துக்களோடே உதிர்த்து விட்ட கூந்தலையுடைய அழகிய இனிய சொல்லை உடைய தலைவியினது தந்தையினது காப்பிடம்''

## 5. கடவுளுக்குப் பலி

கடவுளை வழிபாடு செய்யும் முறைகள் பற்றி அகநானூற்றுச் செய்யுட்கள் பல தகவல்களைத் தருகின்றன.

''செவ்வழி நல்யாழ் இசையினென் பையென
கடவுள் வாழ்த்திப் பையுள் மெய்ந் நிறுத்
தவர்திறஞ் செல்வேன்',

( 14 : 15 - 17 )

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் குறித்த காலத்தில் வரவில்லை. தலைவியினுடைய நிலையினைக் கண்ட பாணன் ஒன்றும் செய்ய முடியாதவனாய்க் கடவுளை வணங்குகிறான். அவன் கடவுளுக்குத் தன் இசையினையே பலியாகக் கொடுக்கிறான். யாழிலே நல்ல செவ்வழிப் பண்ணினைமெல்லென இசைத்துக்கொண்டு கடவுளை வழிபட்டு, துயரினைக் கொண்ட மெய்யினாய் தலைவனிடம் செல்வேன் என எண்ணிச் செல்வதாக மேற்காட்டிய செய்யுளடிகள் கூறுகின்றன. பாணனுடைய வழிபாடு வீண்போகவில்லை. அவன் செலப் புறப்படத் தலைவனுடைய தேரினைத் தூரத்தே கண்டதாகத் தொடர்ந்து வருஞ் செய்யுளடிகள் கூறுகின்றன. கடவுளை இசையுடனே வழிபடும் வழக்கம் தொன்றுதொட்டே தமிழ் மக்களிடையே காணப்பட்டு வந்துள்ளது என்று கூறுதற்கு இச் செய்யுள் ஆதாரமாகின்றது. கடவுளை நம்பிக் கைதொழுவர்க்கு நல்ல பலன் உண்டு என்பதையும் இது உணர்த்துகின்றது.

தெய்வங்கள் பலியினை ஏற்றுக்கொள்ளும் செய்தியினை ''உயர்பலி பெறூஉம் உருகெழு தெய்வம்'' ( 166 : 7 ) என்னும் பாடலடி தருகின்றது. வேளூர் வாயிலிலமைந்த தெய்வம் உயரிய வழிபாட்டுப் பொருளை ஏற்றுக்கொள்வதாகக் கூறப்பட்டுள்ளது. கடவுளுக்குக் கையுறையாகப் பலிப்பொருள்கள் கொடுக்கப்பட்டன என்று பின்வருஞ் செய்யுள்ளடிகள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" கள்ளுங் கண்ணியும் கையுறை யாக
நிலைக்கோட்டு வெள்ளை நால்செவிக்
கிடாஅய்
நிலைத்துறைக் கடவுட்கு உளப்பட ஓச்சி "
(156:13-15)

(இ-ள்) " நீர்த்துறையிடத்தே நிலை பெற்றுள்ள முருகக்கடவுளுக்கு வழிபாட்டுப் பொருள்களாக கள்ளையும் மலர்மாலைக ளையும் வளைதலின்றி நேரே நிற்கும் கொம் புகளையும் தூங்குகின்ற செவிகளையுமுடைய வெள்ளையாட்டுக் கிடாய் உட்பட வேண் டியவெல்லாம் செலுத்தியும் "

கள்ளு, மலர்மாலைகள் ஆட்டுக்கிடாய் உட்பட்ட பல பொருள்கள் பலியாகச் செலுத்தப்படுகின்றன. ' நிலைத்துறைக் கடவுள் ' என்னுந் தொடர் முருகப்பெரு மானைக் குறிப்பதாயின், மலைமேலன்றி மருதநிலத்தூர்களில் நீர் நிலை மருங்கிலும் முருகப்பெருமானுக்குக் கோயில் அமைந்தி ருந்தது என்னும் உண்மையும் மேற்கண்ட செய்யுளடிகளாலே உணரப்படுகின்றது.

வீட்டிலே வைத்து வழிபடும் தெய்வங் களும் பலியூட்டி வணங்கப்பட்டன என்னுஞ் செய்தி

" ...... ...... ... ...... யாமும்
வல்லே வருக வரைந்த நாளென
நல்லிறை மெல்விரல் கூப்பி
இல்லுறை கடவுட்கு ஒக்குதும் பலியே "
(282:15-18)

(இ-ள்) யாமும் சான்றோரால் குறிப்பி டப்பட்ட திருமணநாள் விரைந்து வருவதாக என்ற வேண்டுகோளுடனே கோடுகள் அமைந்த நம் மெல்லிய விரல்களைக் கூப்பி வணங்கி நமது இல்லத்தில் உறைகின்ற தெய்வத்திற்குப் பலிபொருளைச் செலுத் தும் "

தலைவிக்கு அவள் விரும்பிய தலைமை கனுடன் திருமணம் நடப்பதற்கான பேச்சு கள் நிறைவேறின. திருமண நாளும் குறித் தாயிற்று. அந்நல்நாள் விரைந்து வர வேண் டுமெனத் தன்னுடைய இல்லுறை தெய்வத் துக்குப் பலி செலுத்திக் கரங்கூப்பி தலைவி வழிபடுகிறாள்.

வீட்டினைத் தெய்வங் காப்பதற்காக அத்தெய்வத்திற்கு நாள்தோறும் பலியிட்டு வணங்கும் நடைமுறை பண்டைத் தமிழ கத்தே காணப்பட்டது என்பதற்கு,

" ...... ... ... ... ... ...... ... நாளும்
விரவுப்பூம் பலியொடு விரைஇ அன்னை
கடியுடை வியனகர்க் காவல் கண்ணி "
(232:11-13)

என்னும் செய்யுளடிகள் சான்றாகின் றன, தன்னுடைய தாய் நாள்தோறும் விர விய பலவாகிய பூப்பலியோடு கலந்து காவல் பொருந்திய பரந்த மனையினைக் காத் தல் கருதினால் எனத் தலைவி கூறுவதாக பாடலடிகள் அமைகின்றன.

தாம் உண்ணுவதை முதலிலே கடவு ளுக்குப் பலியாகக் கொடுத்து உண்ணும் வழக்கமும் சங்ககாலத் தமிழ் மக்களிடையே காணப்பட்டது.

" நெடுங்கண் ஆடமைப் பழுநிக் கடுந்திறல்
பாப்புக் கடுப்பன்ன தோப்பி வான்கோட்டுக்
கடவுயோங்கு வரைக்கு ஓங்கிக் குறவர்
முறைத்தழை மகளிர் மடுப்ப மாந்தி "
(348:6-9)

(இ-ள்) " நீண்ட கணுக்களையுடைய அசைகின்ற மூங்கிற் குழாயில் அடைக்கப் பட்டு முதிர்ந்து கூடிய ஆற்றலையுடைய பாம்பினது சீற்றம்போன்ற வெற்றியமைந்த கள்ளினை முதலில் உயர்ந்த குவட்டின்கண் உறைகின்ற கடவுளாகிய முருகனை நினைந்து உயர்ந்த மலைக்கு அக்கள்ளை வைத்துப் படைத்து குறவர் குடியிற் பிறந்த இளந்தளிரால் இயற்றிய தழை ஆடையை உடுத்த மகளிர் கொணர்ந்து ஊட்டுதலாலே உண்டு. "

தேவர்களுக்கு அவிப்பலியாகக் கொடுப் பதற்கு வேள்விக்குழியிலே யாமையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இட்ட செய்தியையும் அகநானூறு கூறு கின்றது. இது ஆரிய வழிபாட்டு முறையை சார்ந்ததென உரைகாரர்கள் கருதுகின்ற னர். " கரியாப் பூவின் பெரியோர் ஆர அழல்எழு தித்தியம் மடுத்த யாமை" ( 361:10-11 ) என்னுஞ் செய்யுளடிகளே இச்செய்தியைக் கூறுகின்றன. வெப்பத்தால் கருகாத மலர்களையுடைய வானோர்கள் நுகரும்பொருட்டு அவி சொரிவதற்கு தீவ ளர்கின்ற வேள்விக்குழியின்கண் இடப்பட்ட யாமை என்பது அச்செய்யுளடிகளின் பொரு ளாகும்.

இசை, நடனம், கூத்து ஆகியவற்றுடன் தாம் பயின்ற மல்யுத்தம். வில்வித்தை ஆகியனவற்றையும் கடவுளுக்கு நிவேதிக் கும் வழக்கம் யப்பானியரிடையே இருந்து வந்துள்ளது (இசை, நடனம், கூத்து நிவே திப்பது பற்றிய விளக்கங்களுக்குப் பார்க் கவும்: சண்முகதாஸ் & மனோன்மணி, 1985: சண்முகதாஸ், 1987 ). சங்கத் தமி ழரிடையேயும் இவ்வழிபாட்டு வழக்கம் காணப்பட்டதற்கு அகநானூறு சான்று பகருகின்றது. 187 ஆவது செய்யுளிலே,

" வார்கழற் பொலிந்த வன்கண் மழவர்
பூந்தொடை விழவின் தலைநாளன்ன"
( 7-8 )

எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. 'நெடிய வீரக்கழலால் பொலிவுபெற்ற தறுகண்மை யுடைய போர்மறவர்களுக்குரிய அழகிய அம்பு தொடுத்தற்குரிய விழா நிகழ்ச்சி யினுடைய முதல்நாள்போல' என்று இச் செய்யுளடிகளுக்குப் பொருள் கூறப்பட் டுள்ளது. 'பூந்தொடை விழவு' என்னுந் தொடருக்கு விளக்கங் கொடுக்கும் உரையா சிரியர் படைக்கலப் பயிற்சி பெற்ற இளை யோரை அரங்கேற்றிக் கொற்றவைக்குச் செய்யும் விழா' எனக் குறிப்பிடப்படுகின் றது. ( இவ்விழா பற்றிய மேலும் விளக் கங்களுக்குப் பார்க்கவும் ( K. Sivathamby, 1981, 194)

## 6. ஞாயிறு வழிபாடு

இந்துசமயத்திலே உள்ள ஆறு வகைப் பிரிவுகளுள், சூரியனைச் சிறப்புத் தெய்வ மாகக் கொண்ட பிரிவு சௌரம் எனப் பட்டது. சங்க இலக்கியங்களிலே ஞாயிறு முக்கியமமான இடத்தைப் பெறுகின்றது. அகநானூறு 287 ஆவது செய்யுள் ஞாயிறு வணக்கம்பற்றி நேரடியாகக் கூறுகின்றது. அச்செய்யுளிலே இடம்பெறும் பின்வரும் அடிகள் அவ்வழிபாடு பற்றிக் குறிக்கின்றன.

"தொடியணி முன்கைத் தொதிவிரற் குவைஇ
படிவ நெஞ்சமொடு பகல்துணையாக
நோங்கொல்"
(287: 1-3 )

( இ-ள் ) "வளைகள் அணிந்த தன் முன்கைகளின் தொகுதியான
விரல்களைக் குவித்து, நோன்பு மேற் கொண்ட
நெஞ்சத்துடனே, ஞாயிறே தனக்குத் துணையாகக்
கருதி, வருந்தியவளாகவே அவள் இருப்பாளோ?

தலைவியைப் பிரிந்து சென்ற தலை வன், இடையிலே அவள் நினைவு வந்த போது அவள் எப்படித் தமியளாக இருப் பாளென எண்ணுகிறான். ஞாயிற்றைக் கை குவித்தவளாகத் தன் தலைவன் நலமே திரும்பி வர நோற்ற நெஞ்சுடனே இருப் பாளென அவன் எண்ணுகிறான். சங்க காலத்திலே ஞாயிறு வழிபாடு இருந்த காரணத்தினாலேயே அதற்கடுத்த காலப்பகு தியிலே *சிலப்பதிகாரம்* பாடிய இளங் கோவடிகள் கடவுள் வாழ்த்துப் பாடும் போது" ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும் " என்று முதலிலே ஞாயி றற்றுத் தெய்வத்துக்கு வாழ்த்துக் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. கடவுள் தொடர்பான சில நம்பிக்கைகள்

சங்கத் தமிழர் பெண்ணினுடைய கற்பினைக் கடவுட் கற்பு எனப் போற்றினர். கற்பு என்பது கற்பித்த நெறி எனக் கொள்ளுதற்கு இடமுண்டு "ஆனால் இக்கற்பு நெறியானது எவ்வாறு பெண்ணுக்கே சிறப்பானது என்பது சிந்தனைக்குரியதாகும். பழந்தமிழர் வாழ்க்கையை எடுத்துக்காட்டும் சங்கப் பாடல்களில் வெகு நுணுக்கமாகவே இதனை விளக்கியுள்ளனர். குடும்பம் என்ற அமைப்பினைக் காக்கும் பெண்ணே கற்பு நெறிகளைத் தனது சந்ததியினருக்குப் போதிக்க வேண்டிய சிறப்பான குணவியல்புகளையும் இயற்கையாகவே பெற்றிருந்தாள். தாய்மை என்னும் நிலையில் ஆண்களை வழிப்படுத்துபவளாக இருந்தாள். கற்பு நெறிகளை அவளிடமிருந்தே குழந்தைகள் அறிந்தனர். கணவனைக் குழந்தைகளின் தந்தையாகவும் ஏனையவர்களை உறவினர்களாகவும் அமைய: தாயே குழந்தைக்கு நெறிமுறையாக முதன்முதல் கற்பிக்கத் தொடங்குகிறாள். அவள் கற்பிக்கும் நெறி செம்மையுடையதாக இருந்தது." (சண்முகதாஸ், 1983: 93). செம்மை சிவம் எனப்பட்டது. இத்தகைய நன்மை பயக்கும் திறனும் குணமும் ஒருங்கே வாய்ந்த கற்பு தெய்வக் கற்பாக எண்ணப்பட்டது வியப்பில்லை. அகநானூறு பின்வரும் செய்யுளடிகளைத் தருகின்றது. "கடவுட்கற்பொடு" (184:1), "கடவுட் கற்பின் மடவோள்" (314:15), வானத்திலே உள்ள நட்சத்திரங்களுள் ஒன்றாகிய அருந்ததி கற்புக்கடவுளாகக் கொள்ளப்பட்ட செய்தியினை "வானத்து அணங்கருங் கடவுள்" (16:17-18) என்னும் செய்யுளடிகளாலே குறிக்கப்படுகின்றது.

தலைவி தன் காதலனைக் கடவுளாக மதிப்பதை "கைதொழு மரபின் கடவுள் சான்ற" (125 ; 14) என்னும் அடி புலப்படுத்துகின்றது. தெய்வத்துக்கு முன்னாலே "நின்னிற் பிரியேன்" என்று சூளுரைத்துத் தலைவன் தலைவியை மணஞ்செய்து கொள்ளும் வழக்கம் சங்ககாலத்திலே இருந்தது. அவ்வாறு கடவுள் முன்னிலையிலே சொன்ன சொல்லைத் தலைவன் மீறி வேறொருத்தியிடம் சென்ற வேளையில்,

"தெறலருங் கடவுள் முன்னர்த் தேற்றி
மெல்லிறை முன்கை பற்றிய சொல்லிறந்து
(396 : 7 – 8)

(இ – ள்)

"நீயோ வெல்லுதற்கரிய தெய்வத்தின் முன்னர் நின்று
தெளிவித்து எனதுமெல்லிய இறையையுடைய முன்கையைப்
பற்றுதற்குச் சொன்ன சொல்லைக் கடந்து"

என்று தலைவி கூறுவதை இங்கு குறிப்பிடலாம்.

பாழி / செல்லூர் ஆகிய இடங்களைக் கடவுள் காத்து நிற்பதாக அகநானூற்றுச் செய்யுட்கள் கூறுகின்றன:

"அருந்தெறன் மரபின் கடவுள் காப்பப்
பெருந்தேன் தூங்கும் நாடுகாண் நனந்தலை
அணங்குடை வரைப்பிற் பாழி"
(372 : 1 – 3)

(இ – ள்) "யாரானும் அழித்தற்கரிய கடவுளாலே காக்கப்படுதலின்; பெரிய தேன் இறால்கள் தூங்குகின்ற நாடு முழுவதும் காணுதற்கியன்ற உயரத்தோடு பரந்த இடத்தையும் தீண்டி வருத்தும் தெய்வங்களையுமுடைய இடமமைந்த பாழி என்னும் மலை யிற்கண் அமைந்த,

"அருதிறற் கடவுட் செல்லூர்"
(90 : 9)

(இ – ள்) "அரிய வலிகொண்ட தெய்வங்களையுடைய செல்லூர்',

மலைகளிலே தெய்வங்கள் உறைகின்ற காரணத்தினாலே ஆங்குள்ள பொருட்களும் தெய்வத்தன்மையும் பொருந்தியன என்னு நம்பிக்கையும் சங்கத் தமிழரிடையே வழங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிற்று நள்ளியினுடைய மலையிலேயுள்ள சோலைகளிலே தெய்வங்கள் உறைவதால் அச்சோலையிலே பூத்த காந்தள் மலர் கடவுட் காந்தள் எனப்பட்டது. இச்செய்தியினை ''நள்ளி சோலை யடுக்கத்துச் சுரும்புண விரிந்த கடவுட் காந்தள்'' ( 152 : 15 – 17 ) என்னும் அகநானூற்றுச் செய்யுளடிகளால் உணர்க.

## 8. பிற செய்திகள்

கார்த்திகை விழா இன்றும் தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் தமிழர்களாலே கொண்டாடப்படுகின்றது. இது ''திருக் கார்த்திகைத் தீபம்'' எனவும்படும். அகநானூற்றில் இரண்டு செய்யுட்கள் இத் திருக்கார்த்திகை விழா பற்றிக் கூறுகின்றன.

''மழைகால் நீங்கிய மாக விசும்பல்
குறுமுயல் மதுநிறம் கிளர மதி நிறைந்து
அறுமீன் சேரும் அகலிரு நடுநாள்
மறுவிளக் குறுத்து மாலை தூக்கிப்
பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய
விழவுட னயர,,

( 141 : 6 – 11 )

( இ – ள் ) ''மழையானது தான் காலிட்டுப் பெய்தலைக் கைவிட்ட வானத்திலே குறுமுயலாக மறுவினது நிறம் தன்னிடத்தே விளங்கித் தோன்ற, மதியமானது நிறைவுற்று, கார்த்திகையைச் சேருகின்ற இருளற்ற பௌர்ணமி நாளின் நள்ளிரவிலே, வீதிகளிலே விளக்குகளை ஏற்றி வைத்து வாயில்களிலே மாலைகளைத் தொங்கவிட்டு பழைமையைத் தனக்குப் பெருமையாகவுடைய மூதூரில் பலருடனும் கலந்து நாம் கொண்டாடும் திருக்கார்த்திகைத் திருவிழாவினை''

''.......................................... ...... வானுலந்து
அருவி ஆன்ற உயர்சிமை மருங்கில்
பெருவிழா விளக்கம் போலப் பலவுடன்
இலையில மலர்ந்த இலவமொடு

( 185 ; 10 – 12 )

( இ – ள் ) ''மழை வறந்தமையால் அருவியில்லையான உயர்ந்த மலையுச்சியின்கண் தமிழருடைய பெரிய திருவிழா நாளாகிய கார்த்திகை விழாவிற்கு ஏற்றிய விளக்குகளைப்போல் முழுதும் உதிர்ந்து இலையே இல்லன வாய்ப் பலவும் ஒருசேர மலர்ந்திருக்கின்ற இலவ மரங்களோடே''

இவ்வாறு மேற்காட்டிய இரு செய்யுட்களின் அடிகளிலே தமிழர் பெருவிழாவாகிய திருக்கார்த்திகைத் திருவிழா பற்றிய விவரங்கள் குறிக்கப்பட்டுள்ளன.

அகநானூறு 86 ஆம், 136 ஆம் செய்யுட்களிலே அக்காலத்தில் திருமண நடைமுறைகளுடன் தொடர்புடைய சமயச் செய்திகள் குறிக்கப்பட்டுள்ளன. கடவுளரைப் பேணுதல், நன்னாட் பார்த்தல், காப்பணிதல் போன்றன திருமண நடைமுறைகளுடன் தொடர்புற்றிருந்தன. இவ்விரு பாடல்களும் தரும் திருமண செய்திகளை விரிவாக மனோன்மணி சண்முகதாஸ் ( 1984 ) தன்னுடைய கட்டுரையிலே விவரித்துள்ளார்.

இராமாயணக் கதை தமிழ்நாட்டிலே சங்ககாலத்திலே பரவியிருந்தமைக்குச் சான்றாக அகநானூற்றுச் செய்யுளடிகள் அமைகின்றன.

'' வெல்போர் இராமன் அருமறைக் கவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலியவிந் தன்றிவ் வழுங்கல் ஊரே ''

( 70;15-17 )

( இ-ள் ) '' வெல்லும் போரினில் வல்ல இராமன் அரிய மறையினை ஆய்தற் பொருட்டாகப் புட்களின் ஒலி இல்லையாகச் செய்த பல விழுதுகளைக் கொண்ட ஆலமரம்போல இந்த ஆரவாரமுடைய ஊர் ஒலியடங்கப் பெற்றது. ''

குழந்தைச் செல்வத்தைப் பெற்றவர்கள் இம்மையுலகிலே புகழுடன் வாழ்வதன்றி, மறுமையுலகினையும் அடைவர் என்றொரு பழைய மொழி இருந்ததாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இம்மை யுலகத்து இசையொடும் விளங்கி
மறுமை யுலகமும் மறுவின்று எய்துப
செறுநரும் விழையும் செய்இர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்ம லோரெனப்
பல்லோர் கூறிய பழமொழி" (66:1-5

என்னுஞ் செய்யுளடிகள் குறிப்பிடுகின்றன. □

## நூற்பட்டியல்


இராசமாணிக்கனார், மா, *சைவ சமய வளர்ச்சி*, ஔவை நூலகம் சென்னை, 1958, பக். 13-42.

இராசு, புலவர் செ., "நடுகல் வழிபாடு". *நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டு நிகழ்ச்சிகள்*, முதலாம் தொகுதி, கொழும்பு, 1977, பக். 37-55

கைலாசபதி, க, *பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும்*

சண்முகதாஸ், அ., "கற்பு - சங்கச்சான்றோர் முதல் பாரதி வரை" *தமிழியல்*, 24, 1983, பக். 87 - 102

சண்முகதாஸ், அ., "வீர மரணம் எய்தியவரைக் கல்லிலே உறைய வைத்துத் தொழுத மரபு", *உதயன்*, முதலாண்டு மலர், 27.11.1986.

சண்முகதாஸ், அ. மனோன்மணி, ச., *இத்திமரத்தாள்*, வராவொல்லை வெளியீடு-1, பருத்தித்துறை, 1985.

சண்முகதாஸ், அ., "இந்து - சிந்தோ வழிபாடும் நம்பிக்கைகளும்": இந்துநதி, இந்து மாணவர் மன்றம், கிழக்குப் பல்கலைக் கழகம், மட்டக்களப்பு, 1987 பக். 35-40

நாகசாமி, இரா., கல்வெட்டுக் கருத்தரங்கு, புக்ஸ் இந்தியா, சென்னை, 1968

நாகசாமி, இரா., *செங்கம் நடுகற்கள்*, தமிழக அரசு தொல் பொருள் ஆய்வுத் துறை, சென்னை, 1972.

மனோன்மணி சண்முகதாஸ், "தமிழர் திருமண நடைமுறைகள் (கி.பி. 300 வரை"), *தமிழர் திருமண நடைமுறைகள்*, முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், யாழ்ப்பாணம், 1984

வித்தியானந்தன், சு; *தமிழர் சால்பு*, தமிழ் மன்றம், கல்ஹின்னை, கண்டி, 1954.

Hart III, George L., "woman and the Sacred in Ancient Tamilnad" *Journal of Asian Studies*, Vol. XXXII. No. 2, 1973. pp. 233 - 250.

Sanmugadas, A., "Mountain Worship Among the Tamils and Japanese", *Kailasapathy Commemoration Volume*, Jaffna, 1987, pp

Sivathamby, K., *Drama in Ancient Tamil Society*, New Century Book House, Madras, 1981.

Srinivasa Iyangar, P.T., *History of the Tamils*,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் காரைக்கால் சிவன்கோவில் விஸ்வநாதேஸ்வரர்

[ஈழத்து பஞ்சதள லிங்கேஸ்வர மூர்த்திகளுள் ஒன்று]

செ. கிருஷ்ணராஜா, எம். ஏ.
முதுநிலை விரிவுரையாளர்,
வரலாற்றுத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் பழம் பெருமை வாய்ந்த சிவத்தலங்களுள் இணுவில் கிழக்கில் அமைந்துள்ள காரைக்கால் சிவன் கோவிலும் ஒன்றாகும். சமயரீதியாக மட்டுமன்றி சமூக வரலாற்றுரீதியாகவும் காரைக்கால் சிவன்கோவில் தன்னகத்தே பல்வேறுவகையான வரலாற்று மூலங்களைக் கொண்டு விளங்குவதனைக் காண முடிகின்றது. இதுவரையிலும் வரலாற்று ஆசிரியர்களோ அல்லது இந்துப்பண்பாட்டு ஆய்வாளர்களளோ கவனத்தினை ஈர்த்திருக்காத இக் கருவூலமானது கடந்த சில மாதங்களாக எமது தொல்லியல் மேல்லாய்வுக்குட் படுத்தப்பட்டது. இதன் விளைவாக யாழ்ப்பாணத்தரசர்காலவரலாற்றுக்கு உதவக்கூடிய வகையில் மேலும் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவும், விசேடமாக எமது சமூக வரலாற்றினைப் புரிந்து கொள்வதற்கு உதவும் வகையிலான மூலாதாரங்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையிலும் அதன் பெறுபேறு எமக்குக் கிட்டியது. நல்லூர் சட்டநாதேஸ்வரர் தோற்ற வரலாறு, மண்ணித்தலை சிவாலயத்தின் வரலாறு, சாவகச்சேரி வாரிவனநாதேஸ்வரர் வரலாறு போன்று காரைக்கால் சிவன்கோயிலும் ஒரு நீண்ட வரலாற்றுப் பின்னணியை தம்மகத்தே கொண்டு விளங்குகின்றது. கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட தியாகராசா – அருள்நேசன் என்ற இளம் தொல்லியர் ஆர்வலருடைய பேரார்வத்தின் உந்துதல் ஊடாக இவ் வரலாற்றுச் சிறப்பு மிக்க சிவன் கோவிலின் தொன்மையை எம்மால் ஆராயமுடிந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## அமைவிடம்

தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த அகன்ற மேட்டுநிலப்பரப்பில் இத்தலம் அமைந்துள்ளது. மிகவும் பழமை வாய்ந்த இடுகாடு ஒன்றின் பின்னணியில் மேற்கு நோக்கிய வாயிலைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள இச்சிவத் தலமானது மிகவும் நெருக்கமான பல தல விருட்சங்களைக் கொண்டு சூழ்ந்து விளங்குவதனைக் காணலாம். தலவிருட்சங்கள் மிகவும் பழமை வாய்ந்தவை முதிர்வு நிலையை உடையவை இக்கோவிலுக்கு வடகிழக்கே உள்ள அதன் அண்மித்த பகுதி வரலாற்றுக்காலப் பழம் பெருமை வாய்ந்த தலங்களால் சூழப்பட்டுள்ளது. அவற்றுள் உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோவில் வரலாற்றும் பிரசித்தம்வாய்ந்ததாகும். இக்கோவிலில் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழமையான சூலக்கால் ஒன்றில்தமிழ்மொழி அமைந்த சாசனம் ஒன்று கி, பி. 17 ஆம் நூற்றாண்டுக்குரியதாகக் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

காரைக்கால் சிவன்கோயிலுக்கு நேர் மேற்காக 'மஞ்சத்தடி, பிள்ளையார் கோவிலும், இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவிலும், தென்மேற்காக உப்புமடம் செகராச சேகரப் பிள்ளையார் கோயிலும் அமைந்திருக்கின்றன. இம் மை ம ய ங் க ள் யாவும் யாழ்ப்பாணத்தரசர் காலத்திலே கலை - பண்பாட்டுப் பிறப்பிடங்களாகத் திகழ்ந்திருந்தன என்பதற்குரிய சான்றுகளும் கிடைத்தன.

இவ்வாறான ஒருமையத்தில், சமாதி கோயில்களை உள்ளடக்கிய வகையிலும் காரைக்கால் சிவன்கோயிலானது அமைந்திருப்பதும், ஆகம வழிபாட்டு முறைகளை இன்னும் தழுவாத வகையில் இங்கு வழிபாட்டு முறைகள் நிகழ்த்தப்பட்டுக்கொண்டு வருவதும் மறைந்துபோன புராதன தமிழர் பண்பாட்டின் தொடர்ச்சியை இன்று வரைக்கும் எமக்கு எடுத்துக்காட்டும் வகையில் கிடைத்திருப்பதும் ஒரு வரப்பிரசாதமே, இக்கோவிலைச் சூழ்ந்து காணப்படும் பிராந்தியத்தின் பழமைத் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் எமக்குப் பல சான்றுகள் கிடைத்துள்ளன.

*கிடைத்த தொல்லியற் சான்றுகள்*

காரைக்கால் சிவன்கோவிலின் உட்பிரகாரத்திலிருந்தும், அக்கோவிலைச் சூழ்ந்துள்ள அயற்பிராந்தியங்களில் இருந்தும் தொல்லியல் மேலாய்வின் போது பலவகையான தொல்லியற் சான்றுகள் கிடைத்துள்ளன. இவ்வாறு கிடைத்தவற்றுள் பெரும்பாலானவை காரைக்கால் சிவன்கோவிலின் தோற்ற முறைமையையும், சமூக வளர்ச்சிக்கு அது ஆற்றியிருந்திருக்கக்கூடிய பங்களிப்பினையும் வெளிப்படுத்துபவையாகக் காணப்படுகின்றன. அத்தொல்பொருள்களாவன பின்வருமாறு:

அ) காரைக்கால் சிவன்கோவிலின் மூலவிக்கிரஹமாக பிரமாண்டமானதோற்றத்துடன் விளங்கும் சிவலிங்கம் (உயரம் 6 அடி)

ஆ) கோவிலின் பரிவார தெய்வங்களுள் ஒன்றான வயிரவர் சந்நிதானத்தில் காணப்படும் மிகப்புராதனம் வாய்ந்த திரிசூலக்கல்.

இ) சிவன்கோவிலின் முகப்பில் காணப்படும் 'ஹனுமான்' கல் (இக் கல் நீண்டு, உருளைவடிவாகக் காணப்படுகின்றது. வெண்வைரச் சுண்ணக் கல்லான இப்பொருள் மயோசீன் கால உயிரினச் சுவடுகள் பலவற்றை தம் மகத்தே கொண்டு விளங்குகின்றது.)

ஈ) சிவன்கோவிலின் பலிபீடத்தில் காணப்படும் மிகப் பழமைவாய்ந்த நந்தி.

உ) கோவிலின் பின்வீதியில் கிழக்குப் பக்கத்தில் காணப்படும் அழிந்துபோன மிகப் பழமையான கேணியும், அருகே காணப்படும் பழைய மணிக் கோபுரமும் மணியும் (சாசனத்துடன் கூடியது).

கிடைத்துள்ள இச்சான்றாதாரங்களை அடிப்படையாகக் கொண்டும், இப்பிராந்தியத்தில் நிலவும் ஐதீகங்களைக் கொண்டும் காரைக்கால் சிவன்கோவிலினது தோற்றம் தொடர்பாகவும், கலைவளர்ச்சி ரீதியாக அது கொண்டிருக்கக்கூடிய நிலைகள் தொடர்பாகவும் ஆராய முடிகிறது.

*காரைக்கால் - பெயர்க்காரணம்:*

காரைக்கால் என்ற இன்னொரு பெயரானது தென்னிந்தியாவில் தமிழகத்தில் உள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் காணப்படுகிறது. பரமசிவம் என்ற தமிழகத்து தொல்லியலாளர் அங்கு அகழ்வுகளை மேற்கொண்டு சங்ககால வாணிபம் தொடர்பான (கார்னேலியன் மணிவகைகள், ரோமன் மட்பாண்டங்கள் போன்ற) விலை மதிப்பற் சான்றுகளை மிகவும் அண்மையில் கண்டுபிடித்துள்ளார். காரைக்கால் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே மையம் பல்லவர் காலத்துக்கும் முன்னரிலிருந்தே சிவ வழிபாட்டுடன் தொடர்புபட்டிருந்தது என்பதனைக் காரைக்கால் அம்மையாரது பாசுரங்களில் இருந்து தெளிவாகின்றது. காரைக்கால் அம்மையார் சிவ வழிபாட்டில் அதீத ஈடுபாடு கொண்டு, பின்னர் சிவகணங்களுள்தானும் ஒன்றான கதைமரபுடன் காரைக்கால் என்ற மையத்தின் கதையும் இணைக்கப்பட்டுள்ளமை நாம் அறிந்ததே.

ஆனால் ஈழத்தில் இணுவிற் பகுதியில் அமைந்துள்ள காரைக்கால் என்று மையத்தின் பெயர்க்காரணம் தொடர்பாக பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்படுவதைக் காணலாம். இவ்வூரில் வதியும் சில முதியவர்களிடம் காரைக்கால் என்ற பெயர்த் தோற்றம் தொடர்பாகக் கேட்டபொழுது இது காரைச்கால் அல்ல காரைக்காடு என முன்னர் வழங்கப்பட்டிருக்க வேண்டும் எனவும், பின்னர் அது மருவிச் சென்று காரைக்கால் என இப்பொழுது வழங்குகின்றது எனவும் அவர்கள் தெரிவித்தனர். ஆனால் இங்கு இம் முதியவர்கள் குறிப்பிடும் காரணத்தினை ஏற்க முடியவில்லை. ஏனெனில் இவ்வூர் தோம்புக்குறிப்புக்களில் காரைக்கால் என்றே வரையப்பட்டிருப்பதால் குறைந்தது கி. பி. 17 ஆம் நூற்றாண்டிலிருந்தாவது காரைக்கால் என்ற பெயர் வழக்கு மக்கள் மத்தியில் இருந்து வந்தமையை உணரமுடிகிறது. ஏனெனில் ஒல்லாந்தர் காலத்திலிருந்தே தோம்பு வழக்கு உருவாக்கப்பட்டதன் அடிப்படையிலாகும். எனவே யாழ்ப்பாண அரசு காலத்திலும் காரைக்கால் என்ற பெயரே நிலைத்திருக்க வேண்டும். (தோம்புப் பதிவுகள் மக்களுடைய பெருவழக்கையடிப்படையாகக் கொண்டே நிகழ்த்தப்பட்டவை).

காரைக்காலில் சமாதிமரபு ஒன்று நெடுங்காலமாக நின்று நிலைத்துவருகின்ற தன்மையைக்கூட கண்டுகொள்ள முடிகிறது. இச்சிவத்தலம் அமைந்துள்ள பின்னணி நிலமானது இடுகாட்டு அடக்கமுறையைக் கொண்டது. பல சமாதிகளை இந்த இடுகாடு தன்னகத்தே இன்றும் கொண்டுள்ளமையைக் காணமுடிகிறது. கோவிலின் தெற்கு வீதியில் ஆசிரமம் ஒன்று உள்ளது. இங்கும் இரண்டு சமாதி நிலைகள் காணப்படுகின்றன. கிழக்குவீதியில், பிற்பக்கத்திலும் சமாதிநிலை ஒன்றுண்டு. இவ்வாறு சமாதிப் பாரம்பரியம் ஒன்றின் மையமாக இருந்துவரும் காரைக்கால் அதன் பெயர்த் தோற்றத்தினையும் அப் பாரம்பரியத்திலிருந்தே பெற்றிருக்க வேண்டும்போல் தோன்றுகின்றது. மத்திய காலத்தில் அல்லது சற்றுப் பிற்பட்ட காலத்தில் காரை வேய்தல் அல்லது காரை இருத்தல் என்ற சொற்பதங்கள் சமாதி சுவடி இருத்தலுடன் தொடர்புபட்ட வகையில் வழங்கப்பெற்று வந்தமையைக் காணலாம். தமிழ்நாட்டில் கீழ்க்காரை என்று வழங்கப்பட்டு வந்த மையம் இன்று கீழ்க்கரை என்று வழங்கப்படுகின்றது. இங்கு ஏராளமான சமாதி ஆலயங்களுண்டு. 'செத்தும் கொடுத்தான்' சீதக்காதியின் 17 ஆம் நூற்றாண்டுக்குரிய சமாதி ஆலயமும் இங்குதான் அமைந்துள்ளது. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள காரைக்காலில் சமாதி ஆலயங்களும் நடுகற்களும் இன்றுவரை காணப்படுகின்றன. நடுகற்கள் சங்ககாலத்திற்குரியனவாகும். எனவே இவ்வாறான ஒரு பின்னணியில் இணுவில் காரைக்கால் என்ற மையமும் சமாதி வழிபாட்டுடன் தொடர்புபட்ட வகையில் சிவன் கோயிலாகத் தோற்றம் பெற்று இருந்திருக்கக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன. (காரை உடல் / உடம்பு / தேகம். காடு மையம்)

## லிங்கத்தின் வடிவமைப்பு

யாழ்ப்பாணத்தில் அல்லது வட இலங்கையிலேயே இவ்வாறனே ஒரு பிரமாண்டமான கருங்கல்லினாலான லிங்க அமைப்பு கிடைத்திருக்கவில்லை. அந்தளவிற்கு இதன் அமைப்புமுறையும், உருவ லக்ஷணங்களும் பார்ப்போர் மனதினை ஒருங்கே ஈர்க்கத் தக்கதாகவுள்ளன. பஞ்சதளங்களுள்ள பிரமாண்டமான சிவலிங்கமாக இது காட்சியளிக்கின்றது. இந்தியாவில் குடிமல்லம் என்ற இடத்தில் காணப்படும் லிங்கம், கி. மு. 150 ஆம் ஆண்டுக்குரியதாகக் கொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளப்படுகின்றது. ஏறத்தாள அந்த லிங்கத்தினது உயரத்தினையும்விட விஞ்சியதாகவே இணுவிலில் உள்ள காரைக்கால் சிவலிங்கம் அமைந்து காணப்படுகின்றது என்று குறிப்பிட்டாலும் அதனை வியப்பதற்கில்லை. காரைக்கால் சிவலிங்கத்திற்கு ஆவுடையார் அமையவில்லை. குடிமல்லத்திலுள்ள சிவலிங்கத்திற்கு சதுரமான ஆவுடையார் அமைந்துள்ளது. காரைக்கால் சிவலிங்கத்தில் ஆவுடையார் காணப்படாமைக்குரிய காரணம் கருவறையின் தரைப்பரப்பிற்கு கீழே அதிக ஆழத்திற்கு இந்த லிங்கத்தின் கீழ்ப்பகுதி புதைக்கப்பட்டுள்ள காரணத்தினாலாகும். ஒரே கல்லாலான (Monolithic Stone) இருந்த லிங்கத்தினை வாலஸ்தாபன சடங்குகளின்போது கூட கருவறையை விட்டு வெளிக்கொணர முடியாமலிருந்து வருகின்றது. காரணம் கருவறையின் வாயில் ஊடாக அதனை வெளியே எடுத்து வர முடியாதளவிற்கு அந்த லிங்கத்தின் அமைப்பு உருவாக்கப்பட்டிருந்ததேயாகும். அத்துடன் ஒரு பெரிய சமாதிக்குரிய சமாதிலிங்கமாக அமைக்கப்பட்டிருப்பினும் இலகுவில் அதனை இருப்பில் இருந்து வேறு இடத்திற்கு எடுக்க முடியாமல் இருக்கும்.

ஆறு அடிக்குமேல் உயரமான இச் சிவலிங்கம் அதன் சதுரமான அடித்தளத்தில் இரண்டு பாகச்சுற்றுக் கொண்டு காணப்படுகின்றது. சிவலிங்கத்தின் முன் பகுதியில் யோகாசன நிலையில் புலித்தோலின் மீது வீற்றிருக்கும் சிவனுடைய படைப்பு சிற்ப அமைப்பு இடம் பெற்றுள்ளது. சிவனுடைய நான்கு திருக்கரங்களில் முன்னிரு கரங்களும் வரதஹஸ்த நிலையில காணப்படுகின்றன. பின்னிரு கரங்களில் இடக்கரம் மானையும், வலக்கரம் மழுவையும் தாங்கியுள்ளன. தலை உச்சியில் நாகமொன்று படம்விரித்த நிலையில் காணப்படுகின்றது. நாகத்தை அகற்ற படத்தின அடிப்பகுதியில் கங்காதேவியினது முகம் சிவனது முடியலங்காரத்துடன் இணைந்து காணப்படுகிறது. நீண்ட முகவெட்டுத் தோற்றத்தினையுடைய சிவனுடைய கழுத்தில் யோகிகள் அணியும் முத்துமாலையும், கழுத்தினை ஒட்டிய வகையில் நூலில் இணைக்கப்பட்ட தாயத்தும் ஆபரணங்களாகக் காட்சியளிக்கின்றன. கண்இமைகள் மூடிய நிலையில் நிஷ்டையில் இருப்பதான தோற்றத்தினை காரைக்கால் சிவன் தந்துகொண்டிருக்கிறார். உடல் மெலிந்து காணப்படுகிறது. புலித்தோலின் முன்னிரு கால்களும், அதன் தலையமைப்பும் மிகவும் தெளிவாகத் தெரிகின்றன. ஈழத்து இந்துவிக்கிரஹவியல் கலை வரலாற்றினை ஆராய்வோருக்கு காரைக்கால் சிவனது திருத்தோற்றமானது ஒரு புதிய சான்றாதாரமாக அமைவதற்கு பெருமளவுக்கு வாய்ப்பு ஆகின்றது. சிவலிங்கத்தின் பஞ்சதளங்களையும் இணைக்கின்ற வகையில் சிவனது யோகாசன நிலை இங்கு அமையப்பெற்றுள்ளதே வெகு சிறப்பம்சமாகும்.

லிங்கத்தின் தெற்குப் பக்கமானது தக்ஷிணாமூர்த்தியின் சிற்பம் செதுக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது தக்ஷிணாமூர்த்தி புடைப்புச்சிற்ப அமைதியில் காணப்படுகிறார். நான்கு திருக்கரங்களுள் மேல் இடது - வலது கரங்கள் முறையே அரவத்தினையும், அனலினையும் தாங்கி நிற்க முன்னிருகரங்களுள் ஒன்று வேதநூல்களையும், மற்றையது போற்றுகின்ற நிலையிலுமாகக் காணப்படுகின்றன, இங்கு அமையப்பெற்றுள்ள தக்ஷிணாமூர்த்தி உருவகிக்கப்பட்டுள்ளார் யாழ்ப்பாணத்திலோ அல்லது வட இலங்கையிலோ இவ்வாறான வடிவம் இடம் பெற்றிருப்பதற்கான சான்றுகள் இது வரையிலும் கிடைக்கவில்லை. இது மேலும் மிகக் கவனமாக ஆராயத்தக்கதாகும்.

லிங்கத்தின் கிழக்குப் பக்கமானது லிங்கோற்பவ மூர்த்தியின் புடைப்புச் சிற்பத்தினால் உருவாக்கிக்கப்பட்டுள்ளது. லிங்கத்தினால் லிங்கம் என்ற அமைப்பில் லிங்கோற்பவ மூர்த்தி இங்கு இடம்பெற்றுள்ளார். நிற்கும் நிலையில் நான்கு திருக்கரங்களுடன் லிங்கோற்ப மூர்த்தி காட்சியளிக்கின்றார். லிங்கோற்பவமூர்த்தி சிவலிங்கத்தின் நான்காவது தளத்தில் அமைக்கப்பட்டுள்ளார். நான்காவதும் ஐந்தாவது தளமுமே வட்டவடிவானவை. முதலாவதும் இரண்டாவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்சதுரமானவை. மூன்றாவது தளம் வட்டமுமல்ல, சதுரமுமல்ல என்ற நிலையில் காணப்படுவதாகும்.

லிங்கத்தின் வடக்குப் பக்கமானது சந்திரசேகரர் மூர்த்தத்துக்குரியதாகக் காணப்படுகின்றது. ஜடாமுடியில் மூன்றாம் பிறைச் சந்திரனைக் கொண்டு சமபக்க நிலையில் நிற்கின்ற வடிவமாக சந்திரசேகரர் உருவகிக்கப்பட்டுள்ளார். அவருடைய நான்கு திருக்கரங்களுள் மேல் இடது, வலது கரங்களில் முறையே மானும் மழுவும் தாங்கி நிற்க, முன்னிரு கரங்களும் முறையே அமய, வரத ஹஸ்தங்களாக அமைக்கப்பட்டுள்ளன. இவர் நிற்கின்ற நிலை சிவலிங்கத்தின் நான்காவது தளத்திலேயே உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் சந்திரசேகருக்கு நேர் கீழே மூன்றாவது தளத்தில் பீடம் போன்ற அமைப்பு உருவகிக்கப்பட்டுள்ளமையையும் காணமுடிகிறது. அதற்குரிய அர்த்தம் இன்னும் எமக்குத் தெளிவில்லை. இதுவும் தொடர்ந்து ஆராயப்படவேண்டிய தொன்றாகும்.

கருவறை மூன்று பக்கங்களிலும் மறைத்துக் கட்டப்படாமல் யன்னல்களுடன் கூடியிருப்பது இங்கு நோக்கத்தக்கதாகும். அது மாத்திரமன்றி கருவறையின் நடுமையத்திலேயே லிங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதால் பூசகர் லிங்கத்திடைச் சுற்றிவரக்கூடியதாகவும் உள்ளது. ஆனால் சாதாரணமாக இந்துக் கோயில் கருவறைகள் இவ்வாறு அமைவது அரிதே.

### திரிசூலக் கல்

கரைக்கால் சிவன் கோயிலின் பழமைத் தன்மையை உறுதிப்படுத்திநிற்கும் சான்றுகளுள் அங்கு பொறிக்கப்பட்டுள்ள திரிசூலக் கல் மிகவும் முக்கியமானதாகும். இக்கல் இப்பொழுது பரிவார தெய்வங்களுள் ஒன்றான வயிரவர் சந்நிதானத்தில் மண்டபத்தின் நடுவில் வைத்துக் கட்டப்பட்டுள்ளது. பொதுவாகத் திரிசூலக்குறியீடு எல்லைக் கற்களுக்கும், சமய முக்கியத்துவம் வாய்ந்த வழிபாட்டு மையங்களுமே இடுவது மரபு. இது தமிழர் பண்பாட்டு மரபில் மரபுவழிபாட்டுடன் ஒன்றிணைந்து வளர்ச்சி பெற்று வந்துள்ளது. இது மட்டுமன்றி, தமிழர் பண்பாட்டில் அவர்கள் உபயோகித்த மட்பாண்டங்களிலும் திரிசூலக் குறியீடுகள் இடப்பட்டிருந்தன. பெருங்கற்கால மட்பாண்டம் ஒன்றில் திரிசூலக் குறியீடு இடம்பெற்றுள்ளது. குழுக்குறியீடுகள் காலப்போக்கில் சமய – வழிபாட்டு முக்கியத்துவம் பெற்றதற்கு இத் திரிசூலக்கல் சிறந்த எடுத்துக்காட்டு எனலாம். காரைக்கால் சிவன் கோயிலில் காணப்படும் திரிசூலக்கல் வெண்வைரச் சுண்ணக்கல்லில் பொறிக்கப்பட்டுள்ளது. அதன் தோற்றமும் வடிவமும் அக்கல்லின் புரதானத் தன்மையை வெளிப்படுத்தி நிற்பதனைக் காணலாம். இது மேலும் ஆராயத் தக்கதாகும்.

### ஹனுமான் கல்

காரைக்கால் சிவன் கோயிலில் ஹனுமான் கல்' என்ற வழிபாட்டுக்குரிய ஒன்றும் ஹனுமான் சிற்பமொன்றும் பிரதான கோவிலுக்கு வெளியே இருந்து வருகின்றன. ஹனு மான் சிற்பம் இப்பொழுது வைரவர் சந்நிதானத்திற்குள் வைக்கப்பட்டிருக்கின்றது. சிவன் கோவில் ஒன்றில் ஹனுமான் வழிபாடு மேற்கொள்ளப்படும் ஒரே தலமாக இதுவாகத்தான் இருக்கக்கூடும். ஆனால் இங்கு சித்த வைத்தியப் பாரம்பரியம் ஒன்றும் இக்கோவிலுடன் தொடர்புபடுத்தப்பட்ட வகையில் வளர்ச்சிபெற்று வருவதனைக் காணலாம். சித்த வைத்திய மரபுகளுக்கு ஹனுமான் 'வாலாய தெய்வம்' என்பார்கள். எல்லாவற்றையும் சித்திக்கச் செய்யும் திறன் ஹனுமானுக்குண்டு என்றவோர் நம்பிக்கையை இவ்வாறான ஒரு வழிபாட்டு மரபு இங்கு நின்று நிலைபெறுவதற்குக் காரணமாகியது எனலாம்.

ஆனால் இங்கு காணப்படும் 'ஹனுமான் கல்' இன்னொரு விதத்தில் மக்களுக்குச் சேவையாற்றி வருவதாக நம்பப்படுகிறது. அதாவது மூளை பலவீனப்பட்டு ஒழுங்கற்ற நிலையில் 'பைத்தியம்' கொண்டோருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

' வைத்தியம் ' செய்யும் ஒரு மாயக்கல்லாக இந்த ஹனுமான் கல் இருந்து வருவதாக நம்பப்படுகின்றது. ' பைத்தியம் ' ஒன்று தனது காலால் ' ஹனுமான் கல்லுக்கு ' உதைந்தபோது பைத்தியம் தெளிந்தது. ஆனால் காற்பாதம் முறிந்துவிட்டது; என்று ஐதீகமாக அக்கல்லின் மகிமையைப் பற்றிக் கூறுவோரும் ஆங்குளார். எது எவ்வாறெனினும் ' ஹனுமான் கல் ' எமது ஆய்விற்குப் பலவகையிலும் இன்றியமையாததாக விளங்குகின்றது. ஆறு அடி நீளமும் நான்கு அடி அகலமும் கொண்ட உருளைவடிவான இக்கல் பல்வேறுவகையான உயிரினங்களின் சுவடுகளை தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. மீன் போன்றவற்றின்எச்சங்கள், சிப்பி – சங்கு – நத்தை போன்ற உயிரினச் சுவடுகள், இதற்கும் மேலாக மனித எலும்புப் பகுதிகள் இவையாவும் ஒன்று சேர்ந்து கல்லாகிப்போன நிலையில் இக் ஹனுமான் கல் காரைக்காடு சிவன் கோவிலின் முகப்பில் இன்றும் காணப்படுகின்றது. உயிரியல், தொல்லியல் கல்வியல் போன்ற மூன்று அறிவியற்துறைகளுடன் தொடர்புபட்ட வகையில் ( ) இககல் காணப்படுவது மேலும் ஆய்வு வளர்ச்சிக்கு அடிப்படையாகின்றது. இக் கல்லினது தோற்ற காலத்தினை ஏறத்தாள ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று கூறிக்கொணடாலும் கூட இக்கல் எங்கிருந்து எப்போது இக் கோவிலுக்கு கொண்டுவரப்பட்டது என்பதும் எமது ஆய்வுக்குரிய மேலதிக பிரச்சனையாகின்றது.

## பழமைவாய்ந்த நந்தி

சிவன் கோயிலுக்குரிய வாஹனமாக நந்தி அமைவதே பொதுவிதி. காரைக்கால் சிவன்கோவிலில் காணப்படும் நந்தியின் அமைப்பானது அதன் பழமைத் தன்மையை கூறாமல் கூறிநிற்கிறது எனலாம். படுத்திருக்கும் நந்தியின் பின்னங்கால்கள் ஒன்றின் குளம்பு அதன் கீழ்வயிற்றுப்புறமாக வெளியே தெரியத்தக்க வகையில் அமைக்கப்பட்டிருப்பதனை காணமுடிகிறது. தலைப் பாகத்தில் காணப்படும் இரு செவிகளும் மடிந்த நிலையில் காணப்படுவது இந்த நந்தியைத் தனித்துவமானதாக ஆக்கியுள்ளது. ஏரி பருத்து ஒடுங்கிய நிலையும், ஏரியில் திருப்பட்டை சாத்தப்பட்டிருப்பதும் அதன் பழமையான இயல்புகளை வெளிப்படுத்துவதாக உள்ளது. இதுவும் மேலும் ஆராயத்தக்கதாகும். இன்னொரு நந்தி கருவறைக்கு தெற்குப் பக்கமாக அதாவது பார்வதி அம்மனுக்கு எதிரே வைக்கப்பட்டுள்ளது. இதுவும் பொதுவிதியாக அமைந்துள்ளது எனலாம்-

## பழைய மணி சாசனம்

காரைக்கால் சிவன்கோயிலில் ஏதாவது சாசனச் சான்றுகள் கிடைக்குமா எனச் சுற்றிப் பார்வையிட்டபோது பழைய மணிக் கோபுரமும் அதில் ஒரு மணி தொங்குவதனையும் காணமுடிந்தது. அம் மணியில் "மண்டைதீவு திருவெண்காட்டு சித்திவிநாயகருக்கு முத்துத்தம்பியின் மகள்கள் செங்கமலம் உபயம் 1908 S. A. & Sons Makers Jaffna No. 36" என்றிருந்து. மண்டைதீவு திருவெண்காட்டு சித்திவிநாயகருக்குரிய கோயில்மணி எவ்வாறு இங்கு கொண்டுவரப்பட்டது என்பது தொடர்பாக ஒன்றுமே அறிய முடியவில்லை. ஆனாலும் அதில் கொடுக்கப்பட்டுள்ள ஆண்டு எமது ஆய்வுக்கு ஓரளவுக்கு உதவுவதாக அமைந்துள்ளது.

பழமைவாய்ந்த இந்த மணிக்கோபுரத்திற்குப் பக்கத்தில் பழமையான - தூர்ந்து போன திருக்குளத்தில் இடிபாடுகள் காணப்படுகின்றன. திருக்குளத்துக்காக வைத்துக்கட்டப்பட்டிருந்த திருப்பணி வேலைப்பாடுடைய கற்கள்யாவும் குளத்துக்குள்ளேயே இடிந்து வீழ்ந்து, குளத்தினை நிரப்பிவிட்டுள்ளன. ஆனால் பழமைவாய்ந்த மண்படைகள் ஊடாக கி. பி. 10ம் நூற்றாண்டுக்குரிய (மத்திய காலப் பகுதிக்குரிய ) மட்பாண்டடங்கள், செங்கற்கள் முதலானவற்றை மீட்க முடிந்தது. இவற்றினூடே கி. பி 10ம் நூற்றாண்டுக்கு முன்னைய மண்படையடுக்குகள் அங்கு இருககின்றன. என்பதை உறுதிப்

249993



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ARCHIVES

படுத்திக் கொள்ள முடிந்தாலும், கோயி லினது தோற்ற வரலாற்றினை தற்போது உள்ள நிலையில் அக்காலப் பகுதிக்கு கொண்டு செல்வது மிகவும் கடினமான தாக உள்ளது.

## லிங்கத்தின் சிற்ப லக்ஷணமும் கால அளவும்

காரைக்கால் சிவன் கோயிலினது தொன்மையை எந்த விதமான எழுத்தா தாரங்களும் கிடைக்கப் பெறாதவொரு நிலையில், சிவலிங்கத்தின் சிற்பலக்ஷணத் தினை அடிப்படையாகக் கொண்டே தீர் மானிக்கவேண்டியவர்களாக உள்ளோம். அந்த வகையில் இந்து சிற்ப சாத்திரங் களில் விதிக்கப்பட்டுள்ளபடி அமைந்த சிவனது பல்வகைப்பட்ட திருமேனி வடி வங்களில் லிங்கத் திருமேனி (அருவத் திருமேனி) வடிவங்களை எடுத்து நோக்கிய போது, தென் இந்தியாவிலோ அல்லது ஈழத்தில் பிற பகுதிகளிலோ காரைக்கால் சிவலிங்கத்தினை ஒத்த பிற வடிவமைப் புக்கள் இடம்பெறாமையைக் கண்டு கொள்ள முடிந்தது. கருங்கல்லில் அமைந்த அருவத் திருவுருவததில் உருவத்திருமேனிக ளும் பதிந்தவகையில் அமைந்த காரைக்கால் சிவலிங்கத்தின் பஞ்சதள வடிவமைப்பானது தென்னாசியாவிலேயே தனித்துவமான தாகும். அந்த வகையில் காரைக்கால் சிவ லிங்கமானது ஈழத்து இந்து விக்கிரஹ வியல் வரலாற்றுக்கு மட்டுமன்றி தென்னிந் திய சில விக்கிரஹவியல் வரலாற்றுக்கே மேலுமொரு அடிப்படையாக சான்றா தாரமாக அமைவதனைக் காணலாம்.

யோகாசன நிலையில் காணப்படுகின்ற சிவனது அங்க லக்ஷணங்களை அடிப்படை யாகக் கொண்டு சார்பியல் அடிப்படை யிலான காலவரையறையைத் தீர்மானிக்க முனைந்த பொழுதும் கூட அது சாத்தி யப்படவில்லை. காரணம் இதனை ஒத்த வேறொரு வடிவம் குறிப்பிட்ட காலப்பகு திக்கென இது வரையிலும் கிடைத்திருக் காமையேயாகும். இருந்தும் யோகநிலை யிலுள்ள சிவனின் பின் வலது கரத்தில் காணப்படுகின்ற மழுவை அடிப்படையா கக் கொண்டு பார்க்கும்போது அது விஜ யநகர்நாயக்கர் கலைப்பாணியை ஒத்திருப் பதுபோல் தோற்றமளிக்கின்றது. அந்த வகையில் தற்காலிகமாகயேனும் காரைக் கால் விஷ்வநாதேஸ்வரரின் (விஷ் - ஐந்து → பஞ்சதளம்) தோற்ற காலத்தினை கி. பி. 17ம் நூற்றாண்டு எனக் கொள் லாம். தொடர்ந்தும் இக்காலக் கணிப்பீடு தொடர்பாக நம்பகமான ஆவணங்கள் கிடைக்கும் வரைக்கும் ஆய்வு முயற்சி களைத் தொடரவேண்டியுள்ளது. □

---

அனுபவம் ஒரு நம்பகமான விளக்கு, அதைத் துணையாகக் கொண்டு வழி நடக்கலாம். ஒரு மனிதன் வெற்றியடைவதற்குத் தான் முன்னால் கையாண்டவழி வழிகளையே எதிர்காலத்தில் பயன்படுத்தினால், அவனை ஆலோசனையில்லாதவன் என்று சொல்ல முடியாது.

— வெண்டல்:பிலிப்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கத்தமிழ் இலக்கியம் சுட்டும் மிடற்றுக்கருவி (குரல்)

நா. வி மு. நவரத்தினம்,
இசை விரிவுரையாளர்,
இராமநாதன் நுண்கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

ஒலி வடிவமான இறைவன் மனிதனைப் படைத்து அவனது மிடற்றினால் (குரல்) தன்னைப் பாடுமாறு பணிக்கிறான். இதனாலன்றோ "அர்ச்சனைப் பாட்டேயாம் மண்மேல் நம்மைச் சொற்றமிழாற் பாடுக" என்று சுந்தரரைக் கேட்டதும் நற்றமிழ் வல்லஞானசம்பந்தன் பண்தமிழ் பாடற்கு செவிமடுத்து உலகர் காணப் பொற்றாளம் ஈந்ததும், பாணற்குகந்து சங்கப் பலகை அளித்ததும், தருமிக்கு பொற்கிழி பெற்றுக் கொடுத்ததும், தமிழோடிசை பாடமறந்தறியாத திருநாவுக்கரசர்க்கு திருக்கையிலைக் காட்சியைத் திருஐயாற்றில் காட்டியருளியதும், அழகிய தில்லையினுடையான் திருவாசகத்தை மணிவாசகர் சொல்லத் தம் திருக்கரத்தால் "அழகிய சிற்றம்பலம் உடையான்" என எழுதித் திரு ஒப்பம் இட்டதும் இறைவன் "தமிழிசையை மிடற்றால் உவந்து கேட்க விரும்பியமைக்" கான சரித்திர வரலாற்று ஆதாரங்களாம்.

இசை ஒலிகட்கான முதல்பொருள் அதாவது படைப்புப் பொருள் "மனிதனின் மிடறாகும்." இதிலே தான் மனிதனின் இசை ஒலி உண்டாகியது. மிடற்றுக் கருவி ஏனைய கருவிகளை விடச் சிறப்பும் அதி தொன்மையும் வாய்ந்தது. அதுமட்டுமன்றி மிகவும் தனிச்சிறப்பு வாய்ந்த கருவியும் இதேயாம். காரணம் இசை ஒலிகளையும், சொற்பதங்களையும் கேட்போர் பிணிக்கும் வண்ணம் தெரிவிக்கக் கூடிய "உயர் சாதனம் மிடறு" பண்ணும், பதம் ஏழும், பல ஓசைத் தமிழவையும் உள் நின்றதோர் சுவையும்தமக்கு இது ஒருங்கே தர வல்லது.

இதனைக்குரல், சாரீரம், மிடறு, கண்டம் எனப் பல் பெயரால் அழைப்பர். இதனையே சிலப்பதிகாரம் (அர / காதை, வரி 26) மிடறு என அழைக்கும்.

இதற்கு உரை கண்ட அடியார்க்கு நல்லார் மிடறு மென்றது - சாரீர வீணையும் என்றவாறு உரை எழுதுவார் சாரீர வீணை என்ற பாட வேறுபாடும் உண்டு.

சிலப்பதிகாரம் வேனிற்காதை (வரி 24) "மதுர கீதம் பாடினன்" மயங்கி என்ற அடி வருவதைக் காண்போம். இதற்கு உரை கண்ட உரையாசிரியர் மிடற்றுக் கருவியாலே முந்துறப்பாடி என்று குறிப்பு எழுதுகின்றார். அதையே அடியார்க்கு நல்லார் கண்டதாலே முந்துற மதுர கீதமாகப் பாடி என்று உரை செய்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீவகசிந்தாமணி ஆசிரியர் தமது 2047 செய்யுளில்

'' தொட்டிமையுடைய வீணைச்
- செவிச்சுவை ''

- திருத்தக்கதேவர் -

என்பர். இதற்கு உரைவகுத்த நச்சினாக்கினியார் ஒற்றுமை உடையதாய '' சாரீர வீணை '' என்று விளக்கம் தருவார்.

மிடற்றுக் கருவியால் எழுப்பப் படும் இசையை நம்முன்னோர்கள் ''மிடற்றுப் பாடல்'' என்று கூறினர்.

இதையே அரங்கேற்று காதையுள் ''பண்ணும், இசையுமாகிய இவற்றைப் பயக்கும் மிடறு ஆகு பெயரால், மிடற்றுப் பாடற்கு ஆயிற்று'' என அடியார்க்கு நல்லார் கூறுவர். (அரங்கே வரி 26 உரை) இதையே இன்று நாம் வாய்ப்பாட்டு என்று கூறுகின்றோம்.

இம்மிடற்றுப் பாடலின் இயக்கத்தை அரும்பத உரைக்காரர் ''மூலாதாரம் தொடங்கிய மூச்சை''க் காலால் கிளப்பிக் கருத்தால் இயக்க வேண்டும். அவ்வியக்கு ஒன்றெனத் தாக்கி இரண்டெனப் பகுத்துப் பண்ணீர்மைகளைப் பிறப்பிக்கப்பட்ட பாடலியலுக்கு அமைந்த மிடற்றுப் பாடல் என்பார்.

மூலாதாரம் தொடங்கிய ''மூச்சை-மூலாதார உறக்கத்தில் இருக்கும் நாதத்தினை சுவாச மூலமாக எழுப்பி பாட வேண்டும் என்பது பொருள்'' (நாத இயக்கம்)

'' காலால் கிளப்பிக் கருத்தால் இயக்கி '' இந்தக் காற்றை வாய்வழி வரும் காற்றாக எழுப்பி - ஒலியை / வேறுபாடுகளை உள்ளத்தால் ஆராய்ந்து பின் கருத்தோடு காற்றை ஒன்றுபடுத்திக் குரல் வளையிற் தாக்க இசை நாத மிடற்று ஒலி'' பிறக்கின்றது. இதையே கருத்தால் கிளப்பல் என்பர்.

குரல் கருவியால் மட்டும் ஒலியை எழுப்ப முடியாது. கருத்துத் தெளிவு மிக அவசியம். ஒரு ஸ்வரத்தை வெளிப்படுத்திடமுன் கருத்து அதன் தெளிவை உணர்த்தி ஆக வேண்டும். அதன் பின்பே மிடறு அதை வெளிப்படுத்த வேண்டும். இதை ஆங்கிலேயர் Throat and Mind is the Head of the Dept of Singing என்று கூறுவர்.

ஒன்றெனத் தாக்கி - இரண்டெனப் பகுத்து - பண்ணீர்மைகளைப் பிறப்பிக்கப்பட்ட பாடலியலுக்கமைந்த மிடற்றுப் பாடல் கருத்தால் எண்ணியபின், மிடற்றின் வழியாகக் கருத்தொடு அதனைத் தாக்கி வெளிவரும். இசை ஒலிகள் ஸ்தாயிகளாகப் பிரிந்து பண் தோற்றம் பெறும் தாயி நிலை (மந்திர, மந்திரம தார) இது மிடற்றிசையின் எல்லை அளவுக்கு மிக வேண்டியது,

இதையே மெலிவு - சமன் - வலிவு என்பாம்.

இதையே சிலப்பதிகாரம் வேனிற் காதை ''குரல் வாய் இனிவாய் கேட்டனள்'' என அரும்பத உரையாற் கூறுவார்.

அடுத்து ''இசை மரபு'' என்ற நூலை யாத்த அறிவனார் குரலை பல்வகைப் படுத்துவர்.

பெருக்குரல் கட்டை நழுவல் விலங்கல்
ஒருக்கி ஒதுங்கல் புரைத்தல் விருப்பிலாக்
காகுளி காக சுரமென்னும் இவ்வெட்டும்
ஆகா எனச் சொன்னார் ஆய்ந்து.

1. பெருக்குரல் - நிறமிலா ஓசை
2. கட்டை - நிற (சுருதி) குறைவானது.
3. நழுவல் — சுருதி நழுவும் இசை
4. விலங்கல் — ஒரு பண் பாட வேறொரு பண் தோன்றல்
5. ஒதுங்கல் — சுரதியை ஒதுக்கிப் பாடல் ( நிறம் )
6. புரத்தல் — ஓரோசையான நிலை பல் ஓசையாய்க் கேட்டல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. காகுளி — பேய் கத்தினால் போல் பாடல்

8. காகசுரம் — காகம் போல் பாடல்

இதையே திருவிளையாடற் புராணம் பின்வருமாறு கூறும். விறகு விற்ற படலம் (30 ஆம் பாடல்)

வெள்ளைக் காகுளி சிழோசை வெடிகுரல் நாசி இன்ன
எள்ளிய எழாலின், குற்றமெறிந்து, நின்றி ரட்டல் எல்லை
தள்ளிய கழிபோக்கோசை இழைத்தல் நெட் டுயிர்ப்புத்தள்ளித்
துள்ளலென்றின்ன பாடற் றொழில் குற்றம் பிறவும் தீர்ந்தே.

எனவும்

வயிறது குழிய வாங்கல் அழுமுகம் காட்டல் வாங்குச்
செயிரறு புருவம் ஏறல் சிரம் நடுகுறல் கண்ணாடல்
பயிரற மிடறு வீங்கல் பையென வாயங்காத் தல்
எயிறது காட்டல் இன்ன உடற் றொழிற் குற்றமென்ப.

(வி. வி. படலம் 37)

" கண்ணிமையா துண்டர் ணதுடியர் கொடி றசையா
பண்ணளவும் வாய்தோன்றா பற்றெறியா'-

என இசை மரபு கூறுவதனையும்

மிடறு வீங்கான் கண்ணிமைத்திடான் எயிறு-வெளிப்படான் புருவ மேணிமிரான்
கொடிறது துடியான் பாடலும் அது கேட் டனைவரும் குதூகல மடைந்தார்.

திருவிளையாடற் புராணம் இசைவாது வென்ற படலம், (செய்யுள் 38). குறிப் பிடுவதையும் இதையே கல்லாடரது கல் லாடத்தில்,

நாசிகர்குளி வெடிகுரல் வெள்ளை
பேசாக் கீழிசை ஒருபுறம் ஒட்டல்
நெட்டுயிர்ப் பெறிதல் எறிந்துரின்றிரட்டல்
ஓசை இழைத்தல் கழிபோக் கென்னப்
பேசுறு குற்றம் அசைவொடுமாற்றி
விரல் நான்கமைந்த அணி குரல் வீங்காது
நான்மறை துள்ளும் வாய் பிளவாது
காட்டி உள்ளுணர்த்தும் நோக்கம் ஆடாது
பிதிர்க் கனல் மணி சூழ் முடி நடுங்காது
வயிறு குழி வாங்கி அழு முகம் காட்டாது
இசைபன்னிய விதியொடு மந்திரம் மத்திமம்
தாரம் இவை மூன்றில் துள்ளல் தூங்கல்
தெள்ளிதின் மெலிதல் கூடிய கானம்.

என்று கல்லாடம் கூறும்.

சீவக சிந்தாமணி, காந்தருவ தத்தையார் இலம்பகத்தில்

கருங்கொடிப் புருவம் ஒரு கயல் நெங்கண் ணும் ஆடா
அருங்கடி மிடறும் விம்மாது அணி மணி எயிறும் தோன்றா.

(செய். 658)

என்ற செய்தியை மிடற்றுப் பாடல் ரீதியாக அறிகின்றோம்.

சங்க இலக்கியத்தின், பின்னரும்

ஓடுங் கொடிய விடப் பாம்பும் பேயும் இசை கேட்டுள்ளுருகி
ஆடும் கருங்கல்லசைந்து விடும் அழுத குழவி குரலடங்கும்
மாடும் இசை கேட்டுழுது வரும் வந்த பசுவும் பால் சுரக்கும்
பாடும் இசை கேட்டுருகாரை என்னென்று ரைப்பேன் பாவலரே.

எனப் பலவாறு மிடற்றிசையின் மேன்மை யையும் இலக்கணத்தையும் அழகுபடக் கூறுவதைக் காண்போம். □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்யம் - சிவம் - சுந்தரம்
## அல்லது சரணகமலாலயம்
### சிவன் - உமை, கந்தன் ஏகதத்துவம் ஸோமஸ்கந்தன்

இயலிசை வாரிதி
ந. வீரமணி ஐயர்,
இணுவை யூர்,
யாழ்ப்பாணம்.

### கணபதி ஸ்துதி

சத்தியம் சிவமும் சேரும்
சுந்தரம் பொலிந்து தோன்ற
சத்துமாய் சிவனுமாகி
சதானந்த நிலையும் ஆகி
நித்தியம் சோமாஸ்கந்த
நிமலனின் காதை கூற
சித்தியின் யானைக் கன்றின்
சேவடி கருத்துள் வைப்பாம்

### இறை வணக்கம்
(கோரஸ்)

ராகம்: திலங் தாளம்: ஆதி திஸ்ரம்

**கண்ணிகள்**

திரைக்குப்பின் பலகுரல்கள்

1. ஸத்தியம் சிவம் சுந்தரம் — ஆத்ம
நித்தியத் திரு மந்திரம்
சித்தியின்பமே வரந்தரும் — ஞான
முத்தியின்பமே நிரந்தரம்.

2. சத்து சித்து சேரும் ஆனந்தம் — வேத
தத்துவங் கடந்த ஞானந்தம்
அத்துவிதங் கடந்த வேதாந்தம் — அவை
சத்தியம் - சிவம் - சுந்தரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஆணவத்தை நீக்கும் சத்தியம் — அது
அகண்ட பரமாத்ம தத்துவம்
காணும் சிவமான பக்குவம் எழில்
காட்டி முத்தி நல்கும் சுந்தரம். ... ...

4. சிவமாகி நின்ற சத்தியம் — ஆனந்தச்
சுந்தரமாய் தோன்றும் நித்தியம்
குஹனாகி அருள்சுரக்கும் ஆலயம் — சிவக்
குஹானந்தச் சரணகமலாலயம்.

*கதையமைப்பு:*

திருக்கைலாசத்தில் சிவன் உமையவளோடு வீற்றிருக்கிறார். அம்மை அப்பனாகிய சிவம் – சக்திக்குப் பாத பூஜை செய்கிறான் முருகன். சத்தியம், சிவம், சுந்தரம் இவற்றின் ஏக தத்துவத்தை உணர்த்தி சிவம், உமா, ஸ்கந்தன் ஆகியவற்றின் ஏக மூர்த்தியுமான சோமாஸ்கந்த மூர்த்தமாகி நிற்கிறான். ஏக மூர்த்தியான சோமாஸ்கந்த மூர்த்தியின் சரணகமலாலயம் அருள்பாலிக்கின்றது.

சக்தியும், சிவமும், முருகனின் பால்ய லீலைகளையும் அவற்றின் தத்துவங்களையும் நினைவுகூர்ந்து முருகனின் ஸத்தியம் சிவம் சுந்தரம் ஆகிய சரணகமலாலயத்தில் அருள்பெற்ற அடியார்களின் சீர்மையையும் நினைவு கூர்ந்து பேரானந்தமடைகின்றனர்.

முருகன் சக்தியின் நவரஸபாவங்களை உணர்த்தும் படி சிவனிடம் வினவ, சிவனைச் சக்தியணைந்த கதையை சிவன் முருகனுக்குக் கூற, சக்தியின் பெருமையை முருகன் போற்றுகிறான்.

சிவத்தின் பஞ்ச கிருத்தியங்களின் தத்துவங்களையும், ஆடிய ஏழுவகைத் தாண்டவங்களையும், ஸ்தலங்களையும் முருகனுக்கு சக்தி வர்ணிக்கிறாள். தாண்டவமாடிய மூலகாரணக் கதைகளையும் விளக்குகிறாள் சக்தி, முருகன் மகிழ்கிறான்.

முருகனின் சௌந்தர்யத்தையும் அவனது ஆறுபடை வீடுகளின் பெருமைகளையும் சிவனும் சக்தியும் புகழ்கின்றனர். ஆறுபடை வீடுகளின் தத்துவங்களையும், முருகனின் அவதார மகிமைகளையும் நினைவுகூர்ந்த சக்தியும் சிவமும் சுந்தரமாகிய முருகனோடு ஏகநாயகனான ஸோமாஸ்கந்த மூர்த்தியாகி பிரபஞ்சத்தில் ஆசிநல்கி அருள்பாலிக்கிறார்கள். ஸத்தியம் – சிவம் – சுந்தரத்தின் ''சரணகமலாலயம்'' முத்தியருளுகிறது.

## சரணகமலாலயம் நாட்டிய நாடகம்

## ஸத்யம் - சிவம் - சுந்தரம்

### காட்சி – 1

*இடம்: திருக்கைலை*

*பாத்திரங்கள்: சிவன், சக்தி, முருகன்*

சிவன் சக்தியுடன் திருக்கைலையில் வீற்றிருக்கிறார். சச்சிதானந்த ஸ்வரூபியாகிய சிவனையும், சக்தியையும் துதித்துப் பாத பூஜை செய்கிறான் முருகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாளம்: ஆதி

ராகம்: ஹம்ஸத்வனி

பல்லவி

முருகன்

சரண கமலம் பணிந்தேன் – அருள்புரிவாய்
அரனவனே உமையே அம்மையப்பன் நினது

அனுபல்லவி

பரமதயாளனே பசுபதியே அன்னை
பார்வதி நாதனே பக்தர் ஸகாயனே.

சரணம்

1. ஸத்தியரூபனே ஸாம்பஸதாசிவமே
சித்தியருள் சோமசுந்தரனே பரனே
தத்திமிதோம் என்று தாண்டவ மாடியே
முத்தி நல்கிடும் பஞ்ச கிருத்திய மூலமூர்த்தி.
2. நவரஸ மனோலய நாரணியே தாயே
புவனபதி மருவும் புவனேஸ்வரி நீயே
தவநிறை சத்திய சிவசுந்தரி மாயே
சிவசக்தி நவசக்தி திரிசக்தியும் நீயே.

ஏகதத்துவத்தைக் கூறி முருகன் சிவசக்தியின் பாத பூஜை செய்தல் சோமாஸ் கந்த மூர்த்த ஏக தத்துவம்.

விருத்தம்

தாளம்: ஆதி

ராகம்: ஆபேரி

முருகன்:

ஒன்றிலே ஒன்றினாலும்
ஒன்றன் மேல் ஒன்றினாலும்
ஒன்றியே ஒன்றாய் ஒன்றும்
ஒன்றனை ஒன்றுவார்க்கு
ஒன்றதே ஒன்றதாய
ஒன்றுமே ஒன்றும் ஒன்றாய்
ஒன்றிய ஒன்றை ஒன்றி
ஒன்றதாய் ஒன்றுஇவனே!

ஸோமாஸ்கந்த மூர்த்த ஏகதத்துவத்தை முருகன் கூறி ஏகமாகி நிற்கிறான் சத்தியம் சிவம் சுந்தரம் ஆகிய சிவம், உமா, ஸ்கந்தன் யாவரும் ஏகமாகி ஸோமாஸ் கந்த மூர்த்தமாகி அருள்பாலித்தல்.

பதம்

ராகம்: ஆபேரி

தாளம்: ஆதி

பல்லவி

ஆனந்தநிலை அருள்வோம் — ஆத்மா
யாரென்ந்த னெனற் கந்தை
யார் நீக்குவார் அவர்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபல்லவி

மோனந்தவமும் ஸத்யம் முழுமை நிறைந்த சிவம்
ஞானந்தவள் சுந்தர சோமாஸ்கந்த சிவ

சரணம்

பரமாத்ம தரிசனம் பாப விமோசனம்
சுரஞான அனுபூதி சொர்க்கமேவுந் தனம்
வரமீனும் அருள்சக்தி வழங்குமனோலயம்
புரமாடும் சிவசக்தி புனிதஞ் குஹமயம்

முடுக்கு

மத்தியகாலம்

ஆணவம் கன்மம் மாயை எனும் மூன்று
அசுரமலங்கள் தனை அகற்றி ஒளி
காணவரும் ஆன்மா கரணமான திரி
கவின் மனம் வாக்குக் காய சுத்தி
பேணவரிய பெரும் பேரானந்த மெனும்
பரமானந்த நிலை பரிந்தருள்வோம்
பூணும் சத்தியமும் பொலியும் சிவம் சுந்தரம்
பொருள் அறிந்து திருவருளை இறைஞ்சுவார்க்கு
காட்சியின் முடிவு

## காட்சி: 2

இடம்: திருக்கோயில்

பாத்திரங்கள்: சக்தி, முருகன்

சக்தி சிவலிங்க பூஜை செய்து நமஸ்கரிக்கிறாள். முருகன் சிவசக்தியை வணங்குகிறான். அவனது பால்ய லீலைகளை நினைவு கூருகிறாள் சக்தி.

சக்தி சிவலிங்க பூஜை செய்தல் – ( பஜன் )

ராகம்: பெஹாக்

சக்தி.

சத்தியலிங்கம் சிவலிங்கம்
சுந்தரலிங்கம் சிவலிங்கம்
முத்தியின்லிங்கம் சிவலிங்கம்
சக்தியின்லிங்கம் சிவலிங்கம்

முருகன் தோன்றல், சக்தி முருகனை வாழ்த்தி, பால்ய லீலைகளை நினைவு கூருதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருத்தம்

**சக்தி:** பெஹாக்

அருவமும் உருவம் ஆகி
அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனியாகி
கருணைகூர் முகங்கள் ஆறும்
கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு
உதித்தனை உலகம் உய்ய

சக்தி முருகனுக்கு திருஷ்டி கழித்து ஆசிர்வதிக்கிறாள். முருகனின் பால்ய லீலைகளை நினைவு கூருதல்.

**ராகம்:** பெஹாக் **தாளம்:** ரூபகம்

### ராகமாலிகை

**சக்தி:**

பிள்ளைப் பிராயத்திலே — முருகா!
புரிந்த குறும்புகளை
எள்ளளவேனும் உந்தன் மனத்தில்
எண்ணி நீ பார்த்ததுண்டோ?

**ராகம்;** சுபபந்துவராளி

சரவணப் பூந்தடத்தில் ஆறு,
மதலையாய் நீ உதித்தாய்!
அரவணைத்தேன் உன்னை — நீயும்
அறுமுகனாய் சிரித்தாய்!

**ராகம்:** ஷண்முகப்பிரியா

மோனச் சிரிப்பழகில் சொக்கியே
முத்தமும் தந்தேனடா!
ஞானத்தின் வேலும் தந்தேன் — சக்திவேல்
தானதை ஏந்தி நின்றாய்!

**ராகம்:**

மாங்கனி வேண்டி நின்றாய்! — உலகை
மாமயில் மீது வந்தாய்!
ஆங்கவன் ஆனைமுகன் பெற்றிட
ஆண்டியாய் வேடம் கொண்டாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம்: நாதநாமக்ரியா

பிரணவப் பொருள் அறியா — அந்தப்
பிரமனைச் சிறையிலிட்டாய்!
அரனவனின் குருவாய் — வந்து
அருளுபதேசம் சொன்னாய்!

ராகம்: மாண்டு

ஆவலாய் ஔவையவள் — தமிழை
ஆனந்தமாய்க் கேட்க
நாவல் கனிப்பழத்தை சுடச்சுட
நல்கித் தமிழ் சுவைத்தாய்!

ராகம்: சிந்துபைரவி

சிந்தூரப் பொட்டழகா — முருகா
சேவல் மயில் அழகா
சுந்தரச் சிவத் தழகா — சத்தியச்
செந்தமிழின் அழகா.

முருகன் சக்தியிடம் சிவபிரான் ஆடிய ஏழுவகைத் தாண்டவங்களையும் அவற்றை ஆடிய ஸ்தலங்களையும், சபைகளையும், பஞ்சகிருத்திய நோக்கங்களையும் கேட்கிறான்.

ராகம்: கல்யாணவசந்தம் தாளம்: ஆதி

தரு

பல்லவி

முருகன்:

எந்தை சிவன் ஆடிய ஏழுவகைத் தாண்டவம்
வந்தவகை ஏதம்மா? — சொல்லம்மா!

அனுபல்லவி

சிந்தையிலே சத்தியம் சிவம் சுந்தரம் எழில்
சிந்தும் தாண்டவம் ஏழும் செப்பிடுவாய் அம்மா.

சரணம்

1. தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றிடும் அங்கியிலே சங்காரம் அருள்
ஊற்றமாம் ஊன்றும் மலர்ப் பதத்தில் உற்றதிரோதம்
நான்ற மலர்ப் பதத்தை நாடுவார்க்கு முத்திநல்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சரண கமலபதம் அரனவனார் தூக்கி
வர மருள ஆடிய புரங்கள் நவில்வாயம்மா
கர மலர் அபயமும் வரத மொடாடியே
பரமனார் சிவபிரான் பஞ்ச கிருத்தம் செய்ய

ஏழுவகைத் தாண்டவங்களையும் சிவபிரான் அவற்றை ஆடிய ஸ்தலங்களையும், சபைகளையும் பஞ்சகிருத்திய தத்துவங்களையும் சக்தி முருகனுக்குக் கூறுகிறாள்.

## ஏழுவகைத் தாண்டவ தத்துவம்

தாளம்: ஆதி

ராகம்: கானடா

### பதம்

### பல்லவி

சக்தி: தாண்டவம் ஆடினான் ஐயன் — தில்லையில்
ஆண்டவன் ஐந்தொழில் பூண்டிட ஆனந்த

### அனுபல்லவி

ஆண்டிடும் பரபஞ்சத்தை ஆக்கவே துடி பாசம்
வேண்டியேந்தி மதுரை வெள்ளிச் சபையில் சந்தியா

### சரணம்

1. திருப்புத்தூர் சிற்சபையில் சிவகாமி யான் மகிழந்து
விருப்புற்று வேண்டிடவே வீதி துரத்திக் கையில்
நெருப்பும் அரவும் ஏந்தி நின்லத்தைக் காத்திடவே
கருப்பொருள் முயலகன்மேல் கால் மிதித்தே கௌரி

2. திருநெல்வேலியிலே திருத்தாம்பர சபை தனிலே
அருமறை ஏத்தும் ஈசன் ஆணவம் கன்மம் மாயை
திரிமலம் நீக்கிக் காக்கும் திருவருள் செய்ய நல்கும்
விரிமலர்ப் பதந்தந்தே தெய்வமுனி

3. துடிபாசம் சூலமொடு துயர்நீக்கும் அபயமுடன்
நடுராத்திரி மயானம் நடுவில்நின்றே ஆடும்
கடுங்கோபத்தோடு ஈசன் காபாலி கணங்களுடன்
நடமாடியே அழிக்கும் நாட்டியமாம் சங்கார

4. குற்றாலச் சித்ரசபை கொடு கொட்டி பாண்டரங்கம்
செற்றார் எலும்பணிந்து சிரித்து முப்புரமெரித்து
நற்குமரைப் பதம்தூக்கி நாமாடி இறையவன்
இற்றாரனியில் மறைத்தல் எய்திடத் திரிபுர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. திருவாலங்காட்டினிலே திகழ் தாம்ரசபையினிலே
பெருமானார் கால்உயர்த்தி பெரிதுவந்தே ஆட
அருமாதவர் மகிழ அன்னை நாணும் நாணிடவே
தரும் ஆடலாம் அருளும் திருவாடலாம் ஊர்த்துவ,

காட்சி: 2 முடிவு

## காட்சி – 3

*இடம்: திருக்கைலைமலை*

*பாத்திரங்கள்: சிவன், முருகன்*

சிவன் நிஷ்டையில் இருக்கிறார். சிவனைத் துதித்து சக்தியின் பெருமையை சிவனிடம் கேட்டுப் பெருமிதம் கொள்கிறான்.

### முருகன் சிவனை வழிபடல்

ஓம் நமச்சிவாய சிவாய நம ஓம்
ஓம் நமச்சிவாய சிவாய நம ஓம்
ஓம் நமச்சிவாய சிவாய நம ஓம்

சக்தியின் பெருமையைக் கூறுமாறு முருகன் சிவனிடம் வினாவுதல்.

### விருத்தம்

*ராகம்: நாட்டைக்குறிஞ்சி*

#### பல்லவி

முருகன்
சக்தியும் சிவமுமாகி சதானந்த ரூபியாகி
நித்தியம் பூரணமாய் நிமலனாய் நின்ற யோகி

#### அநுபல்லவி

சக்தியும் சிவனும் சேர்ந்த சரித்திரம் தன்னை நீவிர்
நற்றிருவருளால் சொல்வீர் நவரஸம் ததும்புமாறே.

*சிவன் நவரஸ நாயகியின் சரிதம் கூறுதல்*

#### சரணம்

சிவன்
சச்சிதானந்தமாய் சக்தியெனை யணைந்து
அர்த்த நாரீச்வரனாய் ஆகினாள் மனம் கனிந்து
சத்துசித்து ஆனந்த தத்துவமாயிணைந்து
நித்திய பூரணியாய் நவரஸ பாவனியாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவரஸ நாயகி

ராகம்: 　　　　　　　　　　　　　　　　　　தாளம்:

### பல்லவி

**சிவன்:**
நவரஸ நாயகி சிவனையணைந்த கதை
மதுரஸ மாவதடா முருகா
ஸ்ருங்கார பீபத்ஸ, பயாநக, ஆச்சர்ய
ஹாஸய, வீர கோப, ஸாந்த, கருணா.

### அனுபல்லவி

சிவமயமாகிய ஸ்ருங்கார ரூபிணி
தவமயமான சக்தி தாரணி பூரணி

### சரணம்

**ஸ்ருங்காரம் ராகம்**
ஸௌந்தர்ய லஹரி ஸாம்பவி ஸ்ருங்காரி
அந்தரி ஸுந்தரி அகிலாண்டேஸ்வரி
மங்கள ரூபிணி மாதங்கி கல்யாணி
சங்கரன் எனை மருவும் ஸ்ருங்காரக் காமாக்ஷி.

**பீபத்ஸம்- ராகம்:**
கயிலைமலையதனில் கடுந்தவம் இயற்றியே
மயலினால் உருகினாள் மகேஸ்வரி பார்வதி
தயவுடன் சிவன் நானோர் வயோதிபன் போல வந்தே
சுயசிவ நிந்தனைச் செயல்கண்டுமே வெறுத்தாள்.

**பயாநகம்: ராகம்**
அரி அயனும் காணா அம்பலவன் நானும்
கரியுரி போர்த்து வெங்கனல் மழுவேந்தியே
அரிய கபாலமாலை அரவும் அணிந்து வந்த
பரிவு கண்டு பார்வதி பயம் மிகவும் அடைந்தாள்.

**ஆச்சர்யம்- ராகம்**
முன்னொரு நாள் தேவரும் முறையிலா அவுணரும்
கன்னலமுதம் வேண்டிக் கடைந்தனர் பாற்கடல்
பன்னகம் உமிழ் நஞ்சைப் பருகினேன் அன்றுதான்
அன்னது கண்டு பெரும் அற்புதமும் கொண்டாள்.

**ஹாஸ்யம்- ராகம்**
மாங்கனி வாங்க நீயும் மயில்மீதிலே செல்ல
ஆங்கவன் ஆனைமுகன் அசைந்து வலம் வந்தே
பூங்கரத்தால் கனி பெற்றிட உமையவள்
தாய்களத்தே ஹாஸ்ஸ நகை புரிந்தாள் கௌரி.

**வீரம்- ராகம்**
பதி சொக்கனெனை அன்று படையுடனே பகைத்து
மதுரை மீனாக்ஷியம்மை மாபெரும் போர் புரிந்தாள்
கதி கலங்கிய சிவசேனை நடுங்கிட
விதி முடித்திடும் சக்தி வீரம் செறிந்து நின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபம்-ராகம்

பகீரதன் செய்திடும் பண்பு மிகும் தவத்தால்
மகேஸ்வரன் நான் கங்கையை மாமுடியில் தரித்தேன்-
மகேஸ்வரி சீறினள் மனம் நொந்து பொங்கினாள்
உமாகோபம் கொண்டு கொடும் உருத்ர காளியானாள்.

சாந்தம்-ராகம்

தஷிணா மூர்த்தியாகிச் சற்குருவாய் நானிருக்க
திக்கெலாம் பஞ்சாக்கினி திகழ அதன் நடுவே
தக்கன் மகளாம் கௌரீ தவமுமிருந்தனளே
சக்தி சிவத்தில் சேர சாந்தம் அடைந்தனளே.

கருணா-ராகம்

தாயினும் அன்புடையாா் தண்ணருளும் தருவாள்
மாயி மகமாயி மாதா மனம் குளிர்வாள்
சேயுன் நலிவுகண்டு செகத்தில் இரங்கிடுவாள்
கௌரி கருணாஹாரி கருணை வடிவுடையாள்.

## நவரஸ பாவனி

### பல்லவி

ராகம் — தாளம்

நவரஸ பாவனி நாரணி சிவசக்தி
நாயகியான கதை நவின்றிடுவேன் முருகா

### அனுபல்லவி

மதுர ஸமான கௌரி மனோஹரி மாலினி
அதிமதுர கல்யாணி அகிலாண்டேஸ்வரி

### சரணம்

சிருங்காரம்-ராகம்

தவமயமான சக்தி தாரின் பூரணி
நவசக்தியாகி வேத ஞானமானாள் ஆரணி
சிவசுந்தரம் சேர்க்கும் ஸத்திய காரணி
சிவமயமாகி நின்றாள் சிருங்கார ரூபிணி.

பீபத்வம் ராகம்:

இமயமலையிலன்று இயற்றினாள் கடுந்தவம்
குமரியவளை ஆளக் கொண்டேன் நான் வயோதிபம்
நிமலன் சிவன் எனையே நிந்தித்தேன் பெரும்பாவம்
விமலி கேட்டே வெறுத்தாள் விழைந்தனள் பீபத்ஸம்.

பயாநகம்-ராகம்

மாலயனும் காணா மகேசன் யான் ஓர்யுகம்
கோலப் பயங்கரமாய் கொண்டேன் புலித்தோலென்தேகம்
ஆல நஞ்சரவோடு சூலக் கபால மென்கரம்
வாலைக்குமரி கண்டு பயந்தனள் பயாநகம்.

அற்புதக்-ராகம்

தேவரும் அசுரரும் தேடியே கற்பகம்
ஆவலாய்க் கடைந்தனர் அமுதுண்ணப் பாற்கடல்
மேருமத்தாகக் கொண்ட வாசுகி கக்கிய
ஆலமுண்டது கண்டு அவள் கொண்டாள் அற்புதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஹஸ்யம்-ராகம்*

மாம்பழம் வேண்டிநீ மயில் மீதிலே சென்றாய்
பூம்பதமசைத்துந்தன் வேங்கரி நடந்து வந்தான்
ஆம்பல் விழியருந்தி அழகு நடை ரசித்தே
சாம்பவி உமை சிரித்தே நகைத்து நின்றாள் ஹஸ்யம்.

*வீரம்-ராகம்*

மதுரையிலே கண்டேன் மீனாக்ஷி அலங்காரம்
புதுமை மிகுந்த நெஞ்சம் புரிந்திடும் அகங்காரம்
கதி கலங்கிட சிவசேனை நடுங்கும் தீரம்
விதி முடித்திடும் சக்தி விளங்கிடும் பெரும் **வீரம்.**

*கோவம்-ராகம்*

கங்கையவள் கொண்டாள் காதல் விரகதாபம்
மங்கை சக்தியின் கோப மனோ நிலைக்கோர் தூபம்
திங்களுடன் பெண்ணைச் சுமப்பதோ என்ற தாபம்
பொங்கினாள் சீறினாள் பொரிந்தனள் கடுங்கோபம்.

*ஸாந்தம்-ராகம்*

ஞான மூர்த்தியாகி நானிருந்தேன் பாந்தம்
மோன உமை தொழுதாள் முடியே செங்காந்தன்
வானவர் போற்றுதவம் விரித்திருந்தாள் கூந்தல்
தீனர்க்கருளும் திகழ்ந்திருந்தாள் ஸாந்தம்.

*கருணை-ராகம்*

சரவணப் பொய்கைதனில் ஷண்கைம்பூ மகவை
கரமலர் கொண்டனைத்தாள் காட்சிதரும் நினைவை
மரகதப் பூங்கொடியாள் மகவை அணைத்த கதை
புளக மெய்திட வைக்கும் புனிதையின் பெருங்கருணை.

*காட்சி: 3 முடிவு*

## காட்சி: 4

அறுபடை வீடுடைய அழகனை முருகனின் பிரதாபங்களைச் சிவனும், சக்தியும் புகழ்ந்து கூற ஞானமூர்த்தியாகிய முருகன் ஸ்த்தியம் – சிவம் - சுந்தரம் என்ற தத்துவத்திற்கு அமைய சோமாஸ்கந்த மூர்த்தியாகி உலகங்கள் க்ஷேமமுற அருள் பாலிக்கிறார். பக்தர்கள் ஸோமாஸ்கந்த மூர்த்தியின் சரணகமலாலயத்தை பாடுகின்றனர்.

**இடம்:** திருக்கோயில்

***பாத்திரங்கள்*:** சக்தி, சிவன், முருகன்

### முருகனின் பிரதாபங்களை சிவனும் சக்தியும் புகழ்ந்து கூறுதல்

*ராகம்:* காம்போதி — *தாளம்:* மிஸ்ரசாபு

*ஸப்தம்*

*சக்தி:*

பிரணவப் பொருள் அறியாப் பிரமனின்
சிரமதை நோகச் செய்த குருபரா
சிவனின் குருவாகிச் *சுவாமிமலை* தனில்
உபதேசம் செய்தாய் குருபரா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன்: அழகு மாம்பழ ஆசையால் புவி
எழிலின் மயிலேறி வலமும் வந்தனை
பழமும் நழுவிடப் பழனிமலையினில்
பண்டாரமுமானாய் பழனியே

சக்தி விருப்புடனே தெய்வ இந்திரன் செல்வி
திருக்குமரி தேவகுஞ்சரியின் கரம்
பிடிக்கவே அன்று திருப்பரங்கிரித்
திருப்பதியில் வந்தாய் மணவாளா.

சிவன் சூரனகந்தையை வேலையெறிந்தன்று
மாயம் மடித்தொரு மயிலிலேறியே
சேவற்கொடியேற்றிச் செந்தூர்ப் பதியின்
வீரமுருகனாய் அமர்வோனே.

சக்தி: மானைத் துரத்தியே மோனக் குறத்தியின்
யோகம் கொண்டு நீ தேனும் தினையுண்டு
தாகந் தீர்ந்திடத் தணிகை மலையினில்
தையல் வள்ளியை அணைவோனே.

சிவன்
சக்தி } ஆடும் மாமயில் அமர்ந்தே தேவியர்
அருகிலணைத்திட அயிலுமெடுத்தேந்தி
பாடல் பெறுதலம் பழமுதிர்சோலை
மேவு குகனே நீ வாழ்கவே.

காட்சி: 4 முடிவு

திரை

திரைக்குப்பின்
பலகுரல்கள் }

சத்தியம் சிவம் சுந்தரம் - ஆத்ம
நித்தியத் திரு மந்திரம்
சித்தியின்பமே - வரந்தரும் - ஞான
முத்தியின்பமே நிரந்தரம்.
சிவமாகி நின்ற சத்தியம் - ஆனந்தச்
சுந்தரமாய் தோன்றும் நித்தியம்
குஹனாகி அருள் சுரக்கும் ஆலயல் சிவக்
குஹானந்தச் சரணகமலாலயம்

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகமயப்படுத்தல் – ஒரு நோக்கு

திருநாவுக்கரசு கமலநாதன், எம். ஏ.
விரிவுரையாளர்,
ஆசிரிய கலாசாலை,
கோப்பாய்.

### சமூகம் என்றால் என்ன?

சமூகம் என்றால் என்ன? என்பதற்குச் சமூகவியலாளர்கள் வரைவிலக்கணங்களில் காணப்படுகின்ற பொதுமைத்தன்மையினை நோக்கின் மக்கள் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொண்டு வாழ்கின்றனர். அவர்களிடையே பல்வேறு பழக்க வழக்கங்களிலும் நடையுடை பாவனைகளிலும் ஒருமைப்பாடுகாணப்படுகிறது. இந்நிலையினை உலகின் பல்வேறு பகுதிகளிலும் அவதானிக்க முடிகின்றது. இவ்வாறு வாழ்கின்ற மக்கள் கூட்டத்தினரை சமூகங்கள் என்று அழைக்கின்றனர் என்ற கருத்து பரவிக் காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது.

சமூகம் என்பது வேறு சமுதாயம் என்பது வேறு என்பதனை இங்கே தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும், சமூகமயமாக்கல் என்று கூறும் போது அது சமூகத்துடன் தொடர்புடையது. சமூகத்தையும் சமுதாயத்தையும் இணைத்து நோக்கக் கூடாது. இது தொடர்பாக சமூகவியலாளர் R. G. T. கொலிங்வூட் கருத்தினை நோக்க வேண்டும். சமுதாயம் Community என்ற ஆங்கிலப்பதாத்தாலும் சமூகம் –Society என்ற ஆங்கிலப்பதத்தாலும் அழைக்கப்படுவதனை அவர் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு குறிப்பிடும் போது சமுதாயம் சற்று விரிந்த பொருளிலே நோக்கப்படுகின்றது. அச்சமுதாயத்திலே வயதிற்சிறுவர்களும் மூத்தவர்களும் குழந்தைகளும் என்ற வகையிலே சகலரும் அடக்கப்படுகின்றனர்.

சமூகம் என்பது அளவில் சிறியது. சமுதாயத்தில் ஒரு சிறிய சமுதாயமாக அல்லது ஒரு சிறிய கூறாக அது அமைகின்றது. இன்னும் சமுதாயத்தின் மிகச்சிறிய கூறாக் குடும்பம் அமைகின்றது. இவ்வாறு கூறும் போது சமூகத்தின் அமைப்பிற்கு விளக்கம் தெளிவாகின்றது. அது குடும்பம் என்பதை விட பெரியதாகவும் சமுதாயம் என்பதை விட சிறியதாகவும் அமைந்துள்ளது. குடும்பத்தையும் சமுதாயத்தையும் இணைக்கின்ற அல்லது குடும்ப அங்கத்தவர்களுக்கு வேண்டும் பயிற்சியை அளித்து சமுதாயத்திற்கு அளிக்கின்ற பயிற்சிக்கூடாகச் சமூகம் அமைகின்றது என்றும் கூறலாம். எனவே அந்நிலையில் சமூகத்தின் முக்கியத்துவத்தை தெரிந்து கொள்ள முடிவதோடு சமூகம் என்றால் என்ன என்பதனையும் உணரமுடிகின்றது சமூகம் என்ற சொல் கருதுவது எதனை என்பதனை விளங்கியபின்னர் அந்தச்சமூக வாழ்வு மனிதனுக்கு அவசியம் தானா என்பதனை நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக வழ்வின் அவசியம்.

மனிதனிடம் இயல்பாகவுள்ள குழுவூக்கம் சமூகம் உருவாகக் காரணமாயிற்று. ஒரு மனிதனுக்குச் சமூக வாழ்வு மிகவும் இன்றியமையாததாகும். சமூக வாழ்வின்றி மனித வாழ்வு இல்லை. மனிதன் தனது தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்காக, தனது பாதுகாப்பினை உறுதி செய்து கொள்வதற்காக இன்றும் தனது பண்பாடு கலை, கலாசாரம் ஆகியவற்றைப் பேணிப் பாதுகாத்து வளர்ப்பதற்காக ஒன்று கூடிச் சமூகமாக வாழவேண்டியவனாகின்றான்.

மனிதன் ஆதிகாலத்தில் இருந்தே கூட்டமாக அல்லது குழுவாக வாழும் இயல்வு கொண்டவனாகவே இருந்திருக்கின்றான். அதனாலேயே அவன் சமூகவியல்புடைய விலங்கு'' ( Man is Social Animal )என்று வர்ணிக்கப்பட்டுள்ளான்.

''பாஸ்கர் கில்பர்ட்'' என்ற சமூகவியலாளர் தமது 'சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள் என்ற நூலிலே பின் வருமாறு கருத்து தெரிவிக்கின்றார்.

''ஆதிகால மனிதன் தனித்து வாழ்ந்தான். தனது தேவைகளைத் தானே பூர்த்தி செய்து கொண்டான். தனது தேவைகளுக்காக அவன் மற்றவர்களை நம்பியிருக்கவுமில்லை, மற்றவர்களிடம் அவன் தங்கியிருக்கவுமில்லை என்ற வாதம் இருந்தாலும், அதற்கு எதிர் வாதமும் இன்று உண்டு.''

அந்த மனிதன் மற்றவர்களிடம்தங்கியோ அல்லது மற்றவர்களை நம்பியோ இல்லாமல் வாழ்ந்தான். அதாவது மற்றவர்களுடன் எதுவித தொடர்பின்றி வாழ்ந்தான். கூட்டமாக வாழவில்லை. சமூக வாழ்வு இல்லை என்றெல்லாம் கூறுவது வெறும் கட்டுக்கதையே அதற்கு வரலாற்று சான்றுகள் நீர்க்கமாக கிடையாது என்று அந்த எதிர்வாதம் கூறுகின்றது.

மனிதன் தனது ஆரம்பகாலத்தொழிலான வேட்டையாட லின் போதும் கூட்டாகவே செயல்பட்டிருக்க வேண்டும். தனித்து தொழில் பட்டிருக்கமுடியாது. அங்குபலர் ஒருமித்து வேலைப்பங்கீட்டோடு தொழில் பட்டிருப்பர் என்பது கில்பர்ட்டின் கருத்தாகும். ஏனெனில் ஆதி மனிதன் வேட்டையாடிய போது அவனிடம் தக்க ஆயுதங்கள் இருந்திருக் முடியாது. ஆயுதங்கள் வசதியற்ற அந்தக்காலத்தில் மனிதன் எவ்வாறு வேட்டைத் தொழிலைச் செய்து இருக்க முடியும்? வெறிகொண்ட அல்லது வீரியமிக்க காட்டுமிருகங்களை எவ்வாறு அவன் தனது உணவுக்காகக் கொன்றிருக்கமுடியும்?

மிருகங்களைக் கலைத்து சுற்றி வளைத்து பொறிவைத்து அடித்து கொன்றே தனது உணவு தேவையினைப் பூர்த்தி செய்து இருக்க முடியும். இக்காரியங்கள் அனைத்தையும் தனி ஒருவனால் செய்து இருக்க முடியுமா? பலரது உதவி அவனுக்கு தேவைப்பட்டிருக்கும். எனவே அக்கால மனிதனும் கூட்டாகச் செயல்பட்டான். குழுவாகவே வாழ்ந்தான். என்று கூறுவதிலே கருத்து செறிவு காணப்படுகின்றது.

ஆகவேதான் மனிதனுக்கு சமூக வாழ்வு என்பது புதியதல்ல, அது ஆதிகாலத்திலேயே காணப்பட்டது என்ற கருத்து இன்று சமூகவியலாளர்களால் பலமாக முன் வைக்கப்படுகின்றது.

ஆனால் மனிதன் மனிதனைக் கண்டு பயந்த நிலையும் ஒன்று இருந்தது என்பதனையும் இங்கு நினைவினில் கொள்ளத் தான் வேண்டும். அவர்கள் பரஸ்பரம் ஒருவரைக் கண்டு ஒருவர் பயந்தார்கள். ஒருவரால் மற்றவருக்கு ஆபத்து ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சினார்கள். காட்டு மிருகங்களிடம் இருந்தும் அறியப்படாத அன்னியர்களிடம் இருந்தும் தமக்கு பாதுகாப்பு வேண்டும் என்பதனையும் உணர்ந்தார்கள் அதற்கு சிறந்தவழியாக ஒன்றுசேர்ந்தார்கள். குழுவாக வாழ்ந்தார்கள். அது சமூகமாயிற்று. எனவே தான் ஷாம்டே, ஸ்பென்சர் போன்ற சமூகவியலாளர்கள் மனித வாழ்க்கையில் குழு வாழ்க்கை



249993

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிக்க முடியாதது'' என்று கருத்து தெரிவிக்கின்றனர்.

எனவே மனிதனுக்கு சமூக வாழ்வு அவசியமானது என்பதனையும் அது ஆதி காலத்தில் இருந்தே தொடர்வதால் அதன் அவசியத்தையும் உணர்ந்து கொள்ள வேண்டும். ஒரு மனிதனுக்குச் சமூக வாழ்வு இன்றியமையாதது. என்பதனைக் கண்டோம். இங்கு இன்னுமொரு விடயத்தினையும் கருத்திற் கொள்ள வேண்டும். ஒருவன் சமூகத்தில் அங்கத்தவனாக மட்டும் இருந்தால் போதாது. அவன் சமூகத்தோடு இணைந்து வாழ்பவனாகவும் இருத்தல் வேண்டும். சமூகத்தின் உயர்வுக்காக உழைப்பவனாக இருத்தல் வேண்டும். சமூகத்தின் ஏனைய அங்கத்தவர்களின் இன்ப, துன்பங்களில் கலந்து கொள்பவனாக இருத்தல் வேண்டும். தான் சேர்ந்த சமூகத்தின் கலை. கலாச்சாரம், பண்பாடு மேம்பாடடைய வேண்டுவன செய்பவனாக இருத்தல் வேண்டும். சமூக அங்கத்தவர்களையும் புரிந்து கொள்பவனாக இருத்தல் வேண்டும். மொத்தத்தில் அவனிடம் மனிதாபிமானம் இருத்தல் வேண்டும். இவ்வளவு செயற்பாடுகளும் சமூகமயப்படுத்தப்பட்ட மனிதனிடம் மாத்திரமே எதிர்பார்க்க முடியும்.

எனவே மனிதனுக்கு சமூக வாழ்வு எவ்வளவு அவசியமாகின்றதோ அந்த அளவுக்கு சமூகமயப்படுத்தப்பட்டிருக்க வேண்டியதும் அவசியமாகும். அப்போதுதான் அவனால் சமூகத்திற்கும், சமூகத்தால் அவனுக்கும் பயன் கிட்டும். சமூகம் ஒன்று நிலைபெறுவதும், நீண்டு நிலைப்பதும் அதன் அங்கத்தவர்கள் திறமையிலேயே தங்கியுள்ளது. சமூகத்தில் புதிதாக சேர்பவர்களுக்கும் அத்திறமை அவசியமாகின்றது. அந்தத் திறமையான அங்கத்தவர்களை சமூகமயமாக்கல் மூலமே உருவாக்கலாம். எனவே சமூகமயமாதல் என்பது சமூக வாழ்விலே மிக வேண்டப்படுவது ஒன்றாகவே அமைகின்றது.

## சமூகமயமாதல் என்றால் என்ன?

சமூகமயமாதல் என்று கூறும்போது ஒருவன் தான் வாழுகின்ற சமூகத்திலே உள்ள ஏனைய அங்கத்தவர்களுடன் பொருந்தி வாழ்தல் அல்லது சமூகத்தின் நெறிமுறைகள், பழக்க வழக்கங்கள், மரபுகள் போன்றவற்றுடன் இசைவாக்கம் பெறுதல் அல்லது தன்னுடைய திறன்கள், செயற்பாடுகள் போன்றவற்றைச் சமூகத்திற்கு உரித்தாக்குதல் அல்லது ஏதேனும் ஒரு சமூகத்தில் மக்களுடைய தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய ஆற்றல்களை அச்சமூகத்தின் அங்கத்தவரிடையே விருத்தி செய்தல் என்றும் கூறலாம்.

## சமூகமயமாக்கல் பற்றிய வரைவிலக்கணங்கள் சில

1. ''ஒரு தனி மனிதன் தனது சுற்றாடலின் சமூக சூழலுக்கேற்ப இசைவாக்கம் அடைதல்'' என்று எமில் டர்கைம் கூறுகின்றார்.

2. ''சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கத்தினராவதற்கு செய்ய வேண்டியவை, செய்யக்கூடாதவை, அறிந்து கொள்ள வேண்டியவை என்பதை தெரிந்து செயற்படுதலே சமூகமயமாக்கல்'', என்று உறவின் ஹேஸ்ட், நியூகாற்டன் ஆகியோர் கூறுகின்றனர்.

இவ் வரைவிலக்கணங்களிலிருந்து தெரிவது சமூகம் சரியென ஏற்றுக் கொண்ட இலக்குகளையும்' ஒழுக்கவியற் தொகுதிகளையும் தமது இளைய தலைமுறையினர்க்கு உரித்தாக்கல் சமூகமயமாதல் என்பதாகும்.

மேலும் இவ் வரைவிலக்கணங்கள் மூலம் சமூகவாழ்வில் ஒருவன் சமூகமயமாதலின் அவசியத்தினையும் உணர்ந்து கொள்ள முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூகமயமாதல் நிகழக்கூடிய சந்தர்ப்பங்கள்

இது ஒரு தொடர்ச்சியான தொழிற்பாடாகும். குறித்த ஒரு வயதெல்லைக்குள் மாத்திரமன்றி ஒரு மனிதனுடைய பிறப்பு முதல் இறப்பு வரை நடைபெறுகின்ற ஆயுட்கால தொழிற்பாடு இதுவாகும். அம் மனிதன் சமூகத்தில் ஒவ்வொரு செயற்பாட்டுடனும் தொடர்புடையவன் என்பதால் அவன் தொடர்பு கொள்ளுகின்ற சமூக செயற்பாடுகள் ஒவ்வொன்றிலும் சமூகமயமாக்கல் நடைபெறுகின்றது. குழந்தைப் பருவத்திலே இருந்த இடத்திலேயே மலம் கழிக்கும் குழந்தை மலசலகூடத்தை பயன்படுத்தக் கற்பதும், வீட்டிலும், பாடசாலையிலும் எழுத வாசிக்க பேசப்பழகிய குழந்தை தன் ஒத்த வயதினருடன் சேருகின்றபோது அவர்களின் மொழிக் கோலத்தைக் கற்பதும், உற்சாகமாக வேலை செய்து பழகியவர் ஓய்வு பெற்று பின் அவ் வாழ்க்கைக்கு பழகுவதும் சமூகமயமாக்கல் செயற்பாடாகவே அமைகின்றது.

எனவே சமூகமயமாக்கல் தொழிற்பாடு ஆயுட்கால செயற்பாடாக அமைவதோடு, தனியொருவர் தனது வாழ்நாளிலே சமூகச் செயற்பாடுகள் பற்றி விளக்கம் பெறுதல் அல்லது அவ் விளக்கத்தினைக் பெறாது விடல் இந்த வகையிலே நடைமுறைகளுடன் பொருத்தப்பாடு காணல் அல்லது பொருத்தப்பாடு அடையாது விடல் ஆகிய எல்லாத் தொழிற்பாடுகளும் சமூகமயமாக்கலில் அடங்குமென்று கருதப்படுகின்றது. மேலும் இந்த சமூகமயமாக்கல் நனவு நிலையிலும் தோன்றலாம். அது போன்று நனவிலி நிலையிலும் தோன்றலாம். மனிதன் சமூகமயமாதலை தன் முயற்சியினாலும் அடையலாம். சமூகத்தில் வாழ்வதன் மூலம் முயற்சியின்றிப் பெற்றுக் கொண்ட அனுபவத்தின் மூலமும் அடையலாம்.

இந்த வகையிலே சமூகமயமாதல் ஒரு தனியாளின் முயற்சியினாலோ அல்லது ஒரு நிறுவனத்தின் முயற்சியினாலோ அல்லது தொடர்பு சாதனங்களின் செல்வாக்காலோ ஒருவனுடைய வாழ்வில் பல்வேறு நிலைகளிலும் ஏற்படலாம். இவ்வாறு ஏற்படும் போது சமூகமயமாக்கல் கருவிகள் அல்லது சாதனங்கள் அந்தச் செயற்பாட்டினைத் திறம்படச் செய்வதற்கு துணைநிற்கின்றன.

## சமூகமயமாக்கல் சாதனங்கள்

ஒருவனை சமூகத்திற்குரியவனாக ஆக்குவதிலே பெரும்பங்கு கொள்கின்ற செயற்பாடுகளான பாராட்டு வழங்கல், அன்பு காட்டல், பாதுகாப்பு வழங்கல், பரிசு அளித்தல், தண்டனை கொடுத்தல் என்பவற்றையெல்லாம் வழங்கக்கூடிய எல்லாச் சமூகக் குழுக்களும் சமூகமயமாக்கல் சாதனங்களே.

இங்கு கூறப்பட்ட சமூகக் குழுக்கள் பற்றி சிந்திப்பதற்கு முன்னர் சமூகமயமாக்கல் செயற்பாட்டினை வழங்குகின்ற பரிசு தண்டனை முறைகளை நோக்கின் இவை சமூக இசைவாக்கத்திற்கு உதவுகின்ற நுண்முறைகளாகக் காணப்படுகின்றது. பரிசு மூலம் நன்நடத்தையை விருத்தி செய்யவும் அல்லது ஊக்குவிக்கவும் தண்டனை மூலம் தீய நடத்தையை நீக்கவும் அல்லது குறைக்கவும் முடியும். பெற்றோரின் முத்தம், ஆசிரியரின் பாராட்டு போன்றவை பொருட் செலவின்றி ஒருவனை சமூகமயமாக்குதலுக்கு உதவுகின்றன. இதே போல் தண்டனை வழங்குவதையும் பல வழிகளில் செய்யலாம். சில வேளைகளில் நாம் வழங்கும் தண்டனை பிள்ளைகளை தவறான வழியில் இட்டுச் சென்று விடலாம். எனவே கவனியாது விடல் அல்லது உபசாரம் ஒன்றுக்கு அழையாது விடல் போன்றன தீய நடத்தை உள்ளவர்களை சமூகமயமாக்குதலுக்குப் பயன்படக்கூடிய செயல்முறையாகும். ஆனால் இவ் வகைச் செயற்பாட்டில் அவதானம் தேவையென்பதை ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.

இவை போலவே ஒருவனுக்குச் சமூக அங்கத்தவர்களால் பாதுகாப்பு வழங்கல், அன்பு காட்டல் எனப்படுகின்ற செயன்முறைகளும் அவனைச் சமூகத்தோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தப்பாடு காணச் செய்வதன் மூலம் சமூகமயமாதல் இலகுவில் நடைபெறச்செய் கின்றன.

அடுத்து இச் செயற்பாடுகளை நிறை வேற்றவல்ல சமூகக் குழுக்கள் பற்றிச் சிந் திப்போம்.

*சமூகக் குழுக்கள்*

மக்கள் குழுக்களாக இணையும் போது சமூகம் தோன்றினாலும் பின்னர் அந்த சமூக உறுப்பினர் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ளும் முறை, அவர்களின் நோக்கக்கள். தேவைகள் என்பவற்றைப் பொறுத்து பின்வரும் மூன்று குழுக்களா கப் பிரிந்து செயற்படுகின்றனர்.

1. ஆதார அல்லது முதல்நிலைக் குழுக் கள் (Prlmary Groups)
2. நடுநிலைக் குழுக்கள் (Intermediate Groups)
3. வழிநிலைக் குழுக்கள் (Secondary Groups)

*ஆதாரக் குழு*
*(Primary Groups)*

காலத்தால் முற்பட்ட எளிய தொடர்பு முறைகளை கொண்டதாக இக் குழு அமை கின்றது. பொதுவான பிரச்சினையை விவா திப்பதற்காகவோ அல்லது பொதுவான ஒரு செயலில் ஈடுபடுவதற்காகவோ இணை கின்ற குழுக்கள் ஆதாரக் குழுக்கள் ஆகும். இங்கு சிறிய எண்ணிக்கையினரே அடங்கு வர். இவர்களுடைய தொடர்பு நேரடியாக நடைபெறும்.

இந்த ஆதாரக் குழுவினுள் குடும்பம் (Family) உற்றார் உறவினரை உள்ளடக் கிய விரிந்த குடும்பம் (Wider family) கூட்டாளிக் குழு (Play Group or Gang) அயலவர்கள் (Neibourhood) ஆகியோர் அடங்குவர்.

ஒருவன் தனது வாழ்வில் பெரும் பகு தியினை இந்தக் குழுவினுள் கழிப்பதால் ஒரு குழந்தைக்கு சமூக உணர்வு அளிக் கின்ற ஆரம்ப நிலையம் ஆகவும் இக்குழுவே அமைகின்றது. மனிதப் பண்புகள் எனப் படுகின்ற சமூகமயமாக்குதலுக்கு வேண்டிய அடிபடை இக் குழு நிலையிலேயே பெறப் படுகின்றது. நான் என்ற உணர்வுடன் (I feeling) வளரும் குழந்தை நாம் என்ற உணர்வு (We feeling) பெற்று சமூக இயல் பினன் ஆக்குவது இக் குழு நிலையிலேயே ஆகும். எனவே சமூகமயமாதலுக்கு வேண் டிய அடிப்படை இங்கு கிடைப்பதால் குடும்பத்தினர். உறவினர். அயலவர்கள், நண்பர்தள், அதற்கு வேண்டிய பயிற்சி யினை அளிக்க வேண்டும்.

*நடுநிலைக்குழுக்கள்*
*(Intermediate Groups)*

ஆதாரக்குழு நிலையிலிருந்து விரிந்த தாக அங்கத்தவர் தொகையும் கூடியதாக இக்குழுக்கள் அமைகின்றன. இங்கு அங்கத் தவரிடை சில போது நேரடித்தொடர்பும் சில போது மறைமுகத் தொடர்பும் ஏற் படும். மறைமுகத் தொடர்பு என்று கூறும் போது அவர்கள் தங்களுடைய மரபு, சூழ்நிலை, நூல்கள், சஞ்சிகைகள், போன்ற வற்றின் மூலம் தொடர்பு கொள் வதைக் குறிக்கின்றது. ஒரு சமூகத்திலே காணப்படுகின்து. பாடசாலைகள். சமய நிலையங்கள், சமூக நிறுவனங்கள் போன் றன இத்தகைய நடுநிலைக்குழுக்களாகும்.

*வழிநிலைக்குழுக்கள்*

முற்கூறிய இரண்டு குழுக்களையும் விட மிகவும் பரந்த விரிந்த குழு வழிநிலைக் குழுவாகும். இங்கு காணப்படும் தொடர்பு முழுவதும் மறைமுகமானதே. இவ் வகைக் குழுக்கள் ஏராளமான அங்கத்தவர்களைத் தம்முள் அடக்கியவையாகக் காணப்படும்.

இக் குழுக்களின் அங்கத்தவர்கள் நூல் கள். வானொலி, திரைப்படம், நாடகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைக்காட்சி போன்ற மறைமுக ஊட கங்கள் வழியாகத் தொடர்பு கொள்கின் றனர்.

அரசு, நாடு போன்றவையும் பரந்த கலாசார நிலையங்களும் இந்தக்குழுக்களுக்கு உதாரணங்களாகும்.

மேற் சொன்ன மூன்று குழுக்களையும் தவிர இன்னுமொரு குழு நிலையும் மனித னுடைய வாழ்வில் உண்டென சமூகவியல் அறிஞர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அது கடை நிலைக்குழுக்களாகும். (Tertiary - Groups) இவை நிலையற்ற குழுக்கள். ஒழுங்காக அமைக்கப்படாதவை. அவற் றின் அங்கத்துவம் தொகை அளவில் வேறு பாடுகளை கொண்டவை. இத்தகைய குழுக் களுக்கு உதாரணமாக பிரயாணிகள் கூட் டத்தினரை அல்ல பொழுது போக்கு நிகழ்ச்சிகளை பார்வையிடும் கூட்டத்தின ரைக் குறிப்பிடலாம். அவர்களுடைய குறிப் பிட்ட அச்செயற்பாட்டின் போது அசம் பாவிதம் அல்லது விபத்து போன்றவை ஏற்படின் இக்கடைநிலைக்குழுக்கள் ஆதா ரக்குழுக்களாக மாறிவிடக்கூடியவை.

இந்த நான்கு குழுக்களும் தனித்தனி இயங்குபவை அல்லது ஏதோ ஒரு வகை யிலே அவற்றிடையே தொடர்பு காணப் படும். அவை ஒவ்வொன்றிலும் மனிதன் ஏதோ ஒரு வகையிலே தொடர்பு கொண் டவனாகவும் காணப்படுவான்.

இந்த சமூகக்குழுக்கள் தான் சமூகம யமாக்கற் சாதனங்களாகி மனிதனை சமூக யமாக்கற் செயற்பாட்டின் மூலம் சமூகப் பொருத்தப்பாட்டினை காணச்செய்கின் றன.

இவ்வாறான சமூகப் பொருத்தப்பாடு கண்ட உறுப்பினர்களைக் கொண்ட மனித குழு வாழ்க்கை முறை நின்றும் எழுந்த வையே மனிதப்பண்பாடு கலை. கலா சாரம் போன்றவை எனவே மனித பண் பாடு கலை. கலாச்சாரம் விருத்தியுற சமூ கமயமாக்கலின் பங்களிப்பு அவசியமாகின் றது.

□

---

**துணை நின்றவை**


1. கல்வி உளவியலும் கல்விச் சமூகவியலும் — எஸ். சந்தானம்
2. கல்வியின் சமூகவியல் அடிப்படை — தேசிய கல்வி நிறுவனம்
3. கல்வியியல் — எஸ். முத்துலிங்கம்
4. சமூகவியல் அறிவியல் கற்பிக்கும் முறை - பி. எஸ். அரங்கநாதன்
5. சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள் — பாஸ்கர் கில்பர்ட்
6. So cial fcundation of Education — *Cole S. Brempack*
7. Sociology of Education — *Wilbur B. Brookover, Edscl L. Erikson*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசையின்பம்

சங்கீதபூஷணம் திரு. சு. கணபதிப்பிள்ளை,
உதவிக் கல்விப்பணிப்பாளர்

முத்தமிழில் நடுநாயகமா விளங்குவது இசை. முத்தமிழிலும் இணைந்திருப்பது இசை. இசைதல், ஒத்துப் போதல், சம் மதித்தல் எள இசையையும் மகிழ்தல், சந்தோஷப்படல் என இன்பத்தையும் கொள்ளலாம். இசைவிக்கும் தன்மையுடையது என்பதற்கு இராவணன், அநுமான் போன்றோரது சாமகான வரலாறு விளக்கும். சரஸ்வதி தேவியின் கையில் வீணை, கண்ணன் கையில் வேய்ங்குழல் தும்புரு நாரதர் தோத்திர மனைசத்தல் போன்றவையும் இசைஇன்பத்தை வெளிப் படுத்துபவையே பெரியபுராணத்தில் ஆனாயநாயனாரும்; திருவிளையாடல் புராணத் தில் பாணபத்திரனும் இசையின்பத்தை நுகர்ந்தமையை நாமறிவோம்.

திருவள்ளுவரின் குழலினிது, யாழினிது என்பதும், செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம் என்பதும், தேவார முதலிகளான சம்பந்தரின் பண் ஒன்றை இசைபாடும், இன்னிசை வீணையர், யாழினர், நாவுக் கரசரின் மாசில் வீணையும், தமிழோடிசை பாடல் மறந்தறியேன், சுந்தரரின் ஏழிசையாய் இசைப்பயனாய், புகலூர் பாடுமின புலவர்காள், மணிவாசகரின் என்புருகிப்பாடுகின்றிலை, பாடவேண்டும் போற்றுகின்றனையே, அருணகிரிநாதரின் நாதவிந்து கலாதி நமோ நம, பாடும் பணியே பணியாய், குமரகுருபரரின் சகலகலாவல்லி மாலையில் வரும் பாடல்களும் இன்னும் பலமகனீயர்களின் கூற்றுக்களிலிருந்தும் பெறற்கரிய மானிடப் பிறவியைப் பெற்ற நாம் இசையின்பத்தின் பெருமையை அறி கின்றோம்.

அரிது அரிது மானிடராதல் அரிதென்றார் ஔவைப் பிராட்டி. ஆரோக்கியமுள்ள உடல், உள அமைப்புடைய மனிதர் இசையை வெளிப்படுத்தவும் இரசிக்கவும் வல்லமையுடையவராகிறார். மனித உடலமைப்பில் ஐம்பொறிகளின் வாயிலாக புலன்களின் வெளிப்பாடு நவரஸமாக வெளிப் படுவதை உணரலாம். இதற்கு முக்கியமாக வெளிப்படுத்தவும் இசையின்பத்தை அனுபவிக்கவும் விளங்குவது எமது உடல் உறுப்புக்களான குரல், விரல், செவி ஆகியவையே.

மனித வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரை ஒவ்வொரு நிகழ்விலும் தாலாட்டு முதல் ஒப்பாரிவரை இசை இன்பம் காணப் படுகின்றது. சமய சமூக வைபவங்களில் இசையின் பங்களிப்பு இல்லாமலில்லை. இவ்வாறான இசையை வைதிகஇசை, லௌகீக இசை என இருபிரிவாக முன்னோர் வகுத்துள்ளனர். இவ்விசையை குரல்மூலம் அதாவது மிடற்றிசையாக வெளிப்படுத்தும் போது இயல், இசை, நாடகமென்ற முத் தமிழின் பங்கு கூடிய அளவு காணப்படுகிறது. பேச்சு, கதைசொல்லல், கவியரங்கு பிரசங்கம் போன்றவை உரைகளாக வரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் உச்சரிப்பு, சொற்தெளிவு, பொருளுக்கேற்ற ஒலி தொனி சாகித்திய விளக்கம் ஆகியவற்றில் குரலின் முக்கியத்துவமும், சாஸ்திரிய, கிராமிய, மெல்லிசைகளாகவும், பின்னணி இசையாக வெளிவரும் போது குரலுக்கு ( உறுதுணையாக ) சாகித்திய அமைப்புக்கேற்ப சுருதி, லயத்துடன் கூடிய இசையமைப்பை வெளிப்படுத்த இசைக்கருவிகளான பாட்டு வாத்தியம் எனப்படும். வீணை, வயலின், புல்லாங்குழல், ஆர்மோனியம். நாதஸ்வரம் போன்றவையும், லயவாத்தியம் எனப்படும் தவில், மிருதங்கம், தபேலா, டோலக்கி, உடுக்கு போன்றவையும் அவ்வவ் வகையான இசை வெளிப்பாட்டுக்கு உறுதுணையாக அமைகின்றது. மேலும் நடனம் அல்லது நாட்டியத்துக்கும், கூத்து, மற்றும் நாடகத்திற்கு குரலும், விரலும் இசையைப் பிரதானமாகவும், பின்னணியாகவும் இசைக்க உதவுகின்றது. இவ்விசையின் ஒன்றிணைப்பு நிகழ்ச்சிகளைத் தெளிவாகவும், கவனமாகவும் பார்க்கவும், கேட்கவும், விளங்கிக் கொள்ளவும் இசையின்பத்தை உணர்ந்து ரசிக்கவும் ஏதுவாக இருக்கின்றது. மேற்கூறிய அனைத்தையும் உள்ளடக்குவதாலேயே இசையை கீதம், வாத்தியம், நிருத்தியம் என்கின்றனர் இயலிசை வல்லோர்.

தாது என்பது இசை, வர்ணமெட்டு, ஸ்வரம் என்றும், மாது சாகித்தியம் என்றும் அழைக்கப்படுகிறது. தாது இல்லாமல் மாதுவும், மாது இல்லாமல் தாதுவும் இல்லை. இசைப்பாடல்களிற் தோன்றும் தாதுவும், மாதுவும் ஒரே கற்குதயத்திலிருந்து சுரப்பவை, மகனீயர்களது பாடல்கள் ஜீவத்துவம் பெறுவது இக்காரணங்களினாலேயே. ஒரு கவிஞர் பாடலை ஆக்குவதுடன் இசையையும் ஏற்றவாறு அமைக்கிறார். இதற்கு இசை, சாகித்தியம் ஆகியவற்றில் மிகுந்த ஆற்றல் தேவைப்படுகிறது. இவ்வாறு ஆக்கியவர்களை இயலிசைப்புலவர்கள் அல்லது வாக்கேயகாரர் என்கிறோம். இவ்வாறானவர்கள் இறையருள் பெற்ற அருளாளர்கள். ஒரு கவிஞர் பாடலை ஆக்க, இன்னொரு இசைக் கலைஞர் வர்ணமெட்டு அமைப்பது இக்காலத்தில் ஒரு வரலாறாகிவிட்டது. கவிஞருக்கோ இசை நுணுக்கம் தெரியாது. கலைஞருக்கோ, இசையமைப்பாளருக்கோ யாப்பு அணிகள் தெரியாது. ஆனாலும் இவ்விருவரது அன்னியோன்னிய ஒத்துழைப்பு தரமான இசையின்பத்தை நல்கும் பாடல்களாக மிளிருகிறது. இதற்குக்காரணம் கவிஞர், இசையமைப்பாளர், அணி செய்கலைஞர்கள் ஆகியோரது உணர்வுகள் ஒன்றியிருப்பதே. ஆகவே இசையின்பத்திற்கு மூலகாரணம் உணர்வுகள் பாடலுடனும், இசையுடனும் அடிநாதமாக மிளிருகிறது என்பது புலனாகிறது. இத்தகைய உணர்வுகளின் சேர்க்கையான இசையின்பத்தைப் பாடலின் பொருட்சுவையுடன் பண்டிதர் முதல் பாமரன் வரை ரஸித்து அனுபவிக்கிறான் என்றால் அதற்கு மூலகாரணமாக விளங்குவது இசைஇன்பத்தை அனுபவிக்கும் ரஸிகத்தன்மை என்பது வெள்ளிடைமலை. இசையின்பம் பற்றிப் பின்வருவோர் கருத்துக்கள் சில

1. ''பாட்டுக்கொரு புலவன் பாரதியடா அவன் பாட்டைப் பண்ணோடொருவன் பாடினானடா கேட்டுக் கிறு கிறுத்துப் போனேனேயடா அந்தக் கிறுக்கிலுழறு மொழி பொறுப்பாயடா''

2. ''துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ இன்பம் சேர்க்கமாட்டாயா.

— பாரதிதாசன் —

1. பாட்டுத்திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திடவேண்டும்''

2. கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு''

3. கேட்கும் ஒலியெல்லாம் நந்தலாலா உன்கீதம் இசைக்குதடா நந்தலாலா

—பாரதியார்—

திருவள்ளுவர் பஞ்சப்புலன்களுள் செவிச் செல்வமே தலையாய இன்பம் என இயம்புகிறார். செவியுணர்வு இன்பத்தில் மேலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னதென்பது தெளிவு. இசையின்பம் செவி
யின்பத்தின் தலை. கர்ணகடூரமான தொனி
களை அபஸ்வரங்களை செவி ஏற்காது.
இனிய இசையின்பத்தை செவியானது
உணர்வுகளாக்கி, உணர்வுகளைஇன்பமாக்கி
கானாமிர்தமாகத் தித்திக்க வைக்கிறது.

பஞ்ச புலன்களும் இசையின்பத்தை
நமக்கு உணர்ந்து ரசிப்பதற்கு உந்து சாத
னங்களாக அமைகிறது. இந்தப்புலன்கள்
தத்துவம் வாய்ந்தவை. இவை அத்தனை
யையும் ஒடுங்குவதற்கு இசை ஒரு சாதன
மாக அமைகிறது. பஞ்சப்புலன்களை ஒடுக்
கினால் இறைவனையடையும் வழி மிகுந்த
சுலபமாகிறது என்பது ஆன்றோர் வாக்கு.
இறைவனோடு ஆன்மாவை இசைவிக்கும்
அரும்பணி பெற்ற இசை இறைவனுடன்
இணைவதற்கு ஏற்ற சாதனமாக விளங்கு
மென்பதற்கு ஆலயங்களில் நடைபெறும்
ஒவ்வொரு நிகழ்விலும் காணப்படுவதிலி
ருந்து எங்ஙனும் வியாபித்திருக்கின்றதென்
பதை உணர்வதுதான் இசை. இறைவன்
ஆன்மா பஞ்சபுலன்கள் மூலம் ஒருங்கி
சைந்து அனுபவிப்பதனை இசை இன்பத்
தின் முதிர்ச்சி எனலாம். □

---

நம் கடமையைச் செய்வோம். நடப்பது நடக்கட்டும் என்று இருப்போம். அதுவே அறிவுக்கு அழகு; கடமையைச் செய்வதற்கே நமக்கு உரிமை உண்டு. பயன்பற்றிக் கவலைப்படுவது அறியாமை.

— மு. வ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் நிலையங்களின் பாவனைக்கு

# கல்வி வளர்ச்சியில் ஆரம்ப ஆசிரியர்களின் பங்கு

திருமதி வி. முருகையா,
ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர்,
யாழ். மாவட்டம்,

''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப
இவ்விரண்டும்
கண்ணென்ப வாழுமுயிர்க்கு''

இது வள்ளுவப் பெருந்தகையின் வாக்கு. மாணவர்தம் அறிவுக்கண்களைத் திறந்து எழுத்தை அறிவிக்கும் இறைவனாக இருப்பவர் ஆரம்பக்கல்வி ஆசிரியர். மாணவருடைய கல்வி வளர்ச்சிக்கு அச்சாணியாக திகழ்பவர்கள் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள்தான் என்பதை எவராலும் மறக்கவோ மறுக்கவோ முடியாது. பாடசாலையில் பிள்ளைகளை அரவணைக்கும் தாயாகவும், அறிவூட்டும் தந்தையாகவும் விளையாட்டுத் தோழனாகவும், அறிவுரை கூறும் ஆசானாகவும் நம்பிக்கைக்குரியவராக விளங்குபவர் ஆசிரியர்கள் பெற்ற தாய் தந்தையரிடம் பெற்றுக் கொள்ளாத நம்பிக்கையையும், மதிப்பையும் பிள்ளை ஆசிரியரிடம் பெற்றுக் கொள்கின்றது. எமது அனுபவ வாயிலாக இதை நாம் அறியலாம்.

ஆரம்பக்கல்வி கற்பிக்கும் ஒரு ஆசிரியர் தமது பணியில் சிறப்புற வேண்டுமாயின், அவரிடம் பொறுமையும் நிதானமும் இருக்க வேண்டியது அவசியம். சிறார்களை அன்புடன் அணைத்து ஆதரவு தருபவர்களாக ஆசிரியர்கள் இருத்தல் வேண்டும். ஆசிரியர் தான் கற்பிக்கப்போகும் விடயம் பற்றி தெளிந்த அறிவும், காலத்துக்குக்காலம் கற்பித்தலில் அறிமுகப்படுத்தப்படும் புதிய முறைகளைப்பற்றிய பூரணமான விளக்கங்களும் உள்ளவராக இருத்தல் வேண்டும். தமது கற்பித்தலுக்கு உரியதாகிய கைந்நூல்கள், வழிகாட்டிகள், பாடத்திட்டங்கள் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும். கற்றலுக்கு ஏற்ற சூழலை உருவாக்கி, கற்பித்தலை கவர்ச்சியாக்கி கற்பிக்கும் விடயத்தை சரியான முறையில் பிள்ளைகள் மனதில் பதிய வைத்தல் வேண்டும். பிள்ளைகள் முறையாக விடயத்தை கிரகித்துள்ளார்களா என்பதை மதிப்பீடு செய்தல் பற்றி நன்கு அறிந்த ஒருவரே கற்பித்தலை திறமையாக செய்யக் கூடியவர்.

கல்வியில் முன்னேற்றமடைந்துள்ள பல நாடுகளிலே ஆரம்பக் கல்விக்கே முதலிடம் அளிக்கப்பட்டிருப்பதைக் காணலாம், அந்நாடுகளில் முன் பாடசாலைகளிலும் (மொன்றிசூரி) ஆரம்பபாடசாலைகளிலும் கல்விபுகட்டும் ஆசிரியர்கள் பட்டதாரிகளாகவும், பட்டப்பின் படிப்புப் படித்தவர்களாகவும் இருக்கின்றார்கள் என்பதை நாம் நன்கு உணரக்கூடியதாக இருக்கின்றது பாலர் வகுப்புகள் தானே என ஆரம்ப வகுப்புகள் புறக்கணிக்கப்படுவதில்லை. அந்நாடுகளில் பல்கலைக்கழகங்களில் கல்வித் தகைமைபெறுவதற்கு ஆரம்பக்கல்வியே அத்திபாரமாக உள்ளது என்பதை அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கு உணர்ந்து உள்ளமையே காரணமாகும்.

இத்தகைய பொறுப்பும், பெருமையும் உள்ள ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் கற்பிக்கும் போது எதிர்நோக்கும் பிரச்சனைகள் அதிகம் உள்ளன.

1. பாடசாலை பௌதிகச் சூழல்

2. பாடசாலை வளங்கள்

3. பாடசாலை ஆளணியினர்

4. ஆசிரியரின் கற்பித்தல் வழிமுறைகள்

5. அதிபர். மாணவர், பெற்றோர், சமூகத்திடம் இருந்து பெற்றுக் கொள்ளும் ஒத்துழைப்பு

என்பன போன்ற காரணிகள் சிறந்த கற்பித்தலை உருவாக்க உதவுகின்றன. மேற் குறிப்பிட்டவைகள் சரிவர அமையாத விடத்து ஆசிரியர்கள் பல பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். வசதிகள் உள்ள பாடசாலைகளில் கற்பிற்கும் ஆசிரியர்களுக்கு சகல வளங்களும் கிடைக்கலாம். பெரும்பாலான ஆரம்ப பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பல பிரச்சனைகள் தோன்றலாம். பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு பலரின் ஒத்துழைப்புத் தேவைப்படும். ஆனால் ஆரம்பக் கல்வி ஆசிரியர் தனக்குத் தானே தலைவனாகித் தீர்க்க வேண்டிய பிரச்சனை ஒன்றுண்டு. அதுதான் கற்பித்தல் வழிமுறைகள். காலத்திற்குக் காலம் கற்பிக்கும் முறைகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. பாடத்திட்டங்களில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஆரம்பகல்வி அபிவிருத்தியடைய ஆசிரியர்கள் மாற்றங்களை அறிந்து வைத்திருப்பது அவசியம் அவ்வாறு மாற்றமடைந்த பாடத்திட்டங்களிலே ஒன்றுதான் ஆரம்பக்கல்விக்குரிய ஒன்றிணைந்த பாடத்திட்டமாகும். பாடங்களை மையமாக வைத்து கற்பித்த பாடத்திட்டங்களை மாற்றி மாணவர்களை மையமாக வைத்து திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் தனித்தன்மை உளவியல்புகள் என்பவற்றை கவனத்திலிருத்தி நடைமுறைப்படுத்தப்படுவதே ஒன்றிணைப்புத்திட்டமாகும். பாடங்களை விளங்கியோ, விளங்காமலோ மனனம் செய்து பரீட்சைக்கு ஆயத்தம் செய்யும் நிலைமையை மாணவரிடம் இருந்து மாற்றி மாணவர்கள் வீட்டிலும் பாடசாலையிலும் சூழலிலும் நிகழும் நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு தாம் அறிந்தவற்றிலிருந்து அறியாதவற்றைக் கற்கவும், ஆராய்வு ,ஊக்கத்தை தூண்டி ஐம்புலன்கள் வாயிலாகச் செயற்பாடுகளில் ஈடுபட்டு கற்கவும் இத்திட்டம் பயன்படுத்தப்படுகின்றது. ஒன்றிணைப்பு திட்டத்தினால் மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்கு வளர்ச்சியடைய ஏதுவாகின்றது.

1972 ஆம் ஆண்டு இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கல்வித்திட்டம், 1972, 1973 ஆம ஆண்டுகளில் 500 பாடசாலைகளில் (முன்னோடியா) பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. 1974 ஆம் ஆண்டு தொடக்கம் சகல பாடசாலைகளிலும் ஐந்தாம் தரம் (ஆறாம் ஆண்டு) வரை அமுல்நடத்தப்பட்டது. பின்னர் தரங்கள் என்ற பெயருடன் இருந்த வகுப்புக்கள் ஆண்டுகள் எனப் பெயர் சூட்டப்பட்டு, பாடத்திட்டங்களிலும் சில மாற்றங்கள் ஏற்பட்டன. ஆரம்பக்கல்வி ஐந்து ஆண்டுகள் மட்டும் என வரையறுக்கப்பட்டது. ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 3 வரை கீழ் ஆரம்பப் பிரிவு எனவும், ஆண்டு 4 தொடக்கம் ஆண்டு 5 வரை மேல் ஆரம்ப பிரிவு எனவும் பிரிக்கப்பட்டது. 1984 ஆம் ஆண்டில் ஆண்டு 1, ஆண்டு 4 இலும், 1985 ஆம் ஆண்டில் ஆண்டு 2, ஆண்டு 5 இலும், 1986 ஆம் ஆண்டில் ஆண்டு 3 இலும் புதிய ஒன்றிணைப்பு பாடத்திட்டம் அமுல் செய்யப்பட்டது. இத்திட்டம் சகல பாடசாலைகளிலும் நடைமுறைப்பட்டன.

1992 ஆம் ஆண்டில் ஆண்டு ஒன்றுக்கான பாடத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டு, 1993 ஆம் ஆண்டு தொடக்கம் சகல பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்தப்படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. 1994 ஆம் ஆண்டில், ஆண்டு இரண்டிற்கான பாடத்திட்டம் அமுல்நடத்தப்படவிருக்கின்றது.

பல ஆண்டுகளாக கையாளப்பட்டு வந்த ஒன்றிணைந்த பாடத்திட்டம் ஏன் மாற்றியமைக்கப்படுகின்றது என்பதை ஆசிரியர்கள் சிந்திக்கவேண்டும். எதிர்பார்த்த வெற்றியை இத்திட்டம் அளிக்கவில்லை என்பதை உணரக் கூடியதாக இருக்கிறது. ஒன்றிணைப்பு என்றால் என்ன என்பது பல ஆரம்ப ஆசிரியர்களுக்கு பூரணமாக விளங்கவில்லை. ஒன்றிணைப்புச் சம்பந்தமான நடைமுறைகளை பயன்படுத்தாத காரணத்தினால் தான் பின்னடைவு ஏற்பட்டது. மாணவர்களை பல குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவும் வெவ்வேறு செயற்பாடுகளை செய்து கற்க வேண்டும். இக்குழுக்கள், ஆசிரியர் மேற்பார்வையில் ஒரு குழுவும், குழுக்களின் தலைவர்களின் மேற்பார்வையில் ஏனையவும் இயங்க வேண்டும். சுழற்சி முறையில் ஆசிரியர் மேற்பார்வை செய்ய வேண்டும்.

குழுவாக மாணவர் செயற்பட வேண்டும் என்று கருதப்பட்ட வேளையில் அவர்களை மேசைகதிரைகளில் அமர்ந்து இருந்தால் போதும் என்ற நிலையில் முன்னரைப்போல கற்பிக்கப்பட்டது காணக்கூடியதாக இருந்தது. பிள்ளைகள் செயற்பட போதிய உபகரணங்களோ, சரியான முறையில் வழிப்படுத்தப்படவோ இல்லை. ஒன்றிணைந்த பாடத்திட்டம் நெகிழ்ச்சி தன்மையுள்ளது என்பதை பலர் அறியவில்லை. இதனால் பூரணநிலை எய்தும் தன்மை குறைந்து காணப்பட்டது. பாடவிடயங்களை அறிந்து கொள்வதிலோ, கிரகிப்பதிலோ தொய்வு ஏற்பட்டது. குழுவில் முன்னேற்றமுள்ள மாணவரை பார்த்து எழுதி சரி வாங்குவதில் தான் பிள்ளைகள் ஈடுபட்டனர். சுயமாக சிந்திக்கவோ, செயற்பாடுகளில் ஈடுபடவோ அவர்களால் முடியவில்லை. ஒரு சில பாடசாலைகள் ஒன்றிணைந்த பாடத்திட்டத்தை திறம்படச் செய்து நல்ல பெறுபேறுகளை பெற்றிருக்கிறார்கள். இப்பாடசாலை ஆசிரியர்கள் ஒன்றிணைப்புப் பாடத்திட்டத்தில் பூரண விளக்கம் பெற்றுள்ளார்கள் என்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் குழு முறையாகவும், வகுப்பு முறையாகவும், மாணவர்களின் நன்மை கருதி தனித்தனியாகவும் கற்பித்தலைச் செய்ய வேண்டும் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். ஆசிரியர்கள் கற்பிக்கும் ஆண்டுகளுக்குரிய கைநூல்களை நன்கு வாசித்து விளங்கிக் கொள்ள வேண்டும். மாணவர்களுக்கு பரிச்சயமான சுற்றாடல் அலகுகளைக் கொண்டு மற்றைய பாட அலகுகளை ஒருங்கிணைக்க வேண்டும். ஒருங்கிணைத்து அட்டவணையை நன்முறையில் அமைத்து விரிவான பாடத்திட்டத்தை தயாரித்தல் வேண்டும். பாடத் திட்டத்தை தயாரிக்கும்போது பாடசாலை நடைபெறும் நாட்களை நிர்ணயித்து, கற்பிக்க வேண்டிய உத்தேசத்திகதியையும் எழுதுதல் வேண்டும். கற்பித்து முடிந்தபின்னர் அத்திகதியை பாடப்பதிவில் பதிதல் வேண்டும்.

ஒரு பாட அலகை கற்பிக்க எண்ணும் போது பின்வரும் விபரங்களை ஆசிரியர் சிந்தித்து செயல் படவேண்டும். அவ்வலகை கற்பிக்கும் குறிக்கோள் என்ன? அதை எவ்வாறு மாணவர்களுக்கு முன் வைக்கலாம்?' அதற்கேற்ற வழிமுறைகள் எவை? மாணவர் எவ்வாறு செயல்படுவர்? கையாள வேண்டிய கட்புல, செவிப்புல சாதனங்கள் எவை? ஆசிரியர் கற்பித்து முடிந்தவுடன், அவ்விடயங்களை மாணவர்கள் கிரகித்து கொண்டார்கள். இதை எப்படியான மதிப்பீடு செய்யலாம் என்பதை முற்கூட்டியே அறிந்திருத்தல் வேண்டும். கற்பித்தலுக்கான கட்புல, செவிப்புல சாதனங்களைப் பாடங்களுக்கு ஏற்றதாகவும், உபகரணங்களிலும், ஒப்படை அட்டைகளிலும் எழுதப்படும் எழுத்துக்கள் உறுப்பாகவும், அப்பழுக்கற்ற முறையிலும் எழுதப்பட வேண்டும்.

எமது நாட்டின் கல்வி மதிப்பீட்டின் படி ஆராய்ந்தால் ஐந்தாம் ஆண்டு முடிய பெரும்பாலான மாணவர்கள் கல்வியை நிறுத்திக் கொள்ளுகின்றார்கள். பாடசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லைகளில் கையில் புத்தகத்தை பிடித்துக் கொண்டு வாசிக்க முடியாமல் சில மாண வர்களை காணலாம். இருபத்தைந்து (25) சதமும் பதினேழு (17) சதமும் எத்தனை சதம் எனக் கேட்டால் கைவிரல்களை யும் கால்விரல்களையும் சேர்த்தெண்ணும் நிலையிலும் மாணவர்கள் இருப்பதை காணக் கூடியதாக இருக்கின்றது. இந்த நிலையில் மாணவர்கள் பாட சாலை விட்டு வெளியேறினால் அவர் களுடைய வாழ்க்கை எப்படி அமையும் என்பதை சிந்திக்க வேண்டும். சரியான முறையில் எழுத, வாசிக்க, விளங்கிக் கொள்ள முடியாமலும், வாழ்க்கைக்கு தேவையான கணித அறிவை பெறமுடியா மலும் இருந்தால் எப்படி நற்பிரசையாக இருக்க முடியும்? இக்குறைபாடுகளுக்கு பலகாரணிகள் இருக்கலாம். வீட்டுச்சூழல், ஒழுங்கற்றவரவு, நோய், வறுமை ஆசிரியரின் கவனிப்பின்மை என்பனவும் காரணமாக இருக்கலாம். காரணிகள் பல இருந்தாலும் இலச்சிய ஆரம்பக்கல்வி ஆசிரியர் இவற் றிற்கான பரிகாரங்களை கண்டுபிடித்து குறைகளைத்தீர்க்க முடியும்.

தற்போது மாணவர்கள் கல்வி பயிலும் சூழ்நிலை எத்தகைய துர்ப்பாக்கிய நிலை என்பது யாவருக்கும் தெரியும். அத்துன்பங் களை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கின் றோம். இந்நிலையிலுங் கூட நிலை தள ராது, கல்வியில் ஊக்கம் காட்டி மாணவர் கள் முன்னேறி வருகின்றனர். இதற்கு மாணவர் மட்டுமல்ல ஆசிரியர்களின் தள ராத தியாக உணர்சியுமே காரணம் என லாம்.

ஆரம்பக்கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு சகல வகுதிகளையும் சேர்ந்த ஆசிரியர்களும், அதிபர்களும் ஒன் றிணைந்த பாடத்திட்டத்தில் உள்ள விட யங்களில் கூடிய அறிவைப்பெற வேண்டும். 1990 ஆம் ஆண்டு ஆரம்ப கல்வி ஆசிரிய ஆலோசகர்களுக்கான கருத்தரங்கில் வடக்கு கிழக்கு மாகாண கல்வி கலாச்சார விளையாட்டுத்துறை அமைச்சின் ஆரம்ப கல்விப்பிரிவினரின் கூற்றை நினைவு கூர்ந்து ஆசிரியர்கள் கடமைகளைச் செவ் வனே செய்யவேண்டும்.

"ஆரம்பக் கல்வி ஆனது நீங்கள் நோக்கு வது போன்று
அவ்வளவு கஷ்டமான தொன்று மல்ல
ஆனால்' நீங்கள் நினைப்பது போன்று
அவ்வளவு இலகுவான தொன்று மல்ல"

□

---

அறிவாற்றலை ஒருவன் மேசைமேல் உள் விளக்கைப் போல், தனக்கு மட்டும் பயன்படுத்திக் கொள்ளாமல், ஒரு கலங்கரை விளக்கத்தைப் போல் பிறருக்கும் பயனளிக்கச் செய்யவேண்டும்.

— பீச்சர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளர் பேனாவிலிருந்து...

செ. இலகுநாதன்
செயலாளர்,
பாராட்டுவிழாச் சபை.

மக்கள் சேவையே மகேசன் சேவை என பெரியவர்கள் கூறி இருக்கின்றார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் தம்மாலியன்ற பொது சேவைகளைப் பலர் செய்துவந்துள்ளாராயினும் ஒருங்கிணைந்த பல்வேறு சேவைகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டதுடன் இணுவில் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஆதார சுருதியாக விளங்கிய, இணுவில் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபராக இருந்து ஆற்றிய தொண்டிற்காக, இணுவில் மக்கள் திரு. செல்லத்துரை சோதிப்பெருமாள் அவர்களை நிட்சயம் பாராட்டி கௌரவிக்க கடமைப்பட்டவர்களாவர்.

சேவை நலம் பாராட்டுவிழா போன்று வேறு பல பாராட்டு நிகழ்ச்சிகள் வைத்திருந்தாலும், இணுவைமக்கள் யாபேரும் சேர்ந்து அவருக்கு நன்றிக்கடன் செலுத்தக் கடமைப்பட்டவர்கள் என்பதினாலேயே இவ் விழாவினை நாம் நடத்த முன் வந்தோம்.

இணுவில் அ. மி க. பாடசாலைக்கு திரு. செ. சோதிப்பெருமாள் அவர்கள் அதிபராய் வந்ததும் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில், விளையாட்டுத் துறையில், இயல், இசை, நாடகத்துறையில் துரித முன்னேற்றம் ஏற்பட்டது. ஆயிரத்துக்கும் மேற்பட்டபிள்ளைகள் ஆரம்பபாடசாலையில் கல்வி பயிலும் நிலை ஏற்பட்டது. இதனைச் சுட்டிக்காட்டி பாராளுமன்ற உறுப்பினரதும், கல்விப்பகுதியினரதும் உதவியைப்பெற்று பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் துணையோடு தன் பொருளையும் ஈந்து பாடசாலை பௌதிகத் தேவைகளை ஓரளவு பூர்த்தி செய்தார். அதன் பயன் இன்று மாடிக்கட்டிடம் ஒன்று அழகுற காட்சியளிக்கின்றது.

''வரப்புயர நீருயரும் நீருயர நெல்லுயரும், நெல் உயர குடியுயரும் ...... .....'' என்று ஔவை மூதாட்டியின் வாக்குக்கொப்ப இக்கல்வி நிறுவனமும், இணுவில் சைவமகாஜன மகா வித்தியாலயமும் இணைந்து வளர்ந்து இணுவில் மத்திய கல்லூரி என்ற பெயருடன் விளங்குவதற்கு மூலகாரணமாயிருந்த பெருமைக்குரியவராக விளங்குபவர் திரு. செ. சோதிப்பெருமாள் அவர்களே.

பாடசாலை அபிவிருத்தியில், கல்வி அபிவிருத்தியில், விளையாட்டுத்துறை கலை, இலக்கிய அபிவிருத்தியில் அயராது உழைத்ததுடன், இணுவிலில் உள்ள பல பொதுஸ்தாபனங்களையும் இணைத்துக்கொண்டே பொது சேவையிலும் பங்குபற்றினார். மெய்வல்லுர் போட்டி இசை, நடன, நாடகப் போட்டிகளிலும் வட்டார மாவட்ட, அகில இலங்கை ரீதியில் ஓர் உன்னத இடத்தையும் ஏற்படுத்திக் கொடுத்த பெருமைக்குரியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விழாவினை எவ்வித தனிப்பட்ட நோக்கமுமின்றி ஓர் அதிபர் பாடசாலைக்கும், எமது ஊர் முன்னேற்றத்திற்கும், சிறப்புக்கும் ஆற்றிய தன்னலமற்ற சேவையைக் கௌரவிக்கும் முகமாகவே எடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இவர் காட்டிய வழியைப் பின்பற்றும் எமது கல்லூரிகளின் அதிபர்களுக்கும் எம் மக்கள் நிட்சயம் கௌரவம் அளிப்பார்கள் என்பதற்கு இவ் விழா எடுத்துக்காட்டாக அமையும் என்பதை கூறிவைக்க விரும்புகின்றேன்.

பாராட்டு விழாவினை சிறப்பாக நடாத்த உதவியவர்களுக்கும், மலர் வெளியிட உதவியவர்களுக்கும், விழாவில் பங்குபற்றி ஆசியுரை, பாராட்டுரை வழங்கியவர்களுக்கும், முக்கியமாக வடமாநில கல்விப் பணிப்பாளர் உயர்திரு. இரா. சுந்தரலிங்கம் அவர்களுக்கும், கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்திய கல்லூரிகளுக்கும், விழாவினை சிறப்பித்தவர்களுக்கும் விழாச் சபையின் சார்பில் நன்றி கூறுகின்றேன்.

' நன்றி '

---

நமது அன்புக்கு உரியவர் என்று கருதி உதவி செய்தவர்களை உதவி பெற்றவர் பலவகையாலும் புறஞ் சொல்லிப் பழித்துத் திரிவது, தாம் உண்டு மகிழ்ந்திருந்த வீட்டுக்குத் தாமே தீ வைத்தது போன்றதாகும்.

— பழமொழி — 34



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. செ. சோதிப்பெருமாள் அவர்களின் சேவை விபரம்

1949 இணுவில் சைவமகாஜன வித்தியாசாலை – சிரேட்ட பாடசாலை தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி

1950 – 1952 யா / உரும்பராய் இந்துக்கல்லூரி – ஆங்கில மொழிமூலக் கல்வி

1953 யாழ். கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலையில் – கூட்டுறவுப்பயிற்சி ( கணக்குப்பதிவியலில் அதிவிசேட சித்தி )

1954 வலிகாமம் வடக்கு ஐக்கியபண்டகசாலை சமாஜம் – எழுதுவினையர்

1955 – 1956 யா / திருநெல்வேலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை – ஆசிரியர் பயிற்சி

1957 . 03 . 01 – 1957 . 06 . 30 வரை - யா / கோயிலாக்கண்டி மகாலக்சுமி வித்தியாசாலை – ஆசிரியர்

1957. 07. 01 – 1958. 10. 30 வரை - யா / அச்சுவேலி தோப்பு அருள்நந்தி வித்தியாசாலை ஆசிரியர்

1958. 11. 01 – 1963. 06. 30 வரை - யா / இணுவில் சைவப்பிரகாச மகா வித்தியாலயம் ஆசிரியர்

1963. 07. 01 – 1965. 12. 31 வரை - கொ / தெமட்டக்கொடை அ. தமிழ் வித்தியாலயம் ஆசிரியர்

1966. 01. 01 – 1971. 07. 31 வரை - யா / இணுவில் சைவமகாஜன மகா வித்தியாலயம் ஆசிரியர்

1968 ஆசிரியர் ஆலோசகர் தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி.

1971. 08. 01 – 1974. 01. 31 வரை - அதிபர் தரம் 2 பதவி உயர்ச்சி
கொ / மருதானை தொண்டர் தமிழ் வித்தியாலயம்

1974. 02. 01 – 1977. 08. 25 வரை / அதிபர் தரம் 2
யா / உடுவில் அ. மி. த. க. பாடசாலை

1977. 08. 26 – 1989. 05. 30 வரை / அதிபர் தரம் 2
யா / இணுவில் அ. மி. த. க. பாடசாலை

1980 சமாதான நீதிபதி பதவி

1989. 06. 01 – 1990. 05. 14 வரை - அதிபர் தரம் 1 க்கு பதவி உயர்ச்சி
யா / இணுவில் அ. மி. த. க. பாடசாலை

1990. 05. 15 – 1991. 08. 18 வரை - அதிபர் தரம் – 1.
யா / இணுவில் மத்திய கல்லூரி
( யா / இணுவில் சைவமகாஜன மகா வித்தியாலயம் யா / இணுவில் அ. மி. த. க. பாடசாலை – ஒன்றிணைக்கப்பட்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோதி பெரும் ஆள்!

கவிஞர் சோ. பத்மநாதன்

சோதிப்பெருமானா? சோதி பெரும் ஆளா?
சாதனைகள் நூறு புரிந்தாலும் சத்தமின்றி
ஏதும் அறியாதவர் போல் இருக்கின்ற
சோதிப் பெருமானா? சோதி பெரும் ஆளா?

வாயில் சுருட்டு; மலருகின்ற புன்னகை;
தூய வெள்ளை ஆடை; சுறுசுறுப்பு; துள்ளுநடை;
ஓயா தியற்றும் பொதுப்பணிகள் ஊடு இழையும்
நேயம்; எதிலும் ஒழுங்கு; நியமம்: தன்
பள்ளி தவச்சாலை யாகப் பரிணமிக்க
உள்ளத் துறவோ டிருக்கும் ஒருமுனிவன்
வாழுகிற வீட்டைப் பணிமனையாய் மாற்றி, எந்த
நாளும் உழைக்கின்ற நல்ல தொரு மனிதன்!
சோதிப் பெருமானா? சோதி பெரும் ஆளா?

போரால்நம் வாழ்வு பொசுங்கி நிலத்தடியின்
வேரோடு கோலியள்ளி வீசப் படுகையிலும்
கல்விப் பயிர்க்குக் கருத்தோடு நீர்பாய்ச்சும்
நல்ல பணிசெய்ய முன்னிற்கும் நாயகனாம்
சோதிப் பெருமானா? சோதி பெரும் ஆளே!!

—

ARCHIVES

உண்மையான ஆசிரியனை உலகக் கஷ்டம் ஏதும் அடக்கிவிட முடியாது. ஓய்ந்துபோன ஆசிரியனை எவ்வித அதிர்ஷ்டமும் தூக்கி நிறுத்திவிடமுடியாது.

— நாரிஸ்

UNIVERSITY OF JAFFNA
Library
SRI LANKA
University of Jaffna
249999
Library
249999
ARCHIVES
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org